SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:4, Issue:06, Pages:56
JANUARY-2025, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜனவரி 2025,
விலை ரூ.20/-



வைகுண்ட ஏகாதசி
10-01-2025

வேங்கடாசல நிலையம் வைகுண்ட புரவாசம்
பங்கஜ நேத்ரம் பரம பவித்ரம் சங்க சக்ரதர சின்மய ரூபம்...

- புரந்தரதாசர்



2024, நவம்பர் 28 முதல் டிசம்பர் 06 வரை நடைபெற்ற திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் கார்த்திகை பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள். பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு ஆந்திர மாநில அரசு சார்பில் தாயாருக்கு பட்டு வஸ்த்திரங்களை சமர்ப்பித்த ஆ.மா. இந்து சமய அற நிலையத்துறை அமைச்சர் திரு. ஆ. ராமநாராயண ரெட்டி அவர்கள் உடன் தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத்தலைவர், தி.தி.தே. செயலாட்சித்தலைவர் இணைச் செயலாட்சித் தலைவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்













ந ஜாயதே ம்ரியதே வா கத$_3$ாசிந்-
நாயம் பூ$_4$த்வா ப$_4$விதா வா ந பூ$_4$ய:।
அஜோ நித்ய: சாச்வதோऽயம் புராணோ
ந ஹந்யதே ஹந்யமாநே சரீரே ॥

இந்த ஆத்மா ஒருபொழுதும் பிறப்பதும் இல்லை; அன்றியும் இறப்பதும் இல்லை. அவ்வாறே முன் உண்டாகிப் பிறகு ஏற்படக் கூடியது என்பதும் இல்லை. ஏனெனில், இந்த ஆத்மா பிறப்பற்றவன்; நித்தியமானவன்; எக்காலத்திலும் உள்ளவன்; பழமையானவன். உடல் கொல்லப்படும்போதும் இந்த ஆத்மா கொல்லப்படுவதில்லை.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–20*

ஸ்ரீமந் க்ருபாஜலநிதே க்ருதஸர்வலோக
ஸர்வஜ்ஞ சக்த நதவத்ஸல ஸர்வசேஷிந் ।
ஸ்வாமிந் ஸூசீல ஸூலபாச்ரித பாரிஜாத
ஸ்ரீவேங்கடேச சரணௌ சரணம் ப்ரபத்யே ॥

திருமகளைப் பிரியாதவனே!
கருணைக் கடலே! புவனமெல்லாம்
படைத்தவனே! அனைத்தும்
அறிந்தவனே! ஆற்றல் மிக்கவனே!
போற்றுவோர் உள்ளத்தில் அன்பு
கொண்டவனே! பக்தர்களுக்கு
அன்போடு குற்றேவல் புரிபவனே!
தலைவனே! தாழ்ந்தாரோடும்
இரண்டறக் கலப்பவனே! அடைவதற்கு
எளியவனே! அனைத்தும் அளிக்கும்
பாரிஜாத மலரைப் போன்றவனே!
திருவேங்கடமுடையானே! உன்
திருவடிகளைத் தஞ்சம் என்று
அடைகிறேன்.

*– ஸ்ரீவேங்கடேஸ்வர பிரபத்தி*





# ஸ்ரீவேங்கடேஸ்வரா அன்னப்பிரசாத அறக்கட்டளை

## (ஒரு நாள் நன்கொடை திட்டம்)

அன்னம் பரப்ரஹ்ம ஸ்வரூபம் – உணவு தெய்வ வடிவம். எல்லா தானங்களில் சிறந்தது அன்ன தானம். இதை நன்கு அறிந்த தி.தி.தே. திருமலை, திருப்பதி, திருச்சானூர் போன்ற இடங்களில் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னப்பிரசாதம் வழங்கி வருகிறது. அன்னதானத்திற்கு ஒரு நாள் நன்கொடை திட்டம் குறித்து அனைவரும் அறிந்ததே. “ஒரு நாள் நன்கொடை திட்டத்திற்கு” ஒரு நாளுக்கு ரூ. 44 இலட்சம் செலவு ஆகிறது. அச்செலவானது கீழ்க்காணும் வகையில் வகைப்படுத்தப்படுள்ளது.

1) காலை சிற்றுண்டி - ரூ.10 இலட்சம்
2) மதிய உணவு - ரூ.17 இலட்சம்
3) இரவு உணவு - ரூ.17 இலட்சம்
4) ஒரு நாள் முழுதும் - ரூ.44 இலட்சம்

மின்னஞ்சல் :
cdmc.ttd@tirumala.org;
dyeodonarcell@tirumala.org

0877-2263001
24/7
0877-2263472
(அலுவலக நேரம்)

மேற்குறிப்பிட்ட திட்டத்திற்கு நன்கொடை வழங்கும் நன்கொடையாளர்களுக்கு கீழ்க்காணும் வசதிகள் வழங்கப்படும்.
(நன்கொடையாளர் : தனிப்பட்ட நபர்/நிறுவனங்கள்/நிறுமங்கள்/அறக்கட்டளைகள்)

1. ரூ.25.00 இலட்சம் வழங்கும் நன்கொடையாளர்களுக்கு அளிக்கப்படும் வசதிகளைப்போல ஒரு நாள் நன்கொடை திட்டத்திற்கும் அளிக்கப்படும்.
2. ரூ.10.00 இலட்சம் வழங்கும் நன்கொடையாளர்களுக்கு அளிக்கப்படும் வசதிகளைப்போல காலை சிற்றுண்டி, மதிய உணவு, இரவு உணவு ஆகியவற்றிற்கு தனித்து நன்கொடை அளிப்பவர்களுக்கு அளிக்கப்படும்.

மேற்குறிப்பிட்டவற்றோடு கீழ்க்காணும் முன்னுரிமை அளிக்கப்படும்.

**மேலும் தகவல்களுக்கு :**
துணைச்செயலாட்சித் தலைவர்
(நன்கொடையாளர் மையம்),
ஆதிசேஷு ரெஸ்ட் ஹவுஸ்,
தி.தி.தே., திருமலை.

அ) நன்கொடையாளர் பெயர் திருமலையிலுள்ள அன்ன தானக்கூடத்தில்(எம்.டி.வி.ஏ.சி.) காட்சி ஆக்கப்படும்.

ஆ) நன்கொடையாளர் விரும்பும் ஏதாவது ஒரு நாள் மட்டும் அன்னதானக்கூடத்தில் (எம்.டி.வி.ஏ.சி., திருமலை) உணவு பரிமாறுவதற்கு அனுமதிக்கப்படுவர்.





இந்தத் திட்டத்தின் கீழ் பெறப்படும் நன்கொடைகள் அனைத்தும் இதர நன்கொடைகளைப்போன்று கார்பஸ் நன்கொடையாகவே கருதப்படும்.

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

## சமய மாத இதழ்

ஜனவரி 2025

மலர் 04
இதழ் 06



## உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| திருப்பாவை கேட்கும் திருவேங்கடவன் -பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி. | 7 |
| திருமழிசையாழ்வார் போற்றும் அரங்கத்தானும் வேங்கடத்தானும் - திரு. ஏ.கே.கோபி, கள்ளக்குறிச்சி. | 10 |
| வாரணமாயிரம் அருளிய கோதை - திருமதி எஸ். வைஷ்ணவி, திருப்பதி. | 13 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: அஷ்டாவக்கிரர் - திரு.எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். | 16 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 18 |
| திருமலையில் வைகுண்ட ஏகாதசி - திருமதி மைதிலி சம்பத், செகந்திராபாத். | 20 |
| பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் - திரு.எம்.எஸ். சுகுமார், சென்னை. | 22 |
| கோவிந்தனுடன் கோதை - திருமதி எஸ்.திருவேணி, நங்கைநல்லூர். | 24 |
| அகம் மகிழ்விக்கும் மகர சங்கராந்தி - திரு. பட்டுக்கோட்டை டி.ஆர்.மனோகர், வல்லம். | 31 |
| ஆதிரையான் - திரு. சோ. செந்தில்குமார், காஞ்சிபுரம். | 34 |
| 108 திவ்யதேச வைபவம் : திருநின்றவூர் - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 37 |
| சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: யாளி வடிவம் -படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. | 40 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : இராமாநுஜர் - ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 42 |
| புரந்தர தாசர் கீர்த்தனைகளில் ஸ்ரீபத்மாவதித்தாயார் - திருமதி ஹேமா திருப்பதி. | 44 |
| திருவேங்கடவனின் திருலீலை - திரு. ஆர்,கோவிந்தராஜன் சேலம். | 46 |
| ராசிபலன்கள் : ஜனவரி 2025 - டாக்டர் எம்.வி. நரநாராயணன்,சேலம். | 48 |
| சிறுவர் உலகம் : பல்சுவை பகுதி | 49 |
| சித்திரக்கதை : தெலுங்கு மாநிலங்களில் பொங்கல் கொண்டாட்டம் | 52 |

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : திருவேங்கடமுடையான், திருமலை.

பின்னட்டை : ஸ்ரீபத்மாவதித் தாயார், திருச்சானூர்

*சிறப்பு ஆசிரியர் :*
**திரு. J. சியாமளா ராவ்,** ஐ.ஏ.எஸ்.
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
*வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :*
Dr. K. **ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
பி.ஜி. டிப்ளமா இன் எப்பிக்ராபி, டிப்ளமா இன் யோகா
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. P. ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
*புகைப்படங்கள் :*
**திரு. P.N. சேகர்**
**திரு. B. வெங்கடரமணா**

*பிரதிகளுக்கு:*
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press
Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360

நீங்கள் ஸப்தகிரி இதழை **www.tirumala.org**யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு **sapthagiri.helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்




# திருமலையில் மார்கழி மாத உத்ஸவங்கள்

சிவபார்வதியாரின் திருமணத்தின்போது உலகத்தினர் யாவரும் இமயமலையில் கூடியிருக்க, வடக்கே தாழ்ந்து தெற்கு உயர்ந்து நின்றது. இதனால் அகத்தியர் ஒருவர் மட்டுமே தெற்கே வந்து சமநிலை செய்தார். அதுபோன்றே பிரம்மாண்டத்தில் உள்ள அனைத்து திருத்தலங்களும் ஒருபுறம் இருக்க சப்தகிரிவாசன் கொலுவீற்றிருக்கும் வேங்கடாசல திருத்தலம் மறுபுறத்திற்கு சமமாகும். அணுவணுவும், அடிஅடியும் ஒரு விசித்திரமாகும். மேலும், ஓர் அதிசயமும் ஆகும். இத்திவ்யத் திருத்தலத்தில் திருவேங்கடமுடையானுக்கு நடைபெறுகின்ற உத்ஸவங்கள், ஊர்வலங்கள், நிவேதனங்கள், இம்மலைத்தொடரில் பாய்ந்தோடும் புண்ணிய தீர்த்தங்களின் மகிமைகள்... என ஸ்ரீநிவாசனின் திருச்சன்னதியில் உள்ள எதனை ஆராய்ந்தாலும் அவை யாவற்றிலும் ஒரு சிறப்பு கண்டிப்பாக நமக்கு காட்சியளித்திடும். ஒரு சாராம்சத்தை உணர்த்திடும். முக்கியமாக ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதத்தின் மூன்றாவது வாரத்திலிருந்து ஜனவரி மாதம் இரண்டாவது வாரம் வரை அதாவது தமிழ் மாதமான மார்கழி முழுவதும் திருமலை திருத்தலத்தில் நடைபெறுகின்ற உத்ஸவங்களைக் கவனித்தாலே போதும் இத்திருத்தலத்தின் மகிமையை நாம் அறிய முடியும்.

மார்கசீரம் – புஷ்ய மாதத்தில் கலந்து வருகின்ற இந்த தனுர் (மார்கழி) மாதம் முழுவதும் ஸ்ரீநிவாசனை ஸ்ரீகிருஷ்ணனாகவும், திருமார்பில் வீற்றிருக்கும் வியூக லஷ்மியை கோதையாகவும் பாவிப்பர். இரத்தினங்கள் பதிக்கப்பட்ட தங்கத்தினாலான கிளியை ஸ்வாமியின் திருமார்பில் அலங்கரிப்பர். அதே போன்று இரவு பவளிம்பு சேவையின் போதும் போக ஸ்ரீநிவாச மூர்த்திக்கு பதிலாக வெண்ணைமுத்த கோபால கிருஷ்ணன் பங்கு பெறுவார். மேலும், திருவேங்கடவனைத் துயிலெழுப்ப திருப்பாவை பாசுரங்களை மட்டுமே பாராயணம் செய்திடுவர். அதன் பின்னர் ஸ்வாமிக்கு நடைபெறுகின்ற சகஸ்ர நாமத்தின் போதும் துளசிக்கு பதிலாக வில்வ தளங்களால் அர்ச்சிப்பர்.

குறிப்பாக மார்கழி மாதத்தில் பௌர்ணமிக்கு முன்னதாக வருகின்ற வைகுண்ட ஏகாதசி, அதற்கு அடுத்த நாள் வருகின்ற முக்கோடி துவாதசி விழாக்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. வைகுண்ட ஏகாதசியன்று அதிகாலை முதல் பத்து நாட்கள் வரை வைகுண்ட வாயில் தரிசனம் செய்திடும் பெரும் பாக்கியம் கிட்டுகின்றது. அன்று காலை பொழுதில் உபயதேவியருடன் திருமலையப்ப ஸ்வாமி தங்கத்திருத்தேரில் எழுந்தருளும் கண்கொள்ளாக் காட்சியினை வருணிக்க வார்த்தைகளே இல்லை என்றே கூறலாம். மறுநாள் முக்கோடி துவாதசியன்று ஸ்வாமி புஷ்கரணி (திருக்குளம்) தீர்த்த முக்கோட்டி. இன்றைய தினம் சூரிய உதயத்திற்கு முன்னதாக திருக்குளத்தில் சக்கரஸ்நானம் எனப்படும் தீர்த்தவாரி நடைபெறும். அச்சமயத்தில் பிரம்மாண்டத்தில் உள்ள அனைத்து தீர்த்தங்களும் ஸ்வாமி புஷ்கரணியில் வந்து சேர்ந்திடுவதால், அதில் தீர்த்தமாடும் பக்தர்கள் தாம் செய்திட்ட பாவங்களிலிருந்து விடுபடுகின்றனர் என்பது இத்தலத்தின் சிறப்பாகும். அவ்வளவு பரம பவித்திரமான ஸ்வாமி புஷ்கரணி ஸ்நானம் சர்வ பாபஹரம்! சர்வ சித்தி ப்ராப்தம்!!

வைகுண்ட ஏகாதசி நாளிலிருந்து ஆறாம் நாள் மிகச் சிறப்பாக “பிரணய கலஹோத்ஸவம்” நடைபெறும். வேட்டைக்குச் சென்று திரும்பி வரும் ஸ்வாமியைத் தடுத்து ஸ்ரீதேவியும், பூதேவியும் எங்குச் சென்றீர், யாருடன் சென்றீர், யாருடன் திரும்பி வந்தீர் எனக் கேட்கும் விதத்தில் இந்த பிரணய கலஹோத்ஸவம் மிக அழகாக நடைபெறும். வைகுண்ட ஏகாதசிக்கு முன்னதாக பத்து நாட்களும், அதன் பின்னர் பதினைந்து நாட்களும் திருவேங்கடமுடையான் ஆலயத்தில் அத்யயனோத்ஸவம் நடைபெறும். இச்சமயத்தில் ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகள் தலைமையில் செவிக்கினிமையாக நாலாயிரத் திவ்ய பிரபந்தம் நாள்தோறும் பாராயணம் செய்யப்படும்.

மார்கழி மாதத்தின் இறுதியில் வரக்கூடிய மற்றொரு சிறப்பு பண்டிகை பொங்கல் திருநாளாகும். பொங்கல் தினத்திற்கு முந்தைய நாளான போகியன்று போகிப்பண்டிகையும் திருமலையில் கொண்டாடப்படும். பொங்கல் தினத்திற்கு அடுத்த நாளான மாட்டுப் பொங்கலன்று மாலை நேரத்தில் ஒரு பல்லக்கில் ஸ்ரீகிருஷ்ண பகவான் எழுந்தருள, மற்றொரு பல்லக்கில் பஞ்சாயுதங்களைத் தரித்துக் கொண்டு ஸ்வாமி வேங்கட மலையில் பக்தர்களின் கோலாகலத்துடன் பார்வேட்டைக்குச் செல்வார். பார்வேட்டையை வெற்றியுடன் முடித்து மீண்டும் ஆலயத்திற்கு எழுந்தருளுவார்.பக்தர்களின் மனதினை ஆனந்த அமிர்த சமுத்திரத்தில் மூழ்கி கொண்டாட வைப்பதே ஏழுமலைவாசனின் மார்கழி மாத உத்ஸவங்களாகும் என்று கூறினால் அது மிகையாகாது.

# திருப்பாவை கேட்கும் திருவேங்கடவன்

"**மா**தங்களில் நான் மார்கழி" என்று கண்ணன் தனக்கு உகந்த மாதம் மார்கழி என கீதையிலே சொன்னதை வைத்துக் கொண்டு நாம் ஒரு முடிவுக்கு வருகின்றோம்.

கண்ணன் உகந்ததால் ஆண்டாள் உகந்த மாதம் மார்கழி மாதம். ஆண்டாள் உகந்து திருப்பாவை பாடி, கண்ணனை தன் மணாளனாக அடைந்த மாதமும் மார்கழி மாதம் தான். திருமலையில் திருப்பாவை முடிந்த கையோடு ஆண்டாள் திருக்கல்யாண உத்ஸவமும் நடைபெறுகிறது.

12 மாதங்களிலேயே ஒரு குறிப்பிட்ட மாதத்திற்கு முழுமையாக ஒரு பிரபந்தம் ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சமய மரபில் திருப்பாவை என்கிற ஒரு பிரபந்தத்திற்குத்தான் அந்த ஏற்றம் உண்டு.

அதிகாலையில் எல்லா மாதத்திலும் வடமொழி சுப்ரபாதத்தையும் கேட்டிடும் திருமலை அப்பன் மார்கழி மாதம் முழுமையும் திருப்பாவையை மட்டுமே கேட்கின்றான். என்னே அற்புதம், என்னே சிறப்பு பாருங்கள்.

திருப்பாவைக்கான தனியனிலே உய்யக் கொண்டார் அருளிச் செய்கின்றார். இந்தத் தனியன் ஆண்டாளுடைய திருவுள்ளத்தை உணர்த்தும். ஆண்டாள் "வேங்கடவற்கு என்னை விதி" என்று சொன்னதால் அவள் திருமலையப்பனையே விரும்புகிறாள் என்பது தெளிவு. திருமலையப்பன் ஆண்டாளையே விரும்பினான்.

அவள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்பதாலே இன்றைக்கும் அவள் சூடிய மாலையே பகவான் தான் சூடிக்கொண்டு கருட சேவையின் போது காட்சி தருகிறான். திருப்பாவை நோன்பு ஆண்டாள் வேங்கடவற்கு என்னை விதி என்பதைச் சங்கல்பம் செய்து கொண்டு நோற்ற நோன்பு.

இனி திருப்பாவை திருமலையப்பனைக் குறிக் கிறது என்பதற்குச் சில சான்றுகளைப் பார்ப்போம்.


### துளப முடியான்

திருமங்கையாழ்வார் திருமலையப்பனை பாடுகின்ற பொழுது,

*விலங்கல் குடுமித் திருவேங்கடம் மேய*
*அலங்கல் துளப முடியாய்! அருளாயே!*

என்று வேண்டுகிறார். இங்கே பகவானுக்கு அடையாளமாகத் துளசி மாலையைத் தலையில் சூடியவன் என்று குறிப்பிடுகின்றார்.

இதே குறிப்பை ஆண்டாள் தன்னுடைய திருப்பாவையில் *''நாற்றத்துழாய் முடி நாராயணன், நம்மால் போற்றப் பறை தரும் புண்ணியன்''* என்கிறாள். மணம் வீசுகின்ற துளசி மாலையை அணிந்தவன் எம்பெருமான் என்று குறிப்பிடுகின்றார்.



– பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963.

எனவே திருப்பாவையின் இந்த வரியானது திருத்துழாய் மாலையை அணிந்த திருமங்கை ஆழ்வார் மங்களாசாசனம் செய்தபடி திருவேங்கடவனைக் குறிப்பிடுகிறது என்று எடுத்துக் கொள்வதில் ஒரு தடையும் இல்லை.

## திருமலை அப்பன் ஆரா அமுதன்

அடுத்து திருவேங்கட மலையில் எழுந்தருளி இருக்கும் மலையப்ப ஸ்வாமியை "ஆரா அமுதே" என்ற ஒரு சொற்றொடரால் திருமங்கை ஆழ்வார் மங்களாசாசனம் செய்கின்றார்.

*சீரார் திருவேங்கட மலைமேய*
*ஆரா அமுதே அடியேற்கு அருளாயே*

என்று பாடுகின்றார். ஆண்டாள் *''உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்...''* என்று திருமலையப்பன் வாயமுதத்தை அனுபவிக்க நினைக்கின்றாள். எனவே, ஆண்டாளுக்கும், திருமலை அப்பனுக்கும் அவள் பாடிய திருப்பாவைக் கும் உள்ள இரண்டாவது தொடர்பு இங்கே நமக்கு விளங்குகின்றது.

இந்த வாயமுதத்தை நினைக்கின்ற பொழுது வேறு எதுவுமே சுவைக்காது. இதை ஆண்டாள் தன்னுடைய திருப்பாவையில் "கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா" என்ற பாசுரத்திலே *"மூட நெய் பெய்து முழங்கை வழிவார''* என்று பாடுகின்றார்.

அங்கே உரையாசிரியர்கள், ஏன் முழங்கையில் பால் சோறு வழிகிறது என்று ஒரு கேள்வியை எழுப்பி, அவர்கள் வாயில் பட்டால் அல்லவா அது வழியாமல் இருக்கும். சுவையான பால் சோறு கூட கண்ணனின் எழில் முகத்தைப் பார்க்கின்ற பொழுது அவர்கள் வாயில் படவில்லை. ஆரா அமுதம் (கண்ணன்) கிடைத்த பிறகு சாதா அமுதம் எப்படித் தித்திக்கும்? எனவே இங்கே ஆரா அமுதம் என்பது திருமலையப்பனின் வாய் அமுதம் சாதா அமுதம் என்பது பால் சோறு, சர்க்கரை பொங்கல் முதலிய நிவேதனங்கள்.

## ஆற்றமை தந்தவன் தானே நீக்க வேண்டும்

ஆண்டாள் திருமலையப்பனை நாச்சியார் திருமொழியில் பாடுகின்ற பொழுது தன்னுடைய ஆற்றாமை எல்லாம் பெருக்கெடுத்து ஓடும்படி பாடுகின்றார்.

*கண்ணீர்கள் முலைக்குவட்டில் துளி சோரச் சோர்வேனை*
*பெண்ணீர்மை ஈடழிக்கும் இது தமக்கோர் பெருமையே*

உன்னையே நினைத்து இருக்கக்கூடிய எம்மைப் போன்றவர்களை உதாசீனப்படுத்துவது உனக்கு என்ன பெருமை? எங்களை அழ வைத்துப் பார்ப்பதா உனக்குப் பெருமை? என்று இதில் கேட்கின்றார்.

இந்த ஆற்றாமையைத்தான் திருப்பாவையிலே *''மாற்றார் வலி தொலைந்து உன் வாசல் கண் ஆற்றாது வந்து உன் அடிபணியுமா போலே போற்றி யாம் வந்தோம்''* என்று பாடுகின்றார். இங்கேயும் ஆண்டா ளுக்கும் திருப்பாவைக்கும் திருமலை அப்பனுக்கும் உள்ள தொடர்பு விளங்குகின்றது.

## அவனே உலகளந்தவன்

அடுத்தபடியாக

*குறளாய் நிலமீரடியாலே விண்டோய் சிகரத்*
*திருவேங்கடம் மேய அண்டா*
*அடியேனுக்கு அருள்வாயே*

என்பது திருமங்கை ஆழ்வார் பாசுரம்

திருமலையப்பன் ஈரடியால் உலகத்தை அளந்தான் என்பதை திருப்பாவையில் பல இடங்களில் ஆண்டாள் குறிப்பிடுகின்றார்.

*''அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி''* என்ற பாசுரத்திலும், *''அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த உம்பர் கோமானே''* என்கிற பாசுரத்திலும் ஆண்டாள் இந்த விருத்தாந்தத்தைப் பாடுகின்றார்.

## விமலன்

திருப்பாணாழ்வார் அமலன் ஆதிபிரான் பாசுரத் தில் *''விமலன் விரையார் பொழில் வேங்கடவன்''* என்று வேங்கடவனை விமலன் என்கிற சப்தத்தாலே குறிப் பிடுகின்றார். விமலன் என்பதற்கு குற்றமற்றவன், தூபன் என்று பொருள். இந்த விமலன் என்கின்ற சப்தத்தை தன்னுடைய திருப்பாவையில் ஆண்டாள் அமைத்துப் பாடுகின்றார்.

*முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று*
*கப்பம் தவிர்க்கும் கலியே துயில் எழாய்*
*செப்பமுடையாய் திறல் உடையாய்*
*செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும் விமலா*

என்பது பாசுரம்.

விரையார் பொழில் வேங்கடவனை “விமலன்” என்று பாடுவதால் இந்தச் சப்தமானது திருமலை அப்பனைக் குறிக்கிறது என்று எடுத்துக் கொள்ளலாம்.

### அவனுக்கே ஆட் செய்வோம்

நம்மாழ்வார் திருவேங்கடவனுக்கு *‘‘ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும்’’* என்று பாரிக்கின்றார்.

ஆண்டாள் இப்படிப்பட்ட கைங்கர்யத்தை திருப்பாவையில் *‘‘என்றென்றுன் சேவகமே ஏத்தி பறை கொள்வான்’’* என்ற வரிகளாலும், *‘‘எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உற்றோமேயாவோம், உனக்கே நாம் ஆட் செய்வோம்’’* என்று பாடுகிறாள்.

பொதுவாகவே எல்லா திருமால் ஆலயங்களிலும் காலை வழிபாட்டை திரு அனந்தல் என்பர். திரு அனந்தல் என்பது தான் திருப்பாவை சாற்று முறை, அந்தத் திருப்பாவை சாற்றுமுறை தான் முதல் வழிபாடாக எல்லா பெருமாள் ஆலயங்களும் கொண்டிருப்பதால் அதே மரபு திருமலையிலும் கடைபிடிக்கப்படுவதால் திருமலை அப்பனுக்கும் திருமலைக்கும் திருப்பாவைக்கும் ஆண்டாளுக்கும் உள்ள தொடர்பு விளங்கும்.

### கோவிந்தா கோவிந்தா

கோவிந்த நாமம் என்பது அற்புதமான நாமம் – அடியார்கள் தங்களை நாராயணன் அடியார்கள் என்று கூறிக்கொள்வது கிடையாது. கோவிந்தன் குடி அடியார் என்று கூறிக் கொள்ளும் மரபு இருப்பதால் கோவிந்த நாமத்தினுடைய மகிமை விளங்கும்.

அந்த கோவிந்தா என்கின்ற நாமம் எல்லா திருக்கோயில் பெருமாளுக்கும் பொருந்தும் என்றாலும் கூட நடைமுறையில் இந்த நாமம் திருமலை அப்பனுக்கே உரியது என்பது எல்லோருக்குமே தெரியும். “கோவிந்தா’’ என்று சொன்னால் அது திருமலையப்பனைத்தான் குறிக்கும்.

அதனால் ஆண்டாள் *‘‘குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா’’* என்கிற திருப்பாவை வரியால் திருமலை அப்பனையே அழைக்கின்றார் என்று எடுத்துக் கொள்ளலாம்.

*‘‘கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா’’* என்று சொல்வதால் அவன் அடியார்களை வென்றவன். அதனால் தான் லக்ஷக்கணக்கான பக்தர்கள் திருமலையப்பனைத் தரிசிக்க தினம் தோறும் கூடுகின்றார்கள்.

இப்படித் திருப்பாவைக்கும், ஆண்டாளுக்கும், திருமலையப்பனுக்கும் உள்ள உறவு ஒழிக்க முடியாத உறவு. அந்த உறவின் சீர்மையை இந்த கட்டுரையில் அனுபவித்தோம். ஆண்டாளின் திருவடிகளுக்கும், அவள் விரும்பிய திருமலை அப்பன் திருவடிகளுக்கும் பல்லாண்டு பாடுவோம்.

## பாரதியாரின் பொன்மொழி
## வாழ்க்கையின் வழிகாட்டி

**அச்சம் என்றால் பயம். பயம் ஏன் வருகிறது? நாம் தவறு செய்தால் பயம் வருகிறது. பயம் இல்லாமல் இருக்க வேண்டுமென்றால் குழந்தைகளே! நாம் தவறே செய்யக் கூடாது. முதலில் பொய் சொல்லக் கூடாது. அடுத்தவர் பொருளை எடுக்கக் கூடாது. பெற்றோர்கள், ஆசிரியர்கள், பெரியவர்களிடத்தில் உண்மையாகவும், நேர்மையாகவும் இருந்து, இறை சிந்தனையோடு வாழ்வில் பயணிப்போம்.**

**“அச்சமில்லை அச்சமில்லை அச்சம் என்பது இல்லையே உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே”**



# திருமழிசையாழ்வார் போற்றும்

# அரங்கத்தானும் வேங்கடத்தானும்

– திரு. ஏ.கே. கோபி, கள்ளக்குறிச்சி, 94438 79592.

ஸ்ரீய:பதியான ஸ்ரீமந்நாராயணனின் திருவாழி எனும் சுதர்சன சக்கரத்தின் அம்சமாக திருமழிசையாழ்வார் சென்னை அருகில் திருமழிசை எனும் ஊரில் தை மாதத்தில், மகம் நட்சத்திரம் கூடிய ஞாயிறு அன்று அவதரித்தார். திருமழிசையாழ்வாரின் திருச்சந்தவிருத்தம் மற்றும் நான்முகன் திருவந்தாதிப் பாசுரங்கள் ஸ்ரீவைஷ்ணவ தத்துவங்களையும், திருமாலின் பெருமைகளையும், சரணாகதியின் மேன்மையினையும் அடியார்களுக்கு அருளுகிறது. திருவேங்கடம் மற்றும் திருவரங்கம் திவ்ய தேசங்களின் இயற்கை அழகினை ஆழ்வார் பாசுரங்களில் அனுபவிக்கலாம்.

### அர்ச்சாவதாரம்

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் பரமபதத்திலிருந்து ஜகத் நிர்வாகம் செய்தருளும் பொருட்டு திருப்பாற்கடலுக்கு எழுந்தருளுகிறான். மத்ஸ்ய முதல் எண்ணிறைந்த அவதாரங்களைச் செய்த போது எம்பெருமான் முதலில் தம்முடைய திருவடிகளை திருமலையிலே பதித்து நின்ற திருக்கோலத்தில் அடியார்களுக்கு சேவை சாதித்து அருளினான்.

*குன்றில் நின்று வானிருந்து நீள்கடல் கிடந்த மண்*
*ஒன்றுசென்ற தொன்றையுண்டு அதொன்றிடந்து பன்றியாய்*
*நன்றுசென்ற நாளவற்றுள் நல்லுயிர் படைத்தவற்கு*

–திருச்சந்த விருத்தம் – 48

திரிவிக்கிரம அவதாரத்தில் பூமியினை அளந்தும், கிருஷ்ணாவதாரத்தில் அண்ட சராசரங்களோடு பூமியினை விழுங்கியும், வராகவதாரத்தில் பூமியினை கொம்பினில் தாங்கியும் எம்பெருமான் உயிர்களைப் படைத்துக் காத்தருள்வதை திருவேங்கடவன் விஷயமாக திருமழிசையாழ்வார் அருளுகிறார்.

*பாலிற்கிடந்ததுவும் பண்டரங்கம் மேயதுவும்*
*ஆலில் துயின்றதுவுமா றறிவார்?* –நான்மு. திரு.3

திருப்பாற்கடலில் க்ஷீராப்திநாதனாகச் சயனித்திருக்கும் எம்பெருமானே திருவரங்கத்தில் திருவரங்க நாதனாக அர்ச்சாவதாரத்தில் சேவை சாதிக்கிறான். அவனே பிரளய காலத்தில் அண்டம் முழுவதும் உண்டு ஆலிலம் தளிர்மேல் சயனித்திருக்கின்றான் என நான்முகன் திருவந்தாதியில் அருளுகிறார்.

### இயற்கையழகு

ஸ்ரீவைஷ்ணவ அடியார்கள் திருவேங்கடமுடையானிடம் பரம பக்தி மேலீட்டால் நறுமண மலர்களைக் கொண்டு அவன் செவ்விய மென்மையான திருவடிகளில் அர்ச்சனை செய்து வழிபடுவர். அவன் திருக்கல்யாண குணங்களின் அனுபவத்தால் வெட்டி வீழ்த்தப்பட்ட அடிமரங்கள் போலே கால்கள் அசையாமல் அவன் திருச்சன்னிதியிலே தம்மை





மறந்து தொழுது நிற்பர். மிகவும் குளிர்ந்த நீராலான அருவிகள் நிறைந்த திருவேங்கடமே பரம பதத்தில் இருக்கும் நித்ய சூரிகளுக்கும், பூலோக பாகவதர்களுக்கும் பெறற்கரிய பெரும் நிதியாகும்.

*தானோங்கி நிற்கின்றான் தண்ணருவி வேங்கடமே*
*வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு*

–நான்மு. திரு.45

திருமலையில் உள்ள காடுகளில் யாளி எனும் மிருகமும், வலிமை வாய்ந்த சிங்கங்களும் உலவுகின்றன. பல வண்ண மலர்கள் மரங்களில் பூத்துக் குலுங்கி நறுமணம் வீசுகின்றன. அருவி நீருடன் பொன்மணிகளும், முத்தும் மாணிக்கங்களும் விழுந்து புரண்டு ஓடுகின்றன. குரங்குகளும், வேடுவர்களும் திருமலையில் மகிழ்வுடன் வாழ்ந்து வருகின்றனர்.

*பொன்மணியும் முத்தமும் பூமரமும் - பன்மணி நீ*
*ரோடு பொருதுருளும் கானமும் வானரமும்*
*வேடுமுடை வேங்கடம்*

––நான்மு. திரு.47

மலையில் பிறந்து காடுகள் வழியே ஓடி வரும் காவேரி சந்தனத் துகள்களையும், குங்குமத் துகள்களையும் குழைத்து எடுத்து கொண்டு திருவரங்கத்தில் நறுமணத்துடன் ஆற்றங்கரையில் அலை புரண்டு வீச திருவரங்கநாதன் சயனித்திருக்கிறான்.

*மலைத்தலைப் பிறந்திழிந்து வந்துநுந்து சந்தனம்*
*குலைத்தலைத் திறுத்தெறிந்த குங்குமக் குழம்பினோடு*
*அலைத்தொழுகு காவிரி அரங்கம்மேய அண்ணலே!*

–திருச்ச.வி.54

**வினையறுக்கும்**

பரமபதத்திலே உள்ள நித்ய சூரிகள் வைகுண்ட நாதனின் திருக்கல்யாண குணங்களை மேலும் அனுபவிக்கும் பொருட்டு திருமலைக்கு வந்து திருவேங்கடமுடையானைத் தொழுது நிற்கின்றனர். அடியார்களுடைய முற்பிறவி வினைகளையும் இப்பிறவி நோய்களையும் மலையப்பன் தம்முடைய வாத்சல்ய குணத்தினால் தீர்த்து வைத்தருளுகிறான்.

*வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும்*
*மெய்ம்மையால்*
*வேங்கடமே மெய்வினை நோய் தீர்ப்பதுவும்*

–நான்மு. திரு.48

காவிரி சூழ்ந்துள்ள திருவரங்கத்தில் கோயில் கொண்டுள்ள திருவரங்கனின் ஒளிவீசும் மலர் போன்ற திருப்பாதங்களில் ஜீவாத்மாவின் பல பிறவி வினைக் கொழுந்துகளும் படிந்ததால் ஜீவாத்மா தூய்மை அடைந்து நற்கதி பெற்றது.



*பொன்னி சூழ்அரங்கமேய பூவை வண்ண! மாய! கேள்*
*என்னதாவியென்னும் வல்வினையினுள் கொழுந்தெழுந்து*
*உன்னபாத மென்னநின்ற* –திருச்ச.வி.119

### அந்தர்யாமி

வேங்கடமுடையானின் திருவவதார நன்னாளான திருவோண நட்சத்திரத்தன்று வேத விற்பன்னர்கள் ஓதுகின்ற வேத மந்திரங்களின் ஒலியின் மங்கல அதிர்வு திருமலை முழுதும் பூரணமாக நிறைந்திருக்கின்றது. அந்தர்யாமியாக வேங்கடவன் திருமழிசையாழ்வார் உள்ளத்தில் சேவை சாதித்தாலும் திருமலையிலே அவனை அர்ச்சாரூபியாய் சேவிக்க விருப்பம் அதிகரித்துள்ளதாக அருளுகிறார்.

*ஓணவிழவி லொலியதிர பேணி*
*வருவேங்கடவா! என்னுள்ளம்புகுந்தாய்*
*திருவேங்கட மதனைச் சென்று.* –நான்மு. திரு.41

சம்சாரமாகிற நாடக அரங்கத்தில் தம்மை ஏற்றி துன்புறாவண்ணம் திருவரங்கநாதன் காப்பாற்றி அருளினான். மேலும், தம்முடைய நெஞ்சத்தில் அந்தர்யாமியாய் நின்ற, வீற்றிருந்த மற்றும் சயனத் திருக்கோலங்களில் மிகவும் விருப்பமுடனே சேவை தந்தருளுகிறான். தம்முடைய நெஞ்சத்தில் திருக்கோயில் கொண்ட பின்பு திருப்பாற்கடலில் ஆதிசேஷன்மேல் சயனித்து இருப்பதை எம்பெருமான் விரும்ப மாட்டான் என அறுதியிடுகிறார்.

*உள்ளத்து நின்றா னிருந்தான் கிடக்குமே*
*வெள்ளத் தரவணையின் மேல்.* –நான்மு. திரு. 30

### சரணாகதி

இராமாவதாரத்தில் வாலியைக் கொல்ல சுக்ரீவனுக்கு நம்பிக்கையளிக்கும் விதமாக ஏழு மரங்களை ஒரே அம்பினால் துளையிட்டு சாய்த்து சுக்ரீவனுக்கு உதவி புரிந்த இராமனாகிய ஸ்ரீமந்நாராயணனே திருவேங்கடத்தில் வீற்று உள்ளான். திருவேங்கடவனின் திருவடிகளில் சரணடைந்து சம்சார துக்கத்தில் இருந்து விடுபட்டு உய்வடைவீர்களாக என உலகத்தோருக்கு உபதேசம் செய்கிறார்.

*மிடைந்தவேழ் மரங்களும் அடங்கவெய்து வேங்கடம்*
*அடைந்த மாலபாதமே அடைந்துநாளும் உய்ம்மினோ*
–திருச்ச.வி.81

வண்டுகள் மொய்த்து ரீங்காரமிடும் குளிர்ந்த திருத்துழாயினால் அலங்கரிக்கப்பெற்ற அழகிய திருவடிகளை உடையவன் திருவரங்கநாதன். இகபர சுகம் பெறுவதை விரும்பி அவனிடம் சரணாகதி செய்து பிரார்த்திக்கும் அடியவர்களுக்கு உள்ளம் மிக இறங்கி அவர்களின் வினைகளை வேரறுத்து பேரின்ப புருஷார்த்தம் அருள வேண்டும் என திருவரங்கனிடம் பிரார்த்தனை செய்கிறார் ஆழ்வார்.

*சுரும்பரங்கு தண்துழாய் துதைந்தலர்ந்த பாதமே*
*விரும்பி நின்றிறைஞ்சுவோற்கு இரங்கு அரங்கவாணனே!*
–திருச்ச.வி.93

### வைகுந்த ஏகாதசி

அனைத்து வைணவத் திருத்தலங்களிலும் அதிமுக்கியமாகக் கருதப்பட்டு கொண்டாடப்படுவது வைகுந்த ஏகாதசிப் பெருவிழாவாகும். திருஅத்யயன உற்சவம் எனவும் அழைக்கப்பெறும் இவ்விழா மார்கழி மாதத்தில் 21 நாட்கள் விமரிசையாக நடத்த பெறும். மார்கழி வளர்பிறை ஏகாதசி மிகவும் புனிதமாகக் கருதப்படும் வைகுண்ட ஏகாதசியாகும். திருநெடுந்தாண்டகம் தொடங்கி பகல் பத்து இராப்பத்து என பெருமாள் சந்நிதியில் நாலாயிரத் திவ்ய பிரபந்த பாசுரங்கள் முழுவதும் சேவிக்கப்படும். வைகுந்த ஏகாதசி விரதமிருந்து அதிகாலையில் பரமபதவாசல் திறக்கப்படுகையில் பெருமாளை அவ்வாசல் வழியே சேவிப்பது பிறவாப் பெருநிலையான வைகுந்த புருஷார்த்தம் கிடைக்கப்பெறும் என்பது ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தம்.

ஸ்ரீவைஷ்ணவர்களும் மற்றவரும் வைகுந்த ஏகாதசி விரதத்தினை மிகவும் சிரத்தையுடனே அனுஷ்டித்து பரமபத வாசல் வழியே பெருமாளை சேவித்து மகிழ்கின்றனர்.

பூலோக வைகுந்தமாம் திருவரங்கத்தில் வைகுந்த ஏகாதசியன்று நம்பெருமாள் பாண்டியன் கொண்டை தரித்து, கிளி மாலை அணிந்து, ரத்தின அங்கியில் பரமபதவாசல் வழியே பக்தர்களுக்கு அருள் புரிகிறார். திருவேங்கடத்தில் பரமபத வாசல் எனத் தனியே இல்லாததால் திருஅத்யயன உற்சவம் கொண்டாடப்படும்போது வைகுந்த ஏகாதசியில் ஆனந்த நிலையத்தில் பிரத்யேகமாக உள்ள வைகுந்த துவாரம் வழியே பக்தர்கள் சென்று திருவேங்கடமுடையானைத் தரிசித்து அருள் பெற்று வருகின்றனர்.




# வாரணமாயிரம் அருளிய கோதை

– திருமதி எஸ். வைஷ்ணவி,
திருப்பதி.

ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களில் பெரியாழ்வாரின் திருமகளான ஆண்டாள் தாயார் இயற்றிய பாசுரங்களுக்கு தனியே ஒரு ஏற்றம் உண்டு. மார்கழி மாதத்தில் ஆண்டாள் இயற்றிய திருப்பாவை அனைத்து வைணவ ஆலயங்களில் ஒலிப்பதன் மூலம் இதனை நாம் அறியலாம். ஆண்டாள் இயற்றிய நாச்சியார் திருமொழியில் “வாரணம் ஆயிரம்” அனைத்து வைணவ திருமணத்திலும் பாராயணம் செய்வது மட்டுமின்றி வைணவ ஆலயத்தில் ஸ்வாமிக்கு நடைபெறும் திருக்கல்யாண வைபவங்களிலும் தேங்காய் உருட்டும் நிகழ்வில் இப்பிரபந்த பாசுரங்கள் பாராயணம் செய்வதை நாம் காணலாம்.

தெலுங்கு மாநிலங்களில் இராமநவமி அன்று சீதாராம திருக்கல்யாணம் நடைபெறுவது வழக்கம். பத்ராசலத்தில் ராமபக்தர் இராமதாசு மூலமாக சீதாராம திருக்கல்யாணம் நடத்துவது நடைமுறை. மாங்கல்யதாரண மஹோத்ஸவத்திற்குப் பிறகு தேங்காய் உருட்டுதல் என்ற நிகழ்வில் வாரணம் ஆயிரம் பாசுரங்கள் பாடுவதைக் காணலாம். மாதவனை மணம் செய்து கொள்வதாக தான் கண்ட கனவினை ஆண்டாள் தன் தோழிக்குக் கூறுகிறாள்.

### மாப்பிள்ளை அழைப்பு

*வாரணமாயிரம் சூழ வலஞ் செய்து*
*நாரண நம்பி நடக்கின்றான் என்றெதிர்,*
*பூரண பொற்குடம் வைத்துப் புரமெங்கும்,*
*தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்*

ஆயிரம் வாரணம் (யானைகள்) புடைசூழ கல்யாண குணங்கள் நிறைந்த ஸ்ரீமந்நாராயணன் நகரத்தில் ஊர்வலமாக வருகின்றான். அப்பொழுது நகரத்தினை மாவிலை தோரணங்களால் அலங்கரித்து, மக்களும் பொற்குடங்களை ஏந்தி பூரணகும்ப மரியாதையுடன், மணாளனனாக வரும் அந்த கோவிந்தனை வரவேற்பதாகக் கனவு கண்டதாக தோழியிடம் ஆண்டாள் தெரிவிக்கின்றாள்.

*நாளை வதுவை மணமென்று நாளிட்டு*
*பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்*
*கோளரி மாதவன் கோவிந்தனென்பான் ஓர்*
*காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான்*

நாளை ஆண்டாளுக்கும் கண்ணனுக்கும் திருமணம் என்று நாள் குறித்தனர். பாக்கு மட்டைகளால் பிண்ணப்பட்ட பந்தல் (பாக்கு மட்டைகளின் வழியே நுழைந்து வரும் காற்றானது மணமிக்கதாக இருக்கும், அத்தகைய பந்தல் அது) கீழே மிடுக்கு உடைய சிம்மம் போன்ற நரசிம்மன், தேன் போன்ற இனிமையான மாதவன், துவாபர யுகத்தில் ஏழு நாட்கள் மலையைத் தூக்கிக் கொண்டு பசுக்களைக் காத்திட்ட கோவிந்தன் காளையைப் போன்று பீடு நடையுடன் நுழைவது போல் கனவு கண்டேன் தோழி என்கிறாள்.

*இந்திர னுள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்*
*வந்திருந்தென்னை மகட்பேசி மந்திரித்து*
*மந்திரக்கோடியுடுத்தி மணமாலை*
*அந்தரி சூட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.*

இந்திராதி தேவர்கள் கண்ணன் தரப்பில் வருகை தந்து, பிள்ளை–பெண் வீட்டார்கள் மணப் பொருட்களை வாங்கிட கலந்து ஆலோசித்தனர். திருமாலுக்கு தங்கை முறையான பார்வதிதேவி கூரைப் புடவையும், மணமாலையையும் எனக்கு அணிவிக்கும் வண்ணம் கனவு கண்டேன் எனக் கூறுகிறாள்.

*நால்திசைத் தீர்த்தம்கொணர்ந்து நனிநல்கி*
*பார்ப்பனச் சிட்டர்கள் பல்லாரெடுத்தேத்தி*
*பூப்புனை கண்ணிப் புனிதனோடு என்தன்னை*
*காப்புநாண் கட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்*

அந்தணர்கள் நான்கு திசைகளிலிருந்து கொணர்ந்த புனித நீரினை வேத மந்திரங்களை ஓதிய படி எல்லா நலன்களையும் பெற மங்களாசாசனம் செய்து, திவ்ய மங்கள தம்பதிகளான எங்களின் மீது தெளித்தனர். பின்னர் மலர் மாலைகள் அணிந்து மிகவும் பொலிவோடுத் திகழும் புனிதனான கண்ணனுக்கும் எனக்கும் திருமணத்தில் மணமக்களைக் காக்கும் காப்புக் கயிறு கட்டும் விதமாகக் கனவு கண்டேன் என்று ஆண்டாள் கூறுகிறாள் .

*கதிரொளி தீபம் கலச முடனேந்தி*
*சதிரிள மங்கையர் தாம் வந்து எதிர்கொள்ள*
*மதுரையார் மன்னடிநிலை தொட்டு எங்கும்*
*அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான்*

சூரியனையொத்த ஒளியு டைய தீபங்களையும், ஜொலிக்கும் கலசங்களையும் கையில் ஏந்திய வண்ணம் மங்கையரும் மெல்ல மெல்ல நடந்து வந்து கண்ணனை எதிர் கொண்டு அழைக்க வந்தனர். அடியவர்கள் கூப்பிடும் குரலுக்கு கண்ணன் வருவான் என்பது அனைவரும் அறிந்ததே. அவ்வாறே அடியவர்களில் சிறந்தவளான ஆண்டாளை காத்திருக்க வைக்க மனம் இல்லாமல் “வடமதுரையின் மன்னன்” அதாவது கண்ணன் ஒரு மன்னனுக்கு உரிய கம்பீரமான நடையில், பூமியே அதிரும் வகையில் மிடுக்காக அதிவிரைவாக மணவறையில் புகுந்தான்



என்று முதல் ஐந்து பாசுரங்களில் மாப்பிள்ளை அழைப்பையும், மணமேடையில் புகுதலையும் தன் தோழியிடம் ஆண்டாள் கூறுகிறாள்.

## திருக்கல்யாண வைபவம்

*மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத*
*முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்*
*மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து என்னைக்*
*கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ! நான்*

இந்தப் பாசுரத்தில் ஆண்டாள் தன் திருமணத்தின் துவக்கத்திலிருந்து இறுதி வரை விடாமல் மத்தளம், வரிகளை உடைய சங்குகள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன என்று விவரிக்கிறாள். தனக்கு உரியவற்றை தான் எடுத்து கொள்வதற்கு உரிமை உண்டு. அவ்வாறாக ஆண்டாள் தன்னுடையவள் என எண்ணி, ஆண்டாளின் திருக்கரத்தைத் திறந்தவனான அதாவது அத்தையான யசோதையின் திருமகனான கண்ணன் பற்றினான் என்று பெருமையோடு கூறுகின்றாள். அவ்வேளையில் வேதபண்டிதர்கள் வேதங்களை ஓதிட, மகளிர்கள் பல்லாண்டு பாட, அங்கு குழுமியிருக்கும் அனைவரும் வாழ்த்துரை பாட அனைத்தும் ஒருசேர ஒலித்தன என்று தான் கண்ட கனவினை விவரிக்கின்றாள்.

*வாய்நல்லார் நல் மறையோதி மந்திரத்தால்*
*பாசிலை நாணல் படுத்துப் பரிதி வைத்து*
*காய்சின மாகளிறன்னான் கைப்பற்றி*
*தீவலம் செய்யக் கனாக்கண்டேன் தோழீ! நான்.*

பச்சை பசேல் என்று இருக்கும் நாணல் புல்லை பரப்பி, அதன் மேல் ஹோமத்தில் சமித்துக்களை இட்டு, அந்தணர்கள் வேதங்களை உச்சரிக்கும் வேளையில் கைத்தலம் பற்றிய செருக்குடன் கூடிய கம்பீரமான ஆண் யானை போன்று கண்ணனும் கோதையும் அக்னி சாட்சியாக தாம் ஒருவரை ஒருவர் எல்லாக் காலங்களிலும் ஒன்றாக இருப்போம் என்று கூறும் விதத்தில் அக்னியை வலம் வருவதாகக் கனவு கண்டதாகக் கூறுகிறாள். இங்குத் தீயினை வணங்கும் மணச் சடங்கினைப் பற்றி ஆண்டாள் குறிப்பிடுகின்றாள்-

*இம்மைக்கு மேழேழ் பிறவிக்கும் பற்றாவான்*
*நம்மையுடையவன் நாராயணன்நம்பி*
*செம்மை யுடைய திருக்கையால் தாள் பற்றி*
*அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ! நான்.*

கண்ணன் பாத சேவை செய்ய வேண்டி பாசுரங்கள் இயற்றி பாடி பக்தியுடன் இருந்த ஆண்டாளின் பாதங்களைப் பற்றி கொண்டு அம்மி மிதிப்பது பற்றி இங்கு விவரிக்கிறாள். இப்பிறவியிலும், இனி வரும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாக இருந்து நம்மை எல்லாம் கரை சேர்ப்பவன் அந்த ஸ்ரீமந் நாராயணன். அவன் தன் கைத்தலம் பற்றி, தீயை வலம் வந்து செந்தாமரை ஒத்த திருக்கரங்களால் என்னுடைய மலர்ப் பாதங்களைப் பற்றி நிரந்தரமான வாழ்வை உணர்த்தும் அம்மி என்ற கல்லின் மேல் வைப்பது போல கனவு கண்டாள்.

*வரிசிலை வாள்முகத்தென்னை மார் தாம் வந்திட்டு*
*எரிமுகம் பாரித்தென்னை முன்னே நிறுத்தி*
*அரிமுக னச்சுதன் கைம்மேலென் கை வைத்து*
*பொரிமுகந்த தட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.*

அழகிய வில் போன்ற புருவத்தையும், ஒலி பொருந்திய முகத்தையுமுடைய உடன் பிறந்த தமையன்மார்கள் பொரியை அக்னியில் போடுவதற்கு எளிதாக இருக்கும் வகையில் ஹோம குண்டத்தின் முன்னே எம்மை நிறுத்தினர். கணவனின் ஆயுள் நீடிக்க, பொரியை அக்னி குண்டத்தில் மனைவியானவள் போடுகிறாள். கோதையை முன்னே நிறுத்தி, சிம்ம முகத்தை ஒத்த நரசிங்கனாக அவதாரமெடுத்த கண்ணன் பின்னே நின்று, கோதையின் திருக்கரங்களில் பொரியை நிரப்பி அதில் நெய் ஊற்றி, அவள் கரங்களின் கீழே அழிவில்லாத அச்சுதனான ஸ்ரீஹரியின் திருக்கரங்களை வைத்து அக்னி குண்டத்தில் பொரியை இடுவதாகக் கனவு கண்டாள்.

*குங்கும மப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து*
*மங்கல வீதி வலம் செய்து மணநீர்,*
*அங்கவனோடு முடஞ்சென்றங் கானைமேல்*
*மஞ்சனமாட்டக்கனாக்கண்டேன் தோழீ! நான்*

அக்னியின் முன்பாக நடக்கும் திருமண சடங்குகள்அனைத்தும் முடிந்தபின்னர் மணமக்களை குளிர்விக்கும் பொருட்டு குங்குமம், சந்தனம் போன்றவற்றை தாராளமாக எடுத்து உடல் முழுவதும் தடவி, மணமக்களை தோரணங்கள் நிறைந்த மங்கலகரமான வீதிகளில் அதிலும் யானை மீது உட்கார வைத்து அழைத்து வந்து, கூடத்தில் உட்கார வைத்து, மங்கல நீரினை அவர்கள் மேல் ஊற்றி திருமஞ்சனம் செய்வித்தனர். முதல் நாள் அவ் வீதிகளில் யானைகள் சூழ ஒருவனாக வந்த கண்ணன், இன்று நானும், கண்ணனும் யானை மீது அமர்ந்து வருவதாக கோதை ஆனந்தமாகக் கனவு கண்டாள்.





## பாசுரப் பாராயண பலன்

*ஆயனுக்காகத் தான்கண்ட கனாவினை*
*வேயர்புகழ் வில்லிப்புத்தூர்க்கோன் கோதைசொல்*
*தூயதமிழ்மாலை ஈரைந்தும்வல்லார் வாயும்*
*நன்மக்களைப் பெற்று மகிழ்வரே*

**திருவில்லிப்புத்தூரில் பெரியாழ்வாரின் திருமகளாக அவதரித்த கோதை நாச்சியார் தான் கண்ட கனவில் எம்பெருமானை மணம் புரிந்து கொள்ளவதாக அருளப்பட்ட இப்பத்து பாசுரங்களைப் பாராயணம் செய்பபவர்களுக்கு அனைத்து சௌபாக்கியங்களோடு மணவாழ்க்கை அமைந்து, சிறந்த நன்மக்களையும் பெற்று இன்புறுவர்.**






# அஷ்டாவக்கிரர்

– திரு.எஸ்.ஸ்ரீதுரை,காஞ்சிபுரம்,
9486139685

பாண்டவர்கள், கௌரவர்களின் சரித்திரத்தைத் தெளிவாகக் கூறும் மாபெரும் இதிகாசமாகிய மஹாபாரதம் தன்னகத்தே அருமையான கிளைக் கதைகள் பலவற்றையும் கொண்டிருக்கின்றது. அக்கிளைக்கதைகளுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வாழ்வியல் உண்மையை மறைமுகமாக எடுத்துக் கூறுவதன் மூலம் மனித குலத்தவரின் சிந்தனையைச் செம்மைப்படுத்துவதாகவே அமைந்துள்ளன என்பது முற்றிலும் உண்மையே.

சூதாட்டத்தில் தோற்றுவிட்ட தருமபுத்திரர் சகோதரர்கள் நால்வருடனும், திரௌபதியுடனும் 12 ஆண்டு காலம் வனவாசம் செய்யக் கிளம்பினர். இராமாயணத்தில் வனவாசத்திற்குச் சென்ற ஸ்ரீராம பிரான் வனத்தில் தவம் புரிந்து கொண்டிருந்த பல்வேறு முனிவர்களைச் சந்தித்தது போன்று, தரும புத்திரரும் தமது வனவாச காலத்தில் பல முனிவர்களைச் சந்தித்து ஆசி பெற்றார்.

இந்நிலையில் தருமபுத்திரரைச் சந்திக்க வந்த லோமசர் என்ற முனிவர், தருமபுத்திரருக்குப் பல்வேறு முனிவர்களின் அபூர்வ சரித்திரங்களை அவருக்கு எடுத்துக்கூறினார். இவ்வகையில் உத்தாலகர் என்ற முனிவரின் ஆசிரமத்திற்கு தருமபுத்திரர் சென்ற பொழுதும் அவருடன் வந்த லோமசர் அந்த தலத்திற்கு உரிய சரித்திரத்தை எடுத்துரைக்கலானார்.

வேத வேதாந்தங்களில் கரைகண்ட ஞானியும் சிறந்த தபஸ்வியுமான உத்தாலகருக்குக் கஹோளகர் என்ற சீடன் ஒருவன் இருந்தான். அவன் பக்தியும், நியமநிஷ்டைகளும் உடையவனாக இருந்தாலும்,கற்றுக் கொடுப்பதை கிரகித்துக் கொள்வதில் சற்றே திறமையிலாதவனாக விளங்கினான்

உத்தாலகரின் மற்ற சீடர்கள் கஹோளகரைப் பரிகாசம் செய்வது வழக்கம். இருந்த பொழுதிலும், கஹோளகரிடத்தில் மிகவும் அபிமானம் கொண்டிருந்த உத்தாலகர் தன் மகள் சுஜாதையை அவனுக்குத் திருமணம் செய்து வைத்தார்.

கஹோளகருக்கும் சுஜாதைக்கும் உருவான ஆண்குழந்தை தான் கருவில் இருக்கும் பொழுதே வேதங்கள் அனைத்தையும் அறிந்து விட்டதாம். இக்காரணத்தினால், தன் தகப்பனார் கஹோளகர் வேத பாராயணம் செய்யும் பொழுதெல்லாம் அதனைத் தன் தாயாரின் கருவிலிருந்தபடியே அக்குழந்தை உற்றுக் கேட்க ஆரம்பித்தது.

ஆனால், வேதங்களைச் சரியான முறையில் அத்தியயனம் செய்யாத கஹோளகர் தவறாக உச்சரித்து வந்ததைக் கேட்ட அந்த குழந்தையின் உடல் அஷ்ட (எட்டு) கோணல்களாக மாறி விட்டதாம். அதனால் அக்குழந்தைக்கு “அஷ்டாவக்கிரன்” என்ற பெயர் ஏற்பட்டது.

பன்னிரண்டு வயதுக்குள் முழுமையாக வேதாத்தியயனத்தைச் செய்து முடித்து விட்ட அஷ்டாவக்கிரன் தன்னுடைய அக்காள் மகன் சுவேதகேது என்பவனை அழைத்துக் கொண்டு ஜனக மகாராஜர் செய்யவிருந்த வேள்வியில் கலந்து கொள்வதற்காகச் சென்றான்.

இடைப்பட்ட காலத்தில், ஜனக மஹாராஜரின் அவையிலிருந்த வந்திப்பண்டிதன்

என்பவர், அஷ்டாவக்கிரனின் தகப்பனார் கஹோளரை வாதத்தில் வென்றதுடன் வாதத்திற்கான நிபந்தனைகளின்படி அவரைச் சமுத்திரத்தில் அமிழ்த்திக் கொன்றிருந்தான். அவ்வந்திப் பண்டிதனைப் பழி தீர்ப்பதற்காகவே அஷ்டாவக்கிரன் மிதிலைக்குச் செல்ல நிச்சயித்தான்.

மிதிலா நகரத்திற்குள் அவ்விருவரும் பிரவேசித்த பொழுது, "வழிவிடுங்கள், வழி விடுங்கள், மஹாராஜாவிற்கு வழிவிட்டு ஒதுங்கி நில்லுங்கள்!" என்று வீரர்கள் சிலர் அவ்விருவரையும் கேட்டுக் கொண்டனர்.

அதைக்கேட்ட அஷ்டாவக்கிரன், "ஹே வீரர்களே! அங்கஹீனம் உள்ளவர்களும், கண் பார்வையற்றவர்களும், வேதம் ஓதிய வேதியர்களும், பெண்களும், சுமை தூக்குபவர்களும் சென்றால் அரசன் உட்பட அனைவரும் அவர்களுக்கு வழி விட வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று தைரியமாகக் கேட்டான்.

இதைக் கேட்ட ஜனகமஹாராஜரும் அஷ்டாவக்கிரனுக்கும், சுவேதகேதுவுக்கும் தொந்தரவு ஏதுமின்றி ஒதுங்கிச் செல்லும்படி தம்முடைய படையினருக்கு உத்தரவிட்டார்.

பின்னர், யாகம் நடைபெற இருந்த மண்டபத்தினுள் நுழைய முற்பட்ட அஷ்டாவக்கிரன் வாயிற்காப்போனால் தடுத்து நிறுத்தப்பட்டான்.

"வேதியர்கள் நிறைந்த இவ்விடத்தில் நுழைவதற்கு உனக்குத் தகுதி ஏது? என்று கேட்ட வாயிற்காப்போனிடம், "எனது உருவத்தைப் பார்த்து எனது அறிவை எடைபோட வேண்டாம். ஜனக மஹாராஜாவின் அவையிலுள்ள பெரிய வித்துவானாகிய வந்திப் பண்டிதனுடன் நான் வாதிட வந்திருக்கிறேன் என்பதை அரசனுக்குத் தெரிவிப்பாயாக!" என்று அஷ்டாவக்கிரன் உறுதியுடன் கூறினான்.

விஷயத்தைக் கேள்விப்பட்ட ஜனக மஹாராஜர் அஷ்டாவக்கிரனையும், சுவேதகேதுவையும் யாக சாலைக்குள் அழைத்துச் சென்றார். பின்னர் வந்திப் பண்டிதனுடன் நடைபெற்ற வாதப் போரில் அஷ்டாவக்கிரன் வெற்றி பெற்றதுடன், தோல்வி அடைந்த வந்திப் பண்டிதனைச் சமுத்திரத்தில் மூழ்கடிக்கச் செய்து பழிதீர்த்துக் கொண்டான்.

லோமசர் இவ்விதம் தருமபுத்திரருக்குக் கூறிய அஷ்டாவக்கிரனின் சரித்திரத்திலிருந்து நாம் இரண்டு முக்கியமான விஷயங்களை அறிந்து கொள்கின்றோம். யாரொருவரையும் அவருடைய தோற்றத்தைப் பார்த்து மதிப்பிடக்கூடாது. "எழுதாக் கிளவி" என்று அழைக்கப்படுவனவும், பல்லாயிரம் ஆண்டுகளாக வாய்மொழியாகவே கற்பிக்கப்பட்டவையுமான வேதங்களிலுள்ள ஒவ்வொரு சொல்லையும் அதற்கு உரிய ஸ்வரத்துடன் மட்டுமே உச்சரிக்க வேண்டும். ஸ்வரத்தை மாற்றி வேதங்களை உச்சரிப்பது விபரீதத்திற்கே வழிவகுக்கும்.

இந்நிலையில் தற்காலத்தில் வேதத்தில் இடம் பெற்றுள்ள காயத்திரி மந்திரம் மட்டுமின்றி, பல்வேறு தெய்வங்களுக்குரிய ஸ்ரீவிஷ்ணு காயத்திரி, சிவ காயத்திரி உள்ளிட்ட காயத்திரி மந்திரங்களுக்குச் சிலர் மெல்லிசை பாணியில் இசையமைத்துப் பாடுவதையும், அவற்றைத் திருக்கோயில்கள், இல்லங்கள் ஆகியவற்றில் ஒலிக்கச் செய்வதுடன், கைப்பேசிகளில் அழைப்பு ஒலியாக வைப்பதையும் தவிர்க்க வேண்டும் என்பதையும் நாம் அனைவரும் உணர வேண்டும்.

தொடர்ந்து அலசுவோம்...



## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*ரங்கே$_3$ சமுக்$_2$யா அபி ஸூரயஸ்தௌ*
*த்$_3$ருஷ்ட்வா மஹாபூர்ணயுதாய தஸ்மை ।*
*ராமாநுஜார்யாய நிவேத்$_3$ய சாந்தா:*
*ஸ்ரீயாமுநார்யாங்கு$_3$லிமுத்$_3$ரணம் ச ॥*

(35)

**திருவரங்கப் பெருமாளரையர்**
**(ஆளவந்தார் திருக்குமாரரான) முதலான**
**அந்த ஸ்ரீவைஷ்ணவர்கள்,**
**அவ்விருவரையும் பார்த்து, ஆளவந்தார்**
**பரமபதமடைந்ததை அவர்களுக்கு**
**விண்ணப்பித்து ஒருவாறு**
**ஆறுதலடைந்தவர்களாய்,**
**ஆளவந்தாருடைய திருவிரல்கள் மூன்று**
**மடங்கியிருப்பதையும் காட்டினார்கள்.**

– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது



மாத்ருஸ்ரீ தரிகொண்ட
வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

சென்ற இதழின் தொடர்ச்சி...

சுதர்சன ராஜா சேனாதிபதியைப் புகழ்ந்து பாராட்டினார். இவர்களை அழித்ததோடு தம் பணி முடிவடைந்தது என்று சக்கர ராஜா திரும்பி வந்து விட நினைக்கவில்லை. சேஷாசலத்திற்கு வரும் பக்தர்கள் துன்பப்படாமல் இயற்கை எழிலைக் கண்டு மகிழும்படியாக, காட்டிற்கு இடையில் அழகான பாதை அமைத்தார். மேலும், பக்தர்கள் பாதுகாப்பாகத் தங்கிச் செல்லுவதற்கு வழி நெடுகிலும் தங்குவதற்கான வசதியும் செய்தார். இப்பணிகள் எல்லாம் செய்ததோடு இதை நல்லபடியாக நிர்வகிப்பதற்குத் தகுதியான ஒரு ராஜாவை நியமித்து, அறவழியிலே ஆட்சி செய்ய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டார்.

அதோடு சுதர்ஸன ராஜாவின் கடமை முடிந்து விடவில்லை. அதன்பின்பு வடதிசையை நோக்கி பயணப்பட்டார். வடதிசை என்பது இதுவரையில் காணப்படாத அளவில் அமைந்துள்ள அடர்ந்த காட்டுப் பகுதியாகும். அக்காட்டுப்பகுதியில் சக்கர ராஜா இரண்டாம் மார்தாண்டன் போலே நுழைந்தான். அவ்வாறு நுழைந்த சுதர்ஸன ராஜாவைப் பார்த்த இராட்சஸர்கள், அவரின் ஒளி பொருந்திய தோற்றப் பொலிவைக் கண்டு அச்சம் கொண்டு தமக்கும் தம் மக்களுக்கும் ஏதோ அபாயம் உண்டாகப் போகிறது என்பதை உணர்ந்து, உடனே தன் தலைவனான பேருண்டனிடம் சென்று...

சண்டப்ரதாப! பேருண்டபிரபு ஸ்வாமி! ஒரு சிறந்த வீரன் தன் சேனையோடு நமக்கு சொந்தமான இப்பகுதியில் நுழைந்திருக்கிறான். அவனைப் பார்த்தால் சாமானியனாகத் தெரிய வில்லை. ஆயிரம் கரங்களைத் தாங்கியவனாகவும், சிவப்பு ஆடையும் அணிந்திருக்கிறான். மிகவும் பிரம்மாண்ட மான தேரில் ஏறி வந்திருக்கிறான். அவனைப் பார்க்கின்றபோது எங்களுக்கு உடலும் உள்ளமும் நடுங்குகின்றன. இச்செய்தியை உங்களுக்குக் கூறலாம் என வந்தோம் என்றான்.

பேருண்டன், தன் வீரர்கள் சொல்லிய வார்த்தைகளிலிருந்து எதிரி சாமான்யன் இல்லை என்பதைப் புரிந்து கொண்டான். உடனே, வீரர்களே! என்னை அழிப்பதற்காக, அவர்கள் வந்துள்ளார்கள் என நினைக்கிறேன். அதற்காக நான் அஞ்சவில்லை. என்னுடைய வீரபராக்ரமத்தாலும், யுக்தியாலும், சிறந்த வீரர்கள் நிறைந்த இச்சேனையைக் கொண்டும் அவர்களை எதிர் கொண்டு போரிட்டு வெற்றிக் கொள்வோம். அவ்வெற்றியை நம் பிரபுவான இராவணனுக்கு அர்ப்பணிப்போம். இதன் மூலம் பேருண்டன் என்பவன் யார் என்பதை இந்த உலகத் திற்குத் தெரிவிப்போம். இவ்வாறு வீரமொழிகள் பேசியவாறு சுதர்ஸன ராஜாவின் சேனைகள் இருக்கும் திசையை நோக்கிப் புறப்பட்டான்.

இரு தரப்பு வீரர்கள் இடையில் கடும்போர் தொடர்ந்து நடைபெற்றது. போர்க்களம் எங்கும்

திருமலையில் கோவிந்தன் குடிகொண்டு இருப்பதால் இங்கு எந்நேரமும் கோவிந்த நாம ஸ்மரணை செய்தல் வேண்டும்.
அனைவரையும் "கோவிந்தா" என்றே அழையுங்கள். இல்லங்களில் இருந்தாலும் "கோவிந்த நாம" பாராயணம் செய்தல் நன்று.



இரத்த வெள்ளம் பாய்ந்தோடியது. துண்டிக்கப்பட்ட வீரர்களின் கை,கால்கள் எங்கும் சிதறிக் கிடந்தன. யானை, குதிரை, தேர் போன்றவைகள் வெட்டிச் சாய்க்கப்பட்டு குவிந்து கிடந்தன. இரத்த வெள்ளத்தில் மிதக்கும் உடல்களைத் தின்பதற்குக் கழுகுகள் வானில் வட்டமடித்துக் கொண்டிருந்தன. பேய் பிசாசுகளும் தனக்கு உண்ண உணவு கிடைத்ததை எண்ணி மகிழ்ந்து குதித்துக் கும்மாளம் இட்டுக் கொண்டிருந்தன.

எத்தனை நாட்களுக்குப் பிறகு இப்படிப்பட்ட உணவு கிடைத்துள்ளது. வாருங்கள்! அனைவரும் வாருங்கள்!! என்று அழைத்துக் கொண்டிருந்தன. போர் தொடர்ந்து கடுமையாக நடந்துக் கொண்டிருந்தது. பேருண்டன் அஞ்சவில்லை. போரில் இறந்தவர்கள் போக மீதம் இருந்த வீரர்களோடு சுதர்ஸனனை எதிர்த்தான்.

சக்கர ராஜா பேருண்டனைக் கண்டு கோஷித்தான். திக்குகள் யாவும் நடுநடுங்கின. சக்கர ராஜா தன் சக வீரனான பாவகனை ஊக்கப்படுத்தினான். பாவகன் சக்கர ராஜாவின் ஆணைக்கேற்ப புறப்பட்டுச் சென்று பகைவர்கள் மீது சம்மோஹனாஸ்த்ரம் உபயோகித்தான். அப்பொழுது அசுரர்கள் மயக்கம் கொண்டவர்களானார்கள். அதனால் அவர்கள் தம்மவர் யார்? பகைவர் யார் எனப் பிரித்தறிய முடியாமல் தம்மவர் தலைகளை பகைவர் தலையென வெட்டி வீழ்த்திக் கொண்டு மாண்டனர்.

சிறிது நேரம் இந்நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த சக்கரராஜா ஆலோசனையில் முழுகினார். இந்த யுத்தம் அதர்மம் ஆனது. எனவே சம்மோஹன அஸ்த்ரத்தை திரும்பப் பெற்றுக் கொள்ளும்படி ஆணையிட்டார். அதன்பிறகு பாவகன் க்ரௌஞ்சாஸ்த்ரம் பிரயோகித்தார். அந்த அஸ்த்ரம் அசுரர்களின் மூக்கு, செவிகளைத் துண்டித்தது. மேலும், பேருண்டனை வேங்கட நகரத்தை மூன்று முறை சுற்றி வரும் படி செய்து, அழுகிய பூசணிக்காயைத் தரையில் போட்டு உடைப்பது போன்று அவனை அந்த ஆயுதம் தரைமட்டம் செய்தது. இதைக் கண்டு தேவர்கள் மகிழ்ந்தனர்.

சக்கர ராஜா! சுவாமியின் ஆணைக்கிணங்க அனைத்து அசுரர்களையும் கொன்று, சாதுக்களுக்கு ஒரு நம்பிக்கையை உண்டாக்கினீர். உம்மைக் கண்டு ஸ்வாமி புருஷோத்தமன் மிகவும் மகிழ்வார். இது போதும்.... போதும். நீர் சிறந்த வீரன். கருணாமூர்த்தி, உம் வீரம் அளவிடற்கரியது. உன் புகழை யாராலும் எடுத்துரைக்க முடியாது. இனி ஆவேசத்தை கைவிட்டு அமைதி கொண்டு ஶ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியைச் சென்று அடைவாயாக என்று ஆலோசனை கூறி தேவர்கள் தம்தம் இருப்பிடம் நோக்கிச் சென்றனர்.

தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

*பெருமை அறிவோம்...*




**தி.தி.தேவஸ்தானம் பசுக்களை பாதுகாப்பதற்காக "ஶ்ரீவேங்கடேஸ்வரா கோ சம்ரக்ஷணா அறக்கட்டளை"யை நிறுவி அதற்கு பக்தர்களும் நன்கொடைகளை வழங்குவதற்கான நல்வாய்ப்பினையும் ஏற்படுத்தி உள்ளது.**

**நன்கொடை ரூ.1,000/-க்கு குறையாமல் செயலாட்சித் தலைவர், எஸ்.வி.ஜி.எஸ்.டி., தி.தி.தே. திருப்பதி எனும் பெயரில் வங்கி வரைவோலையை எடுத்து, இயக்குனர், ஶ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷணா டிரஸ்ட், ஶ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷண சாலை, தி.தி.தே. எஸ்.வி.யூ. அஞ்சல், திருப்பதி-517 502 எனும் முகவரிக்கு அனுப்பவும். ஶ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷணா அறக்கட்டளைக்கு வழங்கும் நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கும் உண்டு.**



# திருமலையில் வைகுண்ட ஏகாதசி

திருவேங்கடமுடையான் திருமகளை திருமார்பில் தாங்கி என்றென்றும் நின்று பக்தர்களுக்கு அருள் சாதிக்கும் திருமலையில் நித்திய கல்யாணம் பச்சைத் தோரணம் தான். அந்த திருமலையில்தான் எத்தனை உத்ஸவங்கள். எத்தனை விசேஷங்கள்! முக்கியமான அவற்றில் ஒன்று வைகுண்ட ஏகாதசி உத்ஸவம். இது மார்கழி மாதம் வருகிறது. வருடத்தில் ஒவ்வொரு மாதத்திலும் இரண்டிரண்டு ஏகாதசிகள் வரும். ஒவ்வொரு பௌர்ணமிக்கும், ஒவ்வொரு அமாவாசைக்கும் அடுத்த நாளிலிருந்து 15 நாட்கள் ஒரு பக்ஷமாகும். அதில் பதினொன்றாம் நாள் ஏகாதசி. அவை அனைத்துக்கும் பெயர்களும், சிறப்புகளும் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றில் மார்கழி மாதத்தில் வரும் இந்த வைகுண்ட ஏகாதசி மிகச் சிறப்பானது. ஆஸ்தீக அன்பர்கள் அனைவருமே குறிப்பாக வைணவர்கள் வைகுண்ட ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்து சிறப்பு பெறுகிறார்கள்.


அன்று சந்நிதிக்கு அடுத்து உள்ள பிரகாரத்திலேயே சொர்க்க வாசல் ஒன்று ஏற்படுத்தியிருப்பார்கள். அதன் வழியே வந்து பெருமாளை தரிசித்தால் எத்தனையோ நன்மைகள், மோக்ஷமடையும் வழி கிடைக்கும் என்றெல்லாம் சொல்லப்பட்டு இருக்கின்றன. திருமலையில் பொற்தேரில் தன் தேவியருடன் திருமலையப்ப ஸ்வாமி திருமாட வீதிகளில் எழுந்து அருள்வார். அதற்கு மறுநாள் சக்கர ஸ்நானம் நடைபெறும்.

இந்த ஏகாதசி உத்ஸவம் எப்படி வந்தது எனப் பார்க்கலாம். முன்னொரு காலத்தில் முரன் என்ற அரக்கன் மஹாவிஷ்ணுவுடன் போரிட்டபோது, மஹாவிஷ்ணுவின் உடலில் இருந்து ஒரு பெண் உருவம் தோன்றி, தனது சக்தியால் முரனை எரித்துச் சாம்பலாக்கியது. அதனால், அத்தேவியின் செயலால் மிகுந்த திருப்தி அடைந்த மஹாவிஷ்ணு தேவிக்கு “ஏகாதசி” என்று பெயர் சூட்டி ஏகாதசி நாளில் விரதம் இருப்பவர்கள், வைகுண்டம் அடைவார்கள் என்றும் வரம் அளித்தார்.

குறிப்பாக வைகுண்ட ஏகாதசி தினத்தன்று பக்தர்கள் விரதம் இருந்து மஹாவிஷ்ணுவைத் தியானித்தால் நிச்சயம் வைகுண்டத்தை அடைவார்கள் என்பது உண்மை.

வைகுண்ட ஏகாதசி விரதம் ஒரு முக்கிய அம்சமாகும். பக்தர்கள் காலையிலும், இரவிலும் விரதம் இருந்து பெருமாளை வழிபடுவார்கள். அனைத்து ஏகாதசி நாட்களிலும் விரதம் இருப்பது

## பிழைபொறுப்பாய் கடவுளே!



# வாழ்வியல் நெறிகள்

*சொல்லால் வருங்குற்றம்; சிந்தனையால் வரும்தோடம் செய்த*
*பொல்லாத தீவினைப் பார்வையின் பாவங்கள்; புண்ணியநூல்*
*அல்லாத கேள்வியைக் கேட்டிடும் தீங்குகள் ஆயவும் மற்று*
*எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே!*

– பட்டினத்தார்

பொருள் : காஞ்சிபுரத்து ஏகாம்பர நாதனே! வார்த்தையால் நேரும் பிழைகள், எண்ணத்தினால் உண்டாகும் குற்றங்கள், உடம்பால் செய்த தீய செயல்கள், கண்ணினால் விளையும் தீமைகள், தருமநூல் அல்லாத பிற நூல்களைக் கேட்டலால் வரும் கொடுமைகள், பிறகுற்றங்கள் எல்லாவற்றையும் பொறுத்து அடியேனுக்குத் திருவருள் செய்வாய் பெருமானே!

**வாழ்வியலுக்கான கருத்து** : மனம், வாக்கு, காயம் (உடம்பு) இவற்றினால் நிகழ்த்தப்படும் குற்றங்கள் தெய்வ தண்டனைக்கு உரியவை. ஆகவே மனத்தூயதானால், மற்றவற்றால் வரும் குற்றங்களும் வாரா! அவர்களே ஆண்டவனுக்கு ஆளாகி அன்பு செய்யத் தக்கவர்.

***-தொகுப்பு :முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை***

நல்ல உடல் மற்றும் மன ஆற்றலைத் தருவதோடு, நமது கடந்த ஜென்ம பாவங்கள் நீங்கி, நம் வாழ்க்கையில் மிக்க மனநிறைவினைத் தரும். வைகுண்ட ஏகாதசித் திருநாளை வைணவத் தலங்களில் விமரிசையாகக் கொண்டாடுவர். தசமி அன்று ஒரு வேளை மாத்திரம் உணவு உட்கொண்டு, இரவு விரதம் இருக்க வேண்டும். மறுநாள் ஏகாதசி அன்று முழுவதும் விரதம் இருந்து இறைவனின் திருநாமங்களைச் சொல்லிக் கொண்டு, அன்று இரவு கண் விழிக்க வேண்டும். அப்பொழுது பரமபத சோபன படம் என்னும் விளையாட்டை விளையாடுவார்கள். அதில் நாம் செய்யும் புண்ணியங்களை குறிப்பது ஏணிபடிகள்அவை நம்மை ஏற்ற, நாம் செய்யும் பாவங்களைக் குறிப்பது பாம்புகள் நம்மை இறக்குவது இந்த விளையாட்டின் தத்துவம் என்பது வழக்கு. மறுநாள் துவாதசியன்று விடியற்காலையில் தீர்த்தமாடி பாரணை செய்து விரதத்தை முடிக்க வேண்டும். அன்று மதியம் உறங்குதல் கூடாது. இந்த ஒரு ஏகாதசி விரதம் இருந்தாலே வருடத்தில் 24 ஏகாதசிகளும் விரதம் இருந்த பலன் கிடைக்கும் என்பது ஐதீகம்.



வைகுண்ட ஏகாதசி அன்று திருமலையில் இலட்சோபலட்சம் பக்தர்கள் குவிகிறார்கள். அன்று வைகுண்டவாயில் பிரகாரம் திறக்கப்பட்டு பக்தர்கள் அவ்வாயில் வழியாகச் செல்ல இயலும். அதுமட்டுமின்றி உபய நாச்சியாருடன் திருமலையப்ப ஸ்வாமி தங்கத்திருத்தேரில் உலா வருவது வருணிக்க வார்த்தை இல்லை. ஏகாதசி விரதத்தை சிரத்தையாகக் கடைப்பிடித்து அனைவரும் ஸ்ரீமஹா விஷ்ணுவின் திருப்பாத கமலங்களைப் பற்றுவது மிகச் சிறப்பாகும்.

**– திருமதி மைதிலி சம்பத், செகந்திராபாத்,**
**81256 16876**



# பதஞ்சலியின் யோக சூத்திரங்கள்

- திரு.எம்.எஸ்.சுகுமார்,சென்னை, 8838252312.

சென்ற இதழின் தொடர்ச்சி...

**சூத்திரம் 17 :** *"சப்தார்த்த ப்ரத்யயா னாமி தரேத ராத்யாஸாத் ஸங்கரஸ் தத்ப்ரவிபாக சஞ்யமாத் ஸர்வபூதரு தத்ஞானம்"*

அனைத்து பிராணிகளின் சொல் உதாரணமாக "பசு" என்ற ஒரு சொல், அதன் பொருள், அந்த பொருளின் ஞானம் அதாவது விரிவாக அறியப் படுவது. இம்மூன்றும் பரஸ்பரம் ஒன்றை ஒன்று சார்ந்திருப்பதால் அந்த சொல்லை உச்சரித்தவுடன் அந்த மூன்றும் தனித்தனியாக உணரப்படா மல் அந்த வஸ்து மட்டும் புரியும். அப் படி அல்லாமல் ஒரு வஸ்து அல்லது விஷயத்தின் சொல் – பொருள் – அறி யும் ஞானம் – இம்மூன்றையும் தனித் தனியாக (வகுத்து) சஞ்யமம் செய் தால் அனைத்துப் பிராணிகளின் (அந்த பிராணிகள் என்ன பேசுகின்றன என்று) பாஷைகளைப் புரிந்து கொள்ளலாம்.

**சூத்திரம் 18 :** *"ஸம்ஸ்காரஸாக்ஷாத் கரணாத் பூர்வஜாதிக்ஞானம்"*

சித்தத்தில் படிந்திருக்கும் சம்ஸ் காரத்தில் சஞ்யமம் செய்தால் பூர்வ ஜன்ம ஞானம் உண்டாகும். சித்தத்தில் சம்ஸ்காரம் இரண்டு வகைப்படும். ஒன்று நினைவுகள். அவை விதை வடிவமாக இருக்கும். அந்த விதை போலிருக்கும் சம்ஸ்காரங்கள் அந்த நினைவுகளுக்கும் கிலேசங்களுக்கும் காரணமாக இருக்கும். மற்றொன்று கர்மா பல வாசனைகளாக இருக்கும். அதாவது வாசனை என்பது சித்தத்தில் படிந்திருக்கும் அழுக்கு அல்லது பிறவிக்குணம் என்று சொல்லப்படும் இயல்பு.

வாசனையின் காரணங்கள் – பிறவி, ஆயுள், போகம் (அனுபவிப்பது). இவற்றில் சுக துக்கங்கள் காரணமாக அமைந் திருக்கும். இவை புண்ணிய பாவங்களாக இருக்கின்றன.

இப்பிறவியிலும், கடந்த பிறவிகளிலும் செய்த கர்மங்களால் சுபாவமும், இயல்பும், குணங்களும், சுக துக்கங்களும் சம்ஸ் காரங்களாக சித்தத்தில் படிந்திருக்கின்றன. அல்லது பதிவாகி விட்டவை என்று கூறுகிறார்கள்.

பரிணாமம், செயல், சக்தி, ஜீவாத்மா, தர்மம் இவையெல் லாம் கண்களுக்குப் புலப்படாதவை. ஆனால் உணர்வுபூர்வமாக அறியக் கூடியவை. அதுபோலவே மேற்சொன்ன சம்ஸ்காரங்கள் யாவும் பிரத்யட்சமாகக் காண முடியாவிட்டாலும் உணர்வு பூர்வமாக வெளிப்படக் கூடியவை. அந்தந்த நேரத்தில் அந்தந்தப் பாதிப்பால் உணர்ச்சிகள் வெளிப்படும்.

**சூத்திரம் 19 :** *"ப்ரத்யயஸ்ய பரசித்தக்ஞானம்"*

பிறர் சித்தத்தின் எண்ணச் சலனங்களில் சஞ்யமம் செய்தால் அவர்கள் நினைப்பதனை அறிந்து கொள்ளலாம். அவ்வாறு எண்ணங்களில் சஞ்யமம் செய்தால் அவர்கள் முகத்தை அல்லது கண்களை, ஆகிருதியைப் பார்த்து அவர்கள் என்ன நினைக்கிறார் கள் என்பதை யோகி அறிந்து கொள்வான். அவர்கள் சித்தம் பற்று, பகையுடன் இருக்கிறதா அல்லது வைராக்கியம் கொண்டுள்ளார்களா என்பதையும் அறிந்து கொள்வான்.

**சூத்திரம் 20 :** *"நசதத் ஸாலம்பனம் தஸ்ய விஷயீ பூதத்வாத்"*

பிறர் சித்தமானது பல விஷயங்களைச் சார்ந்திருப்பதை அறிந்து கொள்ள முடியாது. அதாவது முன் சொன்ன சூத்திரத்தில் பிறர் சித்தத்தின் எண்ணச் சலனங்களில் சஞ்யமம் செய்வதை

கூறியிருந்தார்கள். அதில் சித்தத்தின் இயல்பு பற்று பகைகளுடன் இருக்கின்றனவா, அல்லது பற்றற்று வைராக்கியத்துடன் இருக்கிறதா என்பதைத்தான் அறிய முடியும். எந்தெந்த விஷயங்களில் பற்று இருக்கிறது, துவேஷம் இருக்கிறது என்பதை அறிய முடியாது. சித்தம் சிந்திக்கும் விஷயங்களில் சஞ்யமம் செய்யாமல் சித்தத்தின் எண்ணங்களில் இயல்பு மட்டும் சஞ்யமம் செய்யப்படுகிறது. எந்த விஷயத்தில் சஞ்யமம் செய்யப்படுகிறதோ அது மட்டுமே பலன் அளிக்கும். மேலும் சஞ்யமம் செய்யப்படும் விஷயத்தைப் பற்றி ஓரளவு முன்பே அறிந்திருக்க வேண்டும்.

**சூத்திரம் 21 :** *"காயரூபஸஞ்யமாத் தத்க்ராஹ்ய சக்தி ஸ்தம்பே - சக்ஷுஃ ப்ரகாசா ஸம்ப்ரயோக அந்தர்தானம்"*

தன் சொந்த சரீர உருவத்தில் சஞ்யமம் செய்தால் கண்களால் அந்த உருவத்தை உள் வாங்கும் சக்தி செயலற்று நின்று போய்விடும். அதன் விளைவால் பிறர் பார்வையின் ஒளியில் தொடர்பு இல்லாமல் போகும். அதாவது கண்களால் கிரகிக்கும் சக்தி இல்லாமல் யோகியின் சரீரம் மறைந்து போகும்.

**சூத்திரம் 22 :** *"ஸோபக்ரமம் நிருபக்ரமம் சகர்ம தத்ஸஞ்யமாத பராந்த க்ஞானமரிஷ்டேப்யோ வா"*

பொதுவாக மனிதனுக்கு ஆயுளில் இரண்டு வித கர்மங்கள் நிகழ்கின்றன. ஒன்று ஸோபகிரமம். மற்றொன்று நிருபக்கிரமம். இந்த இரண்டு கர்மங்களில் சஞ்யமம் செய்தால் தனக்கு நேரப்போகும் மரணத்தை யோகி தெரிந்து கொள்வான் அல்லது சில கேடுகளைப் பற்றி அறிந்தும், வரப்போகும் மரணத்தையும் அறிந்து கொள்வான்.

ஒரு மனிதனின் ஆயுள் கணக்கு பூர்வஜன்ம கர்மத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. கர்மங்களின் கணக்கும் அதாவது இத்தனை கர்மங்கள் அனுபவித்து கழிந்த பின் ஆயுள் முடியும் என்ற கணக்கும் நிர்ணயிக்கப்படுகிறது. இதில் ஸோபக்கிரமம் என்பது மனிதன் ஆயுளை முடிக்க வேகமாக செயல்படும் கர்மங்கள்—இதில் மனிதன் ஆயுளில் அதிகப்படியான கர்மங்கள் அனுபவித்து முடிந்திருக்கும். கொஞ்சமே மீதமிருக்கும் கர்மங்கள். மற்றொன்று நிருபக்கிரமம் – இந்த கர்மங்கள் மந்தமாகச் செயல்படும் அல்லது இந்த கர்மங்கள் பலன் தரத் தாமதமாகிக் கொண்டிருக்கும்.

தொடரும்....

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## கோயிலுக்கு ஒரு கோமாதா



திருவேங்கடமுடையானின் அவதார வரலாற்றில், ஒரு பசுதான் முதலில் தரிசித்து சீனிவாசனே கோவிந்தன் என்பதையும் நமக்குக் காட்டியருளியது. புற்றிலே வீற்று இருந்த எம்பெருமானுக்கு தன் மடியிலிருந்த அமிர்தமான பாலைத் தானாகவே சுரந்து இறைவனின் பசியைப் போக்கியது. மனிதன் உயிருடன் இருக்கும் பொழுது அவனுக்கு ஐச்வர்யம் அளிக்கும் பசுவை "கோதானம்" செய்வதன் மூலம் அவன் இறந்த பின்னும் உத்தம லோகத்தில் அவனைச் சேர்க்கின்றது.

காலையில் எழுந்தவுடன் ஒவ்வொருவரும் பசுமாட்டை தொழும் கலாச்சாரம் நம் பாரத தேசத்தில் உள்ளது. ஆனால் இன்றைய இயந்திர உலகில் நகர மயமாக்களின் காரணமாக பசுக்களைப் பராமரிப்பது மிகவும் அரிதான ஒன்றாக இருக்கின்றது. இதற்காக தி.தி.தேவஸ்தானம் மேற்கொண்டுள்ள "குடிக்கோ கோமாதா" அதாவது "கோயிலுக்கு ஒரு கோமாதா" திட்டம் வாயிலாக ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு பசுவும், அதன் கன்றும் அளிப்பதன் மூலம் அங்கு கோ பூஜை நாள்தோறும் நடைபெறுகிறது. அதனால் மக்கள் பண்டைய நடைமுறையைத் தமக்கு விருப்பமான நாட்களில் செய்து கொள்ள தி.தி.தே. வழிவகுத்துக் கொடுத்துள்ளது. இதனால் பசுவின் பாலும், தயிரும் கொண்டு பிரசாதம் செய்து அந்தந்தக் கோயில்களில் நைவேத்தியம் படைக்க உதவும். அதுமட்டுமல்லாமல் பசுவின் கோமியமும், சாணமும் உரமாகத் தோட்டத்திற்கு பயன்படுத்துவதன் மூலம் அந்த இடத்தையே இயற்கை வளமிக்கதாக மாற்ற முடிகிறது.

நமது இந்து சம்பிரதாயத்திலும், தர்ம சாஸ்திரங்களிலும், புராணங்களிலும், இதிகாசங்களிலும் பசுவை மேன்மையானதாகக் கூறப்பட்டுள்ளது. கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்கி, அதனோடு கன்றுடன் பசுவை வணங்குவதால் அனைத்துத் தேவதைகளும் வணங்கிய புண்ணியமும், அனைத்துச் செல்வங்களும் நாம் கிடைக்கப் பெறுவோம்.





# கோவிந்தனுடன் கோதை



தனுர் (மார்கழி) மாதம் என்றாலே கோதா தேவியே முதலில் நினைவிற்கு வரும் விதத்தில் பல்வேறு உத்ஸவங்கள், பூஜைகள் நடைபெறும். ஆண்டாள் நோன்புற்று திருமாலை அடைந்ததுபோல் நாமும் மார்கழி நோன்பிருந்தால் வாழ்வில் பல வளங்களைப் பெற திருமாலுக்கு பரிந்துரை செய்து அருளுகிறாள். கோதையை வழிபட்டு கோவிந்தன் அருளைப் பெற்றிடுவோம்.

**– திருமதி எஸ். திருவேணி, நங்கைநல்லூர்.**

பெரியாழ்வாரின் திருமகளும் பூமிப்பிராட்டியின் அம்சமுமான ஆண்டாள் திருப்பதியில் பல ஆலயங்களில் எழுந்தருளி அருள்பாலிக்கிறாள். அவற்றில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும் ஆலயங்கள் சில. அலிபிரி பாதாள மண்டபத்தில் ஸ்ரீலக்ஷ்மி நாராயணர் ஆலயத்தில் மூல மூர்த்திக்கு வலப்புறத்தில் ஸ்ரீஆண்டாள் தாயாரும், இடப்புறத்தில் அவளுடைய தந்தையான பெரியாழ்வாரும் நின்ற திருக்கோலத்தில் அருளுகின்றனர்.

ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி ஆலயத்தில் பள்ளி கொண்ட திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ள கோவிந்தனின் வலப்புறத்தில் ஸ்ரீஆண்டாள் தனிச்சன்னதி கொண்டு அருளுகிறாள். இந்த ஆண்டாள் திருவடிவத்தை ஸ்ரீமத் இராமாநுஜர் பிரதிஷ்டை செய்தார்.

இவ்வாலயத்தில் தினமும் பல்வேறு உத்ஸவங்கள் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. குறிப்பிடத்தக்க உத்ஸவ வரிசையில் ஆண்டாள் நீராட்டோத்ஸவம், திருப்பாவை பாராயணம், ஆண்டாள் திருக்கல்யாணம் போன்றவை மார்கழி மாதத்தில் ஆண்டாளுக்கு நடைபெறும் உத்ஸவங்களாகும்.

### ஆண்டாள் நீராட்டோத்ஸவம்

மார்கழி முதல் நாளிலிருந்து திருமலை ஆலயம் முதற்கொண்டு தேவஸ்தான ஆலயங்களில் சுப்ரபாதத்திற்கு பதிலாக திருப்பாவையே அதிகாலையில் எம்பெருமான் துயிலெழுப் பாடப்படுகிறது. இந்நிகழ்விலிருந்தே பன்னிரு ஆழ்வார்களில் ஆண்டாளின் முக்கியத்துவம் அறிய முடிகிறது. ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி ஆலயத்தில் மார்கழி முதல் நாள் முதற்கொண்டு "மஞ்சிநீலகுண்டா" என்ற புஷ்கரணியிலிருந்து யானையின் மீது கொண்டுவரப் படும் தீர்த்தத்தினால் அபிஷேகம் செய்வர்.

போகிப் பண்டிகைக்கு முதல் ஏழு நாட்கள் கோதா தேவி அதிகாலையில் ஆலயத்திலிருந்து மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் சர்வாலங்காரபூஷிதையாக எழுந்தருளுவாள். தாயாருக்கு எதிர்ப் புறமாக ஒரு கண்ணாடி வைத்து அலங்கரித்திருப்பர். அக்கண்ணாடி வழியாகத் தாயாரைத் தரிசிப்பதற்கும், பக்தர்கள் தத்தம் வாசலில் அரிசி மாவினால் பெரிய பெரிய கோலங்களை இட்டு, அதன் மேல் பசுஞ்சாணத்தை வைத்து, பூசணிப் பூவினால் அலங்கரித்து, இல்லங்களின் முற்றத்தில் தீபங்களை ஏற்றுவர். திருப்பாவை பாராயணத்திற்குப் பின்னர்

வீதிகளில் எழுந்தருளும் ஸ்ரீஆண்டாளுக்குத் தேங்காய், பூ, பழங்கள் என நிவேதனத்துடன் பக்தர்கள்ஆரத்தித் தட்டுகளை வைத்துக்கொண்டு வீதியில் ஆண்டாள் வருகைக்காகக் காத்துக் கிடப்பர்.

ஆண்டாள் பல்லக்கில், மங்கள வாத்தியங்கள் முழங்க, பாராயணதாரர்கள் பாராயணம் வாசிக்க, மின்விளக்குகள் மற்றும் தீப்பந்தங்கள் ஒளியில் ஜொலித்துக் கொண்டு வந்து அனைவரின் ஆரத்திகளை ஏற்றுக்கொண்டு நமக்கு பக்தி அருளினை வழங்குவாள். அவ்வாறாக வழிநெடுகிலும் ஆரத்திகளை ஏற்று ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி ஆலயத்திற்கு எதிரில் அமைந்துள்ள இராமச்சந்திரா புஷ்கரணிக் கரையில் இருக்கும் திருமண்டபத்திற்கு எழுந்தருளுவாள். அங்கு தாயாருக்கு தூப,தீப, நிவேதனங்கள் சமர்ப்பிக்கப்படும். மீண்டும் அந்தி சாயும் மாலை நேரத்தில் திருச்சியில், ஸ்ரீகோதண்ட ராமர் ஆலயத்திற்கு எழுந்தருளி அங்கு திருவமுது கண்டருளி, ஆலய மாட வீதிகள் வழியாக ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி ஆலயத்தை அடைவாள்.

போகிப்பண்டிகை அன்று போகித் தேர் மிகச் சிறப்பாக நடைபெறும். ஸ்ரீகிருஷ்ணருடன் கோதா தேவி நன்கு அலங்கரிக்கப்பட்ட திருத்தேரில் எழுந்தருளி, திருவீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருளுவாள்.

காணும் பொங்கல் அன்று ஆழ்வார் தீர்த்தம் எனும் கபிலதீர்த்தத்தில் ஸ்ரீகோதாதேவி எழுந்தருளி, திருமஞ்சனம் கண்டருளி திருவீதி வலமாக ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயத்திற்கு வந்து அடைவாள். அன்றைய தினம் மாலை நேரத்தில் ஸ்ரீகிருஷ்ணருடன் மிகச் சிறப்பான முறையில் திருக்கல்யாணம் நடைபெறும்.

திருமலை திருப்பதி தேவஸ்தான ஆலயங்களில் மார்கழி மாதத்தில் அதிகாலையில் திருப்பாவை பாசுரங்கள் துதிப்பதுடன், ஆழ்வார் திவ்ய பிரபந்தத் திட்டத்தின் வயிலாக மாலை நேரங்களில் திருப்பாவை பாசுர பாராயணமும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.



## தியாகராஜர் கீர்த்தனையைக் கேட்கும் திருப்பதி ஸ்ரீகோதண்ட ராமர்

தியாகராஜ சுவாமிகள் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவர். ஒவ்வொரு வருடமும் ஸ்ரீதியாகராஜ சுவாமிகளின் ஆராதனை மஹோத்ஸவம் திருவையாறில் மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. அன்று கர்நாடக சங்கீத மஹோன்மணிகள் எல்லோரும் ஒன்று கூடி தியாகராஜ சுவாமிகள் அருளிய பஞ்சரத்ன கீர்த்தனைகள் ஒரே குரலில் பாடுவதும், வித்வான்கள் தம் இசைக்கருவிகளை ஒரே விதமாக இசைப்பதும் பார்ப்பதற்கும், கேட்பதற்கும் விருந்தாக அமையும் விதத்தில் நடைபெறும்.

பஞ்ச ரத்ன கீர்த்தனைகள் :

1) ஜகதாநந்த காரகா ஜய ஜானகீ ப்ராண நாயக...

2) துடுகு கல நந்நே தொர கொடுகு ப்ரோசுரா எந்தோ...

3) ஸாதிஞ்சநெ ஓ மநஸா...

4) கனகன ருசி ராக நகவஸந நிந்து...

5) எந்தரோ மஹாநுபாவுலு அந்தரிகி வந்தநமு...

புஷ்ய பகுள பஞ்சமி அன்று தியாகராஜ ஆராதனையை முன்னிட்டு திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி சீதையுடன், லக்ஷ்மண ஸ்வாமியுடன் திருமாட வீதிகளில் உலா வந்து பின்னர், ஆஸ்தானம் நடைபெறும். அங்கு பஞ்ச ரத்ன கீர்த்தனைகள் மற்றும் ஸ்ரீராம கீர்த்தனைகளைப் பாடிய பின்னர், நைவேத்தியம் மற்றும் மங்கள நீராஜனங்கள் நடைபெறும்.

# குறுக்கெழுத்துப் புதிர் -102

**இடமிருந்து வலம்**

1. கருட பகவானின் பெயர்களுள் ஒன்று....(5)
6. கருடனின் தாயார்......(3)
15. கருடனின் மனைவியர்...(3)...(5)
18. மகாபாரதப் போரில் படைகள் கடைசி நாளில் அமைத்தது....(7)

**வலமிருந்து இடம்**


02. நாச்சியார் கோவிலில் மூலவராக இருப்பவர்....(6)
08. பெருமாள் கோயில் திருவிழாக் களில் முக்கியமான திருவிழா...(5)
17. கருடனின் தந்தை....(5)
20. பாவத்திற்கான தண்டனைகளைப் பற்றிக் கூறும் நூல்.....(7)

**மேலிருந்து கீழ்**

3. பஞ்சமுக ஆஞ்சநேயரின் பின்புற மாக உள்ளது....(6)
4. நவரத்தினங்களுள் ஒன்றான மரகதத்திற்கு ....(7) என்று பெயர்.
5. பெருமாளின் வாகனமான கருடனுக்கு ....(7) என்றும் பெயர்.
10. பாற்கடலைக் கடைய மத்தாக இருந்தது....(6).
11. கருடன் தேவலோகத்தில் இருந்து அமிர்தத்துடன் கொணர்ந்தது ...(6)

**கீழிருந்து மேல்**

07. சப்த மாதர்களுள் ஒருவரான ...(4)க்கு கருடன் வாகனமாக உள்ளார்.
09. பறவைகளின் அரசன் என்பதால் கருடனுக்கு ....(4) என்று பெயர்.
12. இராமதூதன் அனுமனுக்கு ....(7) என்றும் பெயர்.
13. பறவை இனங்களில் நான் கருடன் என்று கூறியவர் .....(8).
14. பாம்பு, அமிர்த கலசத்துடன் கருடன் வீற்றிருக்கும் திருத்தலம் ....(7).



**தொகுப்பு: திருமதி இராஜகுமாரி, ஆரணி, 99762 38430.**

புதிருக்கு விடை அறிய 47ம் பக்கம் பார்க்கவும்...

16. ......(7) என்ற பாம்பை கருடன் மாலையாக அணிந்து உள்ளார்.
19. ......(9) திருத்தலத்தில் இரு கைகளையும் காட்டியபடி கருடன் காட்சி தருகிறார்.
21. கருடனின் அண்ணன்.....(4)

**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**

- திருமலையில் தண்ணீரை வீணாக்காதீர்கள். தேவையில்லாமல் குழாயைத் திருப்பி விட்டுச் செல்லாதீர்கள்.
- திருமலையில் மின்சாரத்தை வீணாக்காதீர்கள்.
- வெளியே செல்லும் போது மின்விசிறிகள், விளக்குகள், செல் போன் சார்ஜிங் ஆகியவற்றை நிறுத்தி விட்டுச் செல்லவும்.
- திருமலையில் அன்னப்பிரசாதத்தை வீணாக்காதீர். வேண்டிய அளவிற்கே வாங்கிக் கொள்ளவும்.
- திருமலையில் குப்பைகளை கண்ட இடங்களில் வீசி எறியாமல் குப்பைத் தொட்டிகளிலேயே போடவும். திருமலையில் பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்யப்பட்டுள்ளது. அதை பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.

## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

### 2025-ஆண்டிற்கான பண்டிகை மற்றும் பருவ தினங்கள்

### ஜனவரி 2025

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |



உபய தேவியருடன் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை

### பிப்ரவரி 2025

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | |

### மார்ச் 2025

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

### ஜனவரி 2025

01 ஆங்கில வருட பிறப்பு
06–12 ஆண்டாள் நீராட்டோத்ஸவம்
08–12 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம், 10 வைகுண்ட ஏகாதசி
11 ஸ்வாமி புஷ்கரணி தீர்த்த முக்கோட்டி
13 போகி, 14 மகர சங்கராந்தி–பொங்கல்
15 மாட்டுப்பொங்கல், ஆண்டாள் பரிணயோத்ஸவம்,
17 திருமழிசையாழ்வார் திருநட்சத்திரம்
26 இந்தியக் குடியரசு தினம்
29–பிப்06 தேவுனிகடப ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

### பிப்ரவரி 2025

03 வசந்த பஞ்சமி, 04 இரத சப்தமி,
05 பீஷ்மாஷ்டமி,
06–12 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி தெப்போத்ஸவம்,
08 பீஷ்ம ஏகாதசி, 12 இராமகிருஷ்ண தீர்த்த முக்கோட்டி
18–26 ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
19–28 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம், 26 மஹாசிவராத்ரி
27 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி திருக்கல்யாணம்

### மார்ச் 2025

06–14 தரிகொண்ட ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
09 குலசேகராழ்வார் திருநட்சத்திரம்
09–13 திருமலையப்ப ஸ்வாமி தெப்போத்ஸவம்
14 ஸ்ரீலக்ஷ்மி ஜெயந்தி, குமாரதாரா தீர்த்த முக்கோட்டி, 24–28 சூரியப்பூஜையை முன்னிட்டு நாகுலாபுரம் ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி தெப்போத்ஸவம்
27–ஏப்.04 திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்,
30 யுகாதி,தெலுங்கு வருட பிறப்பு (விஷ்வாவசு நாமம்)
31 மத்ஸ்ய ஜயந்தி

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## 2025-ஆண்டிற்கான பண்டிகை மற்றும் பருவ தினங்கள்



உபய தேவியருடன் ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி, திருப்பதி

### ஏப்ரல் 2025

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | | | |

### மே 2025

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

### ஜூன் 2025

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

### ஏப்ரல் 2025

03–11 வாயல்பாடு ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம், 06 ஸ்ரீராமநவமி

06–14 ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்,

10–12 திருமலையப்ப ஸ்வாமி வஸந்தோத்ஸவம்,

11 ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி திருக்கல்யாண உத்ஸவம்,

12 தும்புரு தீர்த்த முக்கோட்டி

13–21 நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயணஸ்வாமி பிரம்மோத்ஸவம், 14 தமிழ் வருட பிறப்பு,

30 பரசுராம ஜெயந்தி, அக்ஷய திருதியை

### மே 2025

02 இராமானுஜ ஜெயந்தி, சங்கர ஜெயந்தி

06–08திருமலை ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயம்

09–12திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வஸந்தோத்ஸவம்

10 மதுரகவியாழ்வார் சாத்துமுறை

11 ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி, வெங்கமாம்ப ஜெயந்தி,

11–19ரிஷிகேஷ்/நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

12 ஸ்ரீகூர்ம ஜெயந்தி,அன்னமய்யா ஜெயந்தி

13 திருப்பதி ஸ்ரீகங்கை அம்மன் சித்திரைத் திருவிழா,

19–27கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவம், 22 ஹனுமத் ஜெயந்தி

### ஜூன் 2025

02–10 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

06–10 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் தெப்போத்ஸவம்

07–15 அப்பளாயகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

09 நம்மாழ்வார் சாத்துமுறை

09–11 திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்

17–19 திருச்சானூர் ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி அவதாரோத்ஸவம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## 2025-ஆண்டிற்கான பண்டிகை மற்றும் பருவ தினங்கள்

### ஜூலை 2025

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |



உபய தேவியருடன் ஶ்ரீகல்யாணவேங்கடேச ஸ்வாமி,
ஶ்ரீநிவாசமங்காபுரம்

### ஆகஸ்ட் 2025

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

### செப்டம்பர் 2025

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

### ஜூலை 2025

05 பெரியாழ்வார் சாத்துமுறை
06 சாதுர் மாத விரதமாரம்பம்
06–08 திருப்பதி ஶ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்
06–09 திருப்பதி ஶ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம் 10 வியாச ஜெயந்தி ஆஷாட பௌர்ணமி, குரு பௌர்ணமி
16 திருமலையப்ப ஸ்வாமி ஆனிவர ஆஸ்தானம்
25 ஶ்ரீசக்கரத்தாழ்வார் திருநட்சத்திரம்
28 நாகசதுர்த்தி, ஆண்டாள் திருவாடிப் பூரம், 29 கருட பஞ்சமி

### ஆகஸ்ட் 2025

04–07 திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம்
06 துளசி மாஹாத்மியம்
06–08 கார்வேடிநகரம் ஶ்ரீவேணுகோபால ஸ்வாமி தெப்போத்ஸவம்
08 வரலக்ஷ்மி விரதம்
09 ஶ்ரீவிகனச ஜெயந்தி, ஹயக்ரீவ ஜெயந்தி
10 காயத்ரி ஜபம்,
15 இந்திய சுதந்திர தினம்,
16 ஶ்ரீகிருஷ்ணாஷ்டமி, கோகுலாஷ்டமி
25 ஶ்ரீவராஹ ஜெயந்தி, பலராம ஜெயந்தி
27 விநாயக சதுர்த்தி,
28 ரிஷி பஞ்சமி

### செப்டம்பர் 2025

02–05 திருப்பதி ஶ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பவித்ரோத்ஸவம்
04 ஶ்ரீவாமன ஜெயந்தி
04–07 திருச்சானூர் ஶ்ரீபத்மாவதி தாயார் பவித்ரோத்ஸவம்
06 அனந்த பத்மநாப ஸ்வாமி விரதம்
21 மஹாளய அமாவாசை
24–அக்.02 திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவம், திருச்சானூர் ஶ்ரீபத்மாவதி தாயார் நவராத்ரி உத்ஸவம் 28 கருட சேவை
29 சரஸ்வதி பூஜை, 30 துர்காஷ்டமி

## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## 2025-ஆண்டிற்கான பண்டிகை மற்றும் பருவ தினங்கள்



உபய தேவியருடன் ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி, அப்பளாயகுண்ட்டா

### அக்டோபர் 2025

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

### நவம்பர் 2025

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 30 | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

### டிசம்பர் 2025

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

### அக்டோபர் 2025

01 திருமலையப்ப ஸ்வாமி திருத்தேர்,
02 திருமலையப்ப ஸ்வாமி சக்கர ஸ்நானம்,விஜயதசமி,காந்தி ஜெயந்தி
17 துலா சங்கரமணம், 17-19ஸ்ரீநிவா. புரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம்
20 நரக சதுர்தசி, தீபாவளி
21 ஸ்ரீகேதார கௌரி விரதம்,
25 நாகுல சதுர்த்தி,
30 திருமலையப்ப ஸ்வாமி புஷ்பயாகம், பொய்கையாழ்வார் திருநட்சத்திரம்,
31 பூதத்தாழ்வார் திருநட்சத்திரம்

### நவம்பர் 2025

01 பேயாழ்வார் திருநட்சத்திரம்
01-05 நாராயணவனம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம் 02 கைசிக துவாதசி,
05 கார்த்திகை தீபோத்ஸவம், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் அன்னாபிஷேகம்
17 தன்வந்தரி ஜெயந்தி
17-25 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பிரம்மோத்ஸவம், 21 யானை வாகனம்
25 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பஞ்சமி தீர்த்தம், 26 புஷ்ப யாகம்

### டிசம்பர் 2025

01 ஸ்ரீகீதா ஜெயந்தி,
02 ஸ்ரீசக்ர தீர்த்த முக்கோட்டி
03 ஸ்ரீஅனுமத் விரதம்
03 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி கார்த்திகை தீபோத்ஸவம்
04 திருமலையில் கார்த்திகை தீபோத்ஸவம், கபில தீர்த்த முக்கோட்டி, திருமங்கை ஆழ்வார் சாத்துமுறை
05 திருப்பாணாழ்வார் திருநட்சத்திரம்
07 கபில தீர்த்த ஆலயத்தில் லக்ஷ பில்வார்ச்சனை
16 மார்கழி மாதம் ஆரம்பம்
30 வைகுண்ட ஏகாதசி

# அகம் மகிழ்விக்கும் மகர சங்கராந்தி

**தை** மாதத்தின் முதல் நாளை "மகர சங்கராந்தி" என்று கொண்டாடுவர். சூரியனின் சஞ்சாரம் தெற்கிலிருந்து வடக்கிற்கு மாறுகின்ற உத்தராயண புண்ணிய காலத்தை இந்து மக்கள் கொண்டாடி மகிழ்கிவர். இது சூரிய நாராயணனை வழிபடும் நாளுமாகும். உத்தராயணத்தில் பகல் அதிகமாகவும், இரவு குறைவாகவும் இருப்பதால் இது ஒளி மயமான காலமாகவும் கருதப்படுகிறது.

### போகித்திருநாள்

மகர சங்கராந்திக்கு முதல் நாள் போகிப் பண்டிகை. போகி என்றால் இன்பம் நிறைந்தது என்று பொருள். போகித்து இருப்பவன் இந்திரன். எல்லோருக்கும் எல்லா வகை போகங்களையும் அளிப்பவன். மழைக் கடவுளான இந்திரனை வழிபட்டால் உயிரினங்கள் வாழ நீரும் நிலமும் செழிக்கும் என்பதால் இந்திரனுக் சூரிய விழாவாக போகிப் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். மேலும், தக்ஷிணாயன காலத்தின் இருள் (பாவங்கள்) நீங்குவதன் பொருட்டு வேண்டாதனவற்றை (குப்பைகளை) நீக்கி விட்டு, வீட்டை தூய்மை செய்து மறுநாள் வருகின்ற ஒளிமயமான உத்தராயண புண்ணிய காலத்தை வரவேற்கத் தயாராகிறோம்.

### பொங்கல் விழா

இந்துப் பெருமக்களால் பெரும் மகிழ்வுடன் கொண்டாடப்படுவது பொங்கல் பண்டிகையாகும். பொங்கல் பண்டிகையை பல மாநிலங்களிலும் கொண்டாடி மகிழ்கின்றனர். ஆந்திரா, தெலுங்கானாவில் "சங்கராந்தி பண்டிகை" என்றும், கேரளாவில் "மகர சங்கராந்தி விழா" என்றும் கொண்டாடுவர்.

பொங்கல் வைப்பது இந்துக்களின் பாரம்பரிய வழக்கமாகும். குல தெய்வ வழிபாடு செய்கின்ற போதும், திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களின் போதும் பொங்கல் வைத்து கொண்டாடுவர். சில விசேஷ நாட்களில் தங்கள் இல்லங்களில் உள்ள ஸ்வாமி படங்கள் மற்றும் முன்னோர்களின் படங்களின் முன்பும் பொங்கல் வைப்பர். சூரிய வழிபாடு நமது பாரத தேசத்தில் காலங்காலமாகவே இருந்து வந்துள்ளதை பண்டைய வரலாற்றுகளின் மூலம் நாம் அறிய முடிகிறது. பரம்பொருளின் நிதர்சன வடிவமான சூரியனை நாம் தினந்தோறும் கண்ணால் தரிசித்து மகிழ்கிறோம். அனைத்து ஜீவராசிகளுக்கும் பாகுபாடின்றி ஆதவனின் ஒளி நன்மை செய்கிறது. பகவத் கீதையில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் "ஆதித்யர்களில் நான் விஷ்ணு" என்கிறார்.

அந்த சூரிய பகவானின் பார்வை படும்படியாக, வீட்டின் வெளிபுறம் பொங்கல் வைத்து வழிபடுவதை நாம் பாரம்பரியாமாகக் கடைபிடித்து வருகிறோம். அன்றைய தினம் இல்லத்தில் அனைவரும் புத்தாடைகளை அணிந்து உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்க பொங்கலிடுவர். புது மண் பானையில் புத்தரிசி இட்டு பொங்கல் நன்கு பொங்கி



எழுந்ததும் குடும்பத்தார் அனைவரும் ஒன்று கூடி "பொங்கலோ பொங்கல்" என்று சந்தோஷ கோசமிடுவது குடும்ப ஒற்றுமைக்குச் சான்றாகும்.

### மாட்டுப்பொங்கலில் ஒருமைப்பாடு

கோமாதாவை பூஜிப்பதே மாட்டுப் பொங்கல் ஆகும். அன்று மாட்டுக்கொட்டிலை சுத்தப்படுத்தி, கோலமிடுவர். பின்னர் பசுக்களைக் குளிப்பாட்டி, மஞ்சள் குங்குமம் இட்டு, பூமாலை அணிவித்து கோபூஜை செய்வர். மாட்டிற்காக விசேஷமாக தயாரித்த பொங்கலை அவற்றிற்கு அளிப்பர். வயலுக்கு எருவையும், நாம் பருகுவதற்கு பாலையும் அளிக்கின்ற கோமாதாவை பூஜை செய்வது, நமது இந்து பண்பாட்டின் அடையாளமாகும்.

மாட்டுப்பொங்கல் அன்று, தஞ்சை பெரிய கோயில் பிரகதீஸ்வரர் ஆலயத்தில் மகா நந்தி பகவானுக்கு ஆயிரக்கணக்கான கிலோ எடை கொண்ட காய்கறிகள் மற்றும் பழ வகைகளால் அலங்காரம் செய்யப்பட்டு பூஜை செய்யப்படுகிறது. அது மட்டுமல்லாமல் மறுநாள் காணும் பொங்கல் அன்று பெரிய கோயிலுக்கு வருகின்ற பக்தர்களுக்கு நந்தி பகவானுக்குச் சாற்றப்பட்ட பழங்களையும், காய்கறிகளையும் பிரசாதமாக வழங்குவர். மேலும், தஞ்சை பெரிய கோயிலில் மட்டுமின்றி கங்கை கொண்ட சோழபுரம் மற்றும் பல சிவாலயங்களிலும் மாட்டுப் பொங்கல் அன்று நந்தி பகவானுக்கு அலங்கார ஆராதனை சிறப்பாக நடைபெறுகின்றன.

மாட்டுப்பொங்கல் அன்று "ஜல்லிக்கட்டு" என்னும் மாடுபிடி வைபவம் தமிழகத்தில் பல்வேறு ஊர்களிலும் நடத்தப்படுகின்றன. அவற்றில் ஜாதி பேதமின்றி இளைஞர்கள் ஒற்றுமையுடன் பங்கேற்பர். இளைஞர்களின் பாரம்பரியமான பொங்கல் விளையாட்டு விழாக்களில் ஒன்றாக "ஜல்லிக்கட்டு" என்னும் மாடுபிடி உற்சவம் திகழ்கிறது.

### கனுப்பொங்கல் - கன்னிப்பொங்கல்

முதல் நாளில் வைத்தப் பொங்கலைக் கொண்டு (மீதமானப்பொங்கல்) பொங்கல் பானையின் கழுத்தில் கட்டப்பட்ட மஞ்சள் கொத்தின் இலைகளில், ஏழு சிறு உருண்டைகள் கனுப்பிடி வைத்து, காக்கையை அழைத்து உண்ண செய்வார்கள். காக்கை சனி பகவானின் வாகனம். தன் உடன் பிறந்தார்க்கும், பிறந்தகத்திற்கும் சனி பகவானின் அருளால் எவ்விதத் தீங்கும் இன்றி வளமான வாழ்வு அமைய பெண்கள் வேண்டிக் கொண்டு நடத்துவதே கனுப் பொங்கல் விழாவாகும். கனுப்பிடி வைக்கும் முன்பாக கன்னிப்பெண்கள் அக்கம் பக்கத்தில் உள்ள வயோதிக சுமங்கலி பெண்களிடம் சென்று, சங்கராந்தி பூஜையில் வைத்திருந்த மஞ்சள் கிழங்கை அவர்களிடம் தந்து, அந்த மஞ்சளால் நெற்றியில் கீறி ஆசீர்வதிக்க வேண்டுவர். கன்னிப் பெண்களும், சுமங்கலிப் பெண்களும்






தங்களுக்கும் பிறந்தகத்தாரும் நல் வாழ்வு அமைந்திட வேண்டிக் கொண்டாடப்படுகின்ற பொங்கல் என்பதால் “கன்னிப் பொங்கல்” எனப் படுகிறது.

### கன்னிப்பெண்களின் ஒற்றுமை

காணும் பொங்கல் என்னும் கன்னிப்பொங்கல் அன்று சிறுமியர்கள், இளம் பெண்கள், பட்டுப் பாவாடை தாவணி அணிந்து நீண்ட ஜடையில் வரிசை யாக பூக்களைக் கட்டி அலங்கரித்துக் கொண்டு அருகிலுள்ள வீடுகளுக்குச் சென்று, வீட்டின் முன்னர் தாம் எடுத்து சென்ற கூடையை வைத்து அதைச் சுற்றி கும்பி அடித்து பாடி ஆடுவார்கள். அவ்வாறு கும்மி நடனம் ஆடிய சிறுமியர்களுக்கு அரிசி, கரும்பு மற்றும் பணம் ஆகியவற்றை பொங்கல் பரிசாக கிராமத்தார் வழங்குவர். அந்த அரிசியைக் கொண்டு கூட்டாஞ்சோறு வைத்து பகிர்ந்து உண்பார்கள். அதை கன்னிப் பொங்கல் என்று கூறுவது வழக்கமாக வந்திருக்கலாம்.

### இளைஞர்களின் சமத்துவ விழா

காணும் பொங்கல் அன்று இளைஞர்கள் ஒன்று கூடி பொங்கல் விளையாட்டு விழாக்கள் நடத்துவர். அதில் சிறார்களுக்கு, பெண்களுக்கு இசை நாற்காலி போன்ற போட்டிகள், முதியோர்களுக்கு கயிறு இழுத்தல், இளைஞர்களுக்கு கண்ணைக் கட்டிக்கொண்டு வண்ண நீர் நிறைந்த பானையை உடைத்தல், காளையை அடக்குதல் போன்றவை நடத்தப்படுவது உண்டு.

இதனால் வயது வித்தியாசமின்றி, ஜாதி பேத மற்ற நிலை, சமத்துவ மனப்பான்மை போன்ற வற்றை இந்த பொங்கல் விளையாட்டு விழாக்கள் வாயிலாக நாம் அறியலாம். இந்து பண்டிகைகள் பல இருந்தாலும், இத்தகைய விளையாட்டுகள் நிறைந்த நான்கு நாட்கள் பண்டிகையான இந்த பொங்கல் விழாவை நாம் கொண்டாடி நமது பண்பாடு, கலாசாரம், சமத்துவத்தை பேணி காப்போம்.

**– திரு. பட்டுக்கோட்டை டி.ஆர். மனோகர்,**
**வல்லம், 99426 44807.**

**கூரத்தாழ்வான்**



**கூரத்தாழ்வான் தை மாதம் ஹஸ்த நட்சத்திரத்தில் அவதரித்தார். திருவாய் மொழியினை உரைத்திடும்போது அதில் ஆழங்கால்பட்டு கண்ணீர் மல்க பொருளை எடுத்துரைக்கையில் இவர் “ஆழ்வான்” என்ற திருநாமம் பெற்றார். ஸ்ரீவத்ஸ சிஹ்நமிச்ரர், திருமறு மார்பன், கூரேசர் முதலான பெயர்களும் நமது சம்ப்ரதாய நூல்களில் இவரை அருளிச் செய்வர்.**

**கூரமா நகரின் மிகப் பெரிய நிலக்கிழார், செல்வந்தர். பொன்னும் மணியும் போன்ற போலிச் செல்வங்கள் சகடக்கால் போல் சுழன்று மனிதனை மனிதனாக வாழ வைக்காது என்ற சிந்தனையுடன் தம்முடைய செல்வம் அனைத்தையும் தானம் செய்து விட்டு இராமாநுஜரிடம் தஞ்சம் அடைந்தார். செல்வச் செருக்கு, கல்விச் செருக்கு, குலச் செருக்கு ஆகிய மூன்று செருக்கையும் அறுத்து முக்குறும்பை அறுத்தவர் எனப் பெயர் பெற்றார்.**

**மதுரகவிகள் ஆசார்ய பக்திக்கு வித்திட்டார். அதனை கூரத்தாழ்வான் செயல்வழிப்படுத்திக் காட்டினார்.**

# ஆதிரையான்

*மன்னிய நாண்மீன் மதிகனலி யென்றிவற்றை*
*முன்னம் படைத்த முதல்வனைப் பின்னர்*
*ஆதிரையா னாதிரையா னென்றென் றயருமால்*
*ஊர்திரைநீர் வேலி யுலகு*

–முத்தொள்ளாயிரம்

விண்ணில் நிறைந்துள்ள சூரிய மண்டலங்களை ஆதியில் தோற்று வித்த பரம்பொருளை உலகில் வாழும் மக்கள் ஆதிரையான் என்று சொல்லி உளம் உருகி வழிபாடு செய்கின்றனர்.

ஆதிரை நட்சத்திர வடிவம் தீக்கொள்ளியாகும். ஆதிரையான் என்றால் ஆதிரை நட்சத்திரத்தில் தோன்றியவன் என பொருள். ஆதிரையான் சோதி வடிவமான சிவ பெருமானாவார். இவர் பிறப்பில்லா தவர் என்று சிலப்பதிகாரமும், தழல் உருவினர், ஒளி வடிவினர், அரும்பெறல் ஆதிரையான் என்று கலித் தொகையும், ஆதிரை முதல்வன் என்று பரிபாடலும் தெரிவிக்கின்றன. 27 நட்சத்திரங்களில் ஆறாவது நட்சத்திரம் ஆதிரையாகும். சிவபெருமானின் தன்மைகளை ஒத்துள்ளதால் திரு எனும் அடை மொழியுடன் திருவாதிரை என்று வழங்கப்பட்டு சிவனுக்குரியதாயிற்று. ஆதிரை விண்மீனின் நாளைச் சிவனுக்குரிய நாளாய்ப் பண்டுதொட்டுக் கொண்டாடி வருகின்றனர். மதிநிறை ஆதிரை நாளில் கன்னியர் பாவை நோன்பும் தொடங்கினர். இதனைச் சங்க இலக்கியம் பரிபாடல் தெரிவிக்கிறது.

*ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து*
*மாயிருந் திங்கள் மறுநிறை ஆதிரை*
*விரிநூல் அந்தணர் தொடங்கப்*
*புரிநூல் அந்தணர் பொலங்கலம் ஏற்ப*
*வெம்பாதாக வியனில வரைப்பென*
*அம்பா ஆடலின் ஆய்தொடிக் கன்னியற்*

–பரிபாடல் 11

ஞாயிறு காய்ந்து வருத்தாத மார்கழித் திங்கள் பௌர்ணமி ஆதிரை நாளில் விரிந்த பல நூல்களைக் கற்றோராகிய அந்தணர் சிவனுக்குரிய விழாவினைத் தொடங்கினர். இந்நாளில் கன்னியர் தமது தாயுடன் கூடி அம்பா ஆடல் எனும் தைந் நீராடலை மேற்கொண்டனர். நல் வாழ்க்கைத் துணை அமைதல் வேண்டும் என்று வேண்டி நோன்பினை ஆதிரை நாளில் தொடங்கி தை மாத பௌர்ணமியில் நிறைவு செய்வர். திருவாதிரையில் சிவபெருமான் பரமானந்தம் மிக்கவராய் அனைவரையும் காத்தருளும் கருணைகொண்டு ஆனந்தத் தாண்டவம் புரிகின்றார். அன்று சிவ பெருமானை தியானித்து உபவாசம் இருந்து சிவன் கோயிலுக்குச் சென்று அபிஷேகங்கள் செய்து பக்தர்களுக்கு அன்னமிடுதல் சிறப்பாகும்.

ஒருசமயம் சிவபெருமானின் ஆனந்தத் தாண்டவத்தைப் பற்றி திருமால் ஆதிசேஷனுக்கு சொல்லச் சொல்ல ஆதிசேஷனின் உடல் சிலிர்த்தது. அந்த ஆனந்தத் தாண்டவத்தைக் காண ஆதிசேஷன் ஆவல் கொண்டார். அதற்கான உபாயங்களை திருமாலிடம் வேண்டினார். திருமாலும் "ஆதி சேஷனே, நீவீர் புவியில் பிறந்து தில்லை வனம் சென்று தவஞ்செய்து வருக, உமது விருப்பம் நிறைவேறும்" என்று கூறி விடை கொடுத்தார்.

ஆதிசேஷன் புவியில் பதஞ்சலி முனிவராய் அவதரித்தார். உடலில் இடுப்புவரை மனித உடலும், கீழே பாம்புத் தோற்றமும் கொண்டதாய் அவரது உருவம் இருந்தது. அவர் பல காலம் உடலை வருத்தி சிவபெருமானைத் தியானித்து தில்லை வனத்தில் தவஞ்செய்து வந்தார். அதே போன்று வியாக்ரபாதர்





| சிதம்பரம் பொற்சபை | திருநெல்வேலி தாமிரசபை | குற்றாலம் சித்ரசபை | மதுரை வெள்ளிசபை | திருவாலங்காடு இரத்னசபை |
|---|---|---|---|---|

என்பவரும் சிவபெருமானின் தரிசனம் வேண்டித் தவம் செய்து வந்தார்.

ஒரு மார்கழி திருவாதிரை நாளில் பேரொளியோடு நந்தியுடன் கருணையே வடிவாகிய சிவபெருமான் தோன்றி, உமையவள் அருகில் நிற்க, சிவபெருமான் ஆனந்த நடனம் செய்தருளினார். பதஞ்சலியும், வியாக்ரபாதரும் சிவபெருமானின் திருநடனத்தைக் கண்டு மகிழ்ந்தனர். இவ்வாறு பெருமான் தனது நடன தரிசனத்தைக் காட்டியருளிய நன்னாள் திருவாதிரையாகும்.

சேந்தனார் எனும் அடியவரொருவர் நாள் தோறும் ஒரு பக்தருக்கு அன்னமளித்து வரும் அரும்பணி செய்து வந்தார். அவரது பக்தியை உலகோர் அறியச் செய்திட பெருமான் திருவுளங் கொண்டார். ஒருநாள் சிவனடியார் வேடம் பூண்டு சேந்தனார் இல்லத்தை அடைந்து அவர் சமைத்த களியைச் சாப்பிட்டார். அன்று தில்லை கூத்தனின் உதட்டில் களியமுது இருக்கக் கண்டு அவற்றால் சேந்தனாரின் பக்தியை உலகோர் அறிந்து அவரைப் போற்றினர். இது திருவாதிரை அன்று நிகழ்ந்தது. அன்று முதல் திருவாதிரையில் களியமுது செய்து சிவபெருமானுக்கு நிவேதனம் செய்திடும் வழக்கம் உண்டாயிற்று.

சிவபெருமானின் 64 வடிவங்களுள் நடராஜப் பெருமானின் திருவுரு சிறப்பு பெற்றதாய் விளங்குகின்றது. ஆதிரை நாயகனும் இம்மூர்த்தியே

## ஸப்தகிரி நவம்பர் 2024 விடைகள்

1. பஞ்சமி திதி.
2. பொய்கையாழ்வார்.
3. பெரியாழ்வார்.
4. பாத்ரபதமாதம் (ஆவணி).
5. சத்யபாமா.
6. ஸ்ரீமாகலக்ஷ்மித் தாயார்.
7. ஸ்ரீமாகலக்ஷ்மித் தாயார்.
8. கார்த்திகை மாதம்.
9. ஜி.என்.செட்டி சாலை, தியாகராய நகர்.
10. தங்கத்திருத்தேர்.
11. பாரிஜாத மரம்.
12. பிரம்மா, சிவன்.
13. தன்வந்தரி.
14. ஸ்ரீமாகலக்ஷ்மித் தாயார்.
15. உத்திராடம்.



வினாடி வினா

## போட்டி எண். 28

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வன் ஆர்.மோகித், அம்பத்தூர், சென்னை.
2. செல்வி பி.ஆத்மிகா, வில்லியனூர், புதுச்சேரி
3. செல்வன் எஸ். பிரவீண்ராம், மேட்டு பிள்ளையார் கோயில் தெரு,சேலம்.

ஆவார். இவருக்கு ஓராண்டில் ஆறு அபிஷேகம் செய்யப்படுகின்றது. இதனைக் கூறும் பழம் பாடல் ஒன்றுள்ளது.

*சித்திரையிலோணமுதற் சீரானி யுத்தரமாம்*
*சத்து தனு ஆதிரையுஞ் சார்வாரும் - பத்திவளர்*
*மாசி அரி கன்னி மருவு சதுர்தசி மன்*
*நீசரபி ஷேகத்தினமாம்*

–நடராசர் அபிஷேக வெண்பா

சிவபெருமானுக்கு வருடத்தில் ஆறு முறை சிறப்பான முறையில் அபிஷேகங்கள் நடைபெறும். அந்த ஆறு அபிஷேகங்களுள் மார்கழி திருவாதிரை அன்று அபிஷேகம் சிறப்பானது.

சிவபெருமான் அக்னி ஸ்தம்பமாய் ஆவிர் பவதித்து நின்றருளிய நாளாகும். "மார்கழி திருவாதிரை நாளில் எவன் ஒருவன் ஆலயத்திற்குச் சென்று எமது லிங்க , விக்கிர வடிவத்தை அபிஷேகித்து பூஜிக்கின் றானோ, அவன் மீது யாம் கந்தபிரானிடத்து வைத்து உள்ள அன்பை செலுத்து வோம்'' என்று சிவ பெருமான் சொல்லி அருளி உள்ளதைச் சிவமகா புராணம் தெரிவிக்கின்றது.

திருவாதிரை திருநாளில் அதிகாலை வேளை யில் நடராஜப் பெருமானுக்குப் பால், தயிர், சந்தனம், விபூதி, மஞ்சள், இளநீர், பன்னீர், எலுமிச்சை, தேன், பஞ்சாமிர்தம், வெட்டிவேர் முதலான பொருட்களால் அபிஷேகம் செய்யப்படுகின்றது.

குறிப்பாக மாதுளை அபிஷேகம் செய்யும்போது பெருமானின் திருமேனி மாணிக்கக் கற்களாய் ஜொலிப்பதை காணலாம். பின்னர் மலர்மாலைகள் அணிவித்து, தீபாராதனை நடைபெறும். தமது திருவாதிரைத் தரிசனத்தைப் பிற உயிர்களும் கண்டு மகிழும் வண்ணம் பெருமான் திருவீதி உலா சென்று திரும்புவார்.

இத்தகைய சிறப்பு பொருந்திய திருவாதிரை நன்னாளில் நாமும் விரதமிருந்து சிவாலயஞ்சென்று ஆதிரையான் திருவடிகளில் விழுந்து வணங்கி நற்பலன் பெற்று உய்வோமாக.

**–திரு.சோ.செந்தில்குமார் , காஞ்சிபுரம்,**
**93400 91600.**


அக்ஷரப்பிரசாதமான ஸப்தகிரியில்
திருமலையப்ப ஸ்வாமியைத் தரிசியுங்கள்

**ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு...**

- **"ஸப்தகிரி"** திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால் வெளியிடப்படும் சமய மாத இதழ்.
- **"ஸப்தகிரி"** இதழில் பல ஆன்மீகத் தகவல்கள் வெளியிடப்படுகின்றன.
- **"ஸப்தகிரி"** இதழ் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் வெளி வருகின்றன.
- **"ஸப்தகிரி"** இதழின் ஆண்டுச்சந்தா ரூ.240/–, ஆயுள்சந்தா ரூ.2,400/– (12 வருடங்கள் மட்டும்), அயல்நாட்டுச் சந்தா ரூ.1,030/–
- **"ஸப்தகிரி"** இதழிற்கான சந்தாவினை டி.டி., இ.எம்.ஒ., ஐ.பி.ஓ. மற்றும் இணையதளம் (https://ttdevasthanams. ap.gov.in) வாயிலாக அனுப்பலாம்.
- **"ஸப்தகிரி"** இதழிற்கான சந்தாவினை ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு வரைவோலை எடுத்து, "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக் கட்டிடம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி – 517507" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
- **"ஸப்தகிரி"** சந்தாதாரர்கள் தங்களுடைய பெயர், முகவரி, அஞ்சல் எண், கைபேசி எண், தேவையான மொழி முதலியவற்றை சரியாக குறிப்பிடவும்.
- **"ஸப்தகிரி"** இதழ் குறித்த காலத்தில் கிடைக்கப் பெறாதவர்களும், முகவரி மாற்றம் செய்ய வேண்டியவர்களும் "chiefeditortpt@gmail.com" எனும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.
- மேலும் தகவல்களுக்கு "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக் கட்டிடம், கபிலதீர்த்தம் சாலை, திருப்பதி – 517 507" எனும் முகவரியில் அலுவலக பணி நாட்களில் நேரில் அணுகலாம்.

மேலும் தகவல்களுக்கு :
**0877- 2264543, 2264359**



108 திவ்ய தேச வைபவம் 91

# திருநின்றவூர்

## (திண்ணனூர்)

– உருப்பட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.

**இத்திவ்ய தேசத்திற்குச் செல்லும் வழி:**
சென்னை-அரக்கோணம் ரயில்பாதையில் உள்ள திவ்யதேசம் இது. சென்னை-திருவள்ளூர் பேருந்து மார்கத்திலும் இவ்வூருக்குச் செல்லலாம்.

**புராண வரலாறு :**

திருமகள், அடியவர்களுக்கு அருள இவ்விடத்தில் நிலைத்து உள்ளதால் இது திருநின்றவூர்.

இந்த ஸ்ரீமஹாலக்ஷ்மி அடியவர்களைக் காக்கும் கருணை மிகுதியால் ஒரு முறை ஸ்ரீவைகுண்டத்தில் இருந்து மண்ணுலகிற்கு ஏதோ காரணத்தால் பிரிந்து வந்தாள்.

பிராட்டியை ஈன்றெடுத்த கடல் அரசன் இருவரையும் சேர்த்திட எண்ணி, பிராட்டி இருக்கும் இடத்தைத் தேடினான். மிகுந்த முயற்சிக்குப் பின்னே, பிராட்டி இத்திவ்ய தேசத்தில் விளங்குவதை அறிந்து உரிமையுடன் தன் திருமகளை "என்னைப் பெற்ற தாய் போன்றவளே" என்று அழைத்து எம்பெருமானுடன் இணைந்து வாழுமாறு சொல்லியும், திருமகள் சம்மதிக்கவில்லை. கடல் அரசன் திருவுக்கும் திருவாகிய செல்வனான எம்பெருமானே, சரணாக அடைந்து நேரில் வந்து பிராட்டியின் ஊடல் உணர்வை நீக்க வேண்டும் என்று வேண்ட, எம்பெருமானும் அருளினான். கடல் அரசனின் வேண்டுகோளை ஏற்றதால் பெருமாளுக்கு பக்தவத்ஸலன் என்கிற திருநாமம். தன் மகளைக் கடல் அரசன் என்னைப் பெற்ற தாய் என்று அன்புடன் அழைத்ததால் "என்னைப் பெற்ற தாயார்" எனப்படுகிறாள். இவ்வாறு பிராட்டியுடன் இணைந்த அர்ச்சாவதாரத்தில் யாவருக்கும் அருள்பாலிக்க வேண்டும் என்று கடல் அரசன் வேண்டவே, அதனை ஏற்ற எம்பெருமான் இத்தலத்தில் பக்தவத்ஸலப் பெருமான், பத்தராவிப் பெருமாள் என்ற திருப்பெயர்களில் அருள் பாலிக்கிறார்.

**சிறப்புகள் :**

திருநின்றவூரில் ஆழ்வாரின் அனுபவம் அலாதியானது. திருநின்றவூர் பத்தராவிப் பெருமாளை, ஆழ்வார் அவ்வூருக்குச் சென்றபோது சேவிக்கவில்லை. கண்டது இரண்டு முறை. அதுவும் வெவ்வேறு இடங்களில். முதலில் திருக்கடல்மல்லை என்ற திவ்ய தேசத்தில் காண்கிறார். இதனை,

*"நின்றவூர் நித்திலத்தை...*
*கண்டது நான் கடல்மல்லைத் தலசயனத்தே"*

என்கிறார்.

இப்பாசுரத்திற்கு விளக்கம் அருளிய ஸ்ரீஅண்ணங்கராச்சார்யர் திருஎவ்வுள் கிடந்தானை ஆழ்வார் சேவித்தபின்பு, திருவல்லிக்கேணி செல்வதற்கு முன்பாகவே திருநின்ற ஊருக்கு ஆழ்வார் எழுந்தருளியுள்ளார் என்றும், அப்போது, பத்தராவிப் பெருமாள், ஆழ்வாரை அறியாமல், தமது தேவியருடன் உரையாடும் இன்பத்தில் ஈடுபட்டு இருந்ததால், ஆழ்வார் அத்திவ்ய தேசத்தை விடுத்து, திருவல்லிக்கேணியையும், திருநீர் மலையையும் சேவித்து மங்களாசாசனம் செய்து திருக்கடல் மல்லையை அடைந்தார் என்றும், ஆழ்வாரால் பாடப்படவில்லையே என்று திருமகள் பெருமாளைக் கேட்க எம்பெருமான், ஆழ்வாரைத் தொடர்ந்து திருக்கடல்மல்லையை அடைந்து, ஆழ்வார்க்கு

காட்சி அருளவும், ஆழ்வார் மேற்கண்டவாறு மங்களா சாசனம் செய்ததாகக் குறிப்பிடுகிறார். பத்தராவிப் பெருமானுக்கு ஒரு பாசுரம் போதவில்லை. மேலும் பாசுரங்களைக் கலியனிடத்திருந்து பெற்று வருமாறு, திருமகள் தூண்டவும் ஆழ்வாரைத் தொடர்ந்த எம்பெருமான் – திருக்கண்ணமங்கை என்னும் திவ்ய தேசத்தில், கலியனைத் தேடிப்பற்றுகிறார். அங்கு இருக்கும் எம்பெருமானின் திருப்பெயரும் பக்தவத்ஸலன் என்பது தானே. திருநின்றவூரானைக் கண்ட ஆழ்வார்,

*''நின்றவூர் நின்ற நித்திலத் தொத்தினை*
*சென்று நாடிக் கண்ணமங்கையுள்''*

என்று மங்களாசாசனம் செய்தார். முத்துக் குவியலைக் காண்பவர், உலக வாழ்வின் வெப்பம் நீங்கப்பெற்று மகிழ்வர் என்பது கருத்து. "சிரமஹரமான முத்துத் திரள்போலே இருக்கின்றவனை" என்று ஸ்ரீபெரிய வாச்சான் பிள்ளை வ்யாக்யானம் இடுகிறார். இத்திருக்கோயில், திருமலை, ஸ்ரீமத் பரம ஹம்ஸ பெரிய ஜீயர் சுவாமிகளின் ஆதீன ஆளுகைக்கு உட்பட்டது.

| | |
|---|---|
| பெருமாள் | : பக்தவத்ஸலப் பெருமாள், பத்தராவிப் பெருமாள் (கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம்) |
| தாயார் | : சுதாவல்லித்தாயார் (என்னைப் பெற்ற தாயார்) |
| தீர்த்தம் | : வருண புஷ்கரணி, விருத்தக்ஷீர புஷ்கரணி – பழைய பாலாறு. |
| விமானம் | : உத்பல விமானம், ஸ்ரீநிவாஸ விமானம். |
| ப்ரத்யக்ஷம் | : வருணன், கடல் அரசன் (சமுத்திர ராஜன்). |
| ஆகமம் | : பாஞ்சராத்ரம். |
| மங்களாசாஸனம் | : திருமங்கை ஆழ்வார். |

**த்யானச்லோகம் :**

*''திஷ்டத் புர்யாம் ஜலதி தநயா மத்ப்ரஸூர் நாமதோவை*
*பக்தப்பரேம்ணா வருண வரதோ வாருணம் தத்ஸரச்ச:*
*முக்தா ஹாரைஸ் ஸமருசி ரஸௌ சோத் பலாக்யம்*
*விமானம் ஸர்வாநேதாந் ப்ரதிநிதி ஜநாநந்த*
*நாந்பாவயேஹம்''*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

பாசுரம்

*பூண்டவத்தம் பிறர்க்கு அடைந்து தொண்டுபட்டுப்*
*பொய்ந்நூலை மெய்ந்நூல் என்று என்றும் ஓதி*
*மாண்டு அவத்தம் போகாதே வம்மின் எந்தை*
*என் வணங்கப் படுவானைக் கணங்கள் ஏத்தும்*
*நீண்டத்தை கருமுகிலை எம்மான் தன்னை*

**திருப்பதியில் அலிபிரி பாதாள மண்டபம் அருகில் "ஸப்த கோ" பிரதக்ஷிணை மந்திரம் அமைந்துள்ளது. தி.தி.தே. பசுக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது அனைவரும் அறிந்ததே.**

**ஏழு மலைகளின் அடையாளமாக ஏழு பசுக்கள் அவற்றின் கன்றுகள், வேணு கோபால ஸ்வாமி விக்ரஹம், "கோ" பூஜை, "கோ" தரிசனம் குறிப்பாக ஸ்ரீவேங்கடேஸ்வரா ஸப்த கோ பிரதக்ஷிணை மந்திரத்தில் நிறுவப்பட்டுள்ளன.**

தேவர்கள் பாற்கடலை கடைந்தபோது அமிர்தத்துடன் கல்ப விருக்ஷம், காமதேனு, மகா லட்சுமியும் வெளிப்பட்டனர். காமதேனுவின் சந்ததியே பசுக்களாகும். இவ்வுலகில் காமதேனுவின் மூலமாகத்தான் கால்நடை இனமே தோன்றியதாகப் புராணங்கள் கூறுகின்றன.

**இந்த கோ பிரதக்ஷிணை மந்திரத்தை தரிசித்தால் கிரஹ சாந்தி கிட்டும். பக்தர்கள் தாங்கள் தேர்ந்தெடுக்கும் பசுக்களின் எடைக்கேற்ப துலாபார சேவை மூலமாக பணம், உணவுப்பொருட்கள், மாட்டுத் தீவனங்கள் தானம் செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஸப்த கோசாலையில் கோவிந்தனைத் தரிசித்து, கோபிரதக்ஷிணம் செய்த பின்னர் மலை ஏறத்தொடங்கலாம்.**



*நின்றவூர் நித்திலத்தைத் தொத்தார் சோலைக்*
*காண்டவத்தைக் கனல் எரிவாய் பெய்வித்தானைக்*
*கண்டது நான் கடல் மல்லைத் தலசயனத்தே''*

– திருமங்கையாழ்வார்

*சீர் அறிந்து தோழிமீர் சென்று கொணர்ந்து எனக்குப்*
*போர் முலை முகட்டில் பூட்டுமினோ -நேர் அவுணர்*
*பொன்ற ஊர் புள் கழுத்தில் பொன்னை*
*மாணிக்கத்தை நின்றவூர் நித்திலத்தை நீர்''*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

## நாமாக்கள்

851. ***ஓம் பாரப்ருத் நம:***

உயிர்களைக் காக்கும் பாரத்தைத் தாங்குபவன்.

***ஓம் அமராலயா: நம:***

தேவர்களுக்கு ஆதாரமாக இருப்பவள்.

852. ***ஓம் கதித: நம:***

சகல கல்யாண குணபரன்.

***ஓம் கோதா: நம:***

நல்ல வாக்கை உடையவள்.

853. ***ஓம் யோகீ நம:***

அகடிதகடநா ஸாமர்த்யசாலி.

***ஓம் கோதாவரீ: நம:***

நல்வாக்குகள் அளிப்பவர்களால் வணங்கப்படுபவள்.

854. ***ஓம் யோகீஸ: நம:***

யோகிகளின் யோகத்தை நிறைவேற்றுபவன்.

***ஓம் சந்த்ரபாகா: நம:***

சந்திரனுடன் தோன்றியவள்.

855. ***ஓம் ஸர்வகாமத: நம:***

"அணிமா" முதலிய யோகப்பலனை அளிப்பவன்.

***ஓம் காவேரீ: நம:***

ஸுகமயமான பகவானின் திருமேனிக்கு ஏற்றபடி ஸுகமய திவ்ய ரூபத்தை உடையவள்.

856. ***ஓம் ஆஸ்ரம: நம:***

கஷ்டங்களை நீக்குபவன்.

***ஓம் உதந்வதீ: நம:***

ஸமுத்ர குமாரி.

857. ***ஓம் ஸ்ரமண: நம:***

முன் ஜென்மத்தில் விட்ட யோகத்தை இந்த ஜன்மத்தில் தொடரச் செய்பவன்.

***ஓம் ஸிநீவாலீ: நம:***

சந்திரகலை சிறிதே இருக்கும் அமாவாசையில் பூஜிக்க விசேஷ பூஜா விதி உள்ளவள்.

858. ***ஓம் க்ஷாம: நம:***

யோகப்ரஷ்டர்களுக்கும் முக்தி அளிப்பவன்.

***ஓம் குஹூ: நம:***

அமாவாஸ்யை பூஜாவிதிப்படி ஆராதிக்கப்படுபவள்.

859. ***ஓம் ஸுபர்ண: நம:***

பிறவிக்கடலில் கரை சேர்ப்பவன்.

***ஓம் ராகா: நம:***

பௌர்ணமியிலும் பூஜிக்கப்படுபவள்.

860. ***ஓம் வாயுவாஹந: நம:***

கீழே நழுவியவர்களையும் மேலே தூக்கி விடுபவன்.

***ஓம் வாராணா: நம:***

அடியவர்களை, அவர்களை வெறுப்பவர்களிடமிருந்து கவசம் போலக் காப்பவள்.

*ஸ்ரீமதே ஸுதாவல்லீ மத்ஸவித்ரீ அகில*
*ஜகன்மாதா (என்னைப் பெற்ற தாயார்)*
*நாயிகா ஸமேத ஸ்ரீபக்தவத்ஸல*
*(ஸ்ரீபத்தராவி) பர ப்ரம்மணே நம:*

*தொடர்ந்து தரிசிப்போம்...*


## மங்கள சுலோகம்



*ஸர்வே பவந்து ஸுகினஹ ஸர்வே*
*ஸந்து நிராமயாஹா ।*
*ஸர்வே பத்ராணி பச்யந்து மா கஸ்சித்*
*துஹ்கபாக் பவேத் ॥*

**எல்லோரும் சுகத்துடன் இருக்கட்டும்.**
**எல்லோரும் நோயற்றவர்களாய்**
**விளங்குவார்களாக; எவரும்**
**துயரமில்லாது இருக்கட்டும்.**





## சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்

# யாளி வடிவம்

– படிமக்கலைஞர் திரு.ப.சரவணன்,
குடந்தை, 8610819456.

உலகளவில் ஆன்மீகக் கலாச்சார தடத்தில் மிளிரும் மக்களின் இதயத்தில் பதிந்துள்ள சிலை வடிவ பரிமாணங்களில் இறை திருமேனிகளுக்கு அடுத்ததாக சிந்தையில் அதிகம் இடம் பிடித்தவை விந்தை உருவ மான யாளி வடிவ சுவடுகள். தமிழக திருக்கோயில்களில் கர்ப்பக்கிரக வாசலை அலங்கரிப்பதும் சிறப்பு மிக்க வடிவங்களான யானை முகம் கொண்ட ராஜயாளி, சிம்மயாளி ஆகும். இந்த இரண்டு யாளிகளும் திருக் கோயிலை பாதுகாப்பதாகவும், வாழும் மக்களை வழி நடத்துவதாகவும் இன்றளவும் ஆன்மீகச் சான்றோர் களால் நம்பப்பட்டு வருகிறது.

பல நூற்றாண்டுகள் கடந்தும் மானுட வாழ்வியலில் கலந்து மிளிரும் யாளி வடிவம் இந்துக் கோயில்களில் காணப்படும் ஒரு தொன்மையானச் சிற்பமாகும்.

இந்த விலங்கு இந்தியாவில் தொடர் ஆண்டிற்கு முன் 25,000ஆம் ஆண்டு காலத்திலேயே வழக்கத்தில் இருந்து பின்னர் தொடர் ஆண்டு 800ல் தான் மீண்டும் கோயில்களில் இடம் பெற்றன என்பது வரலாற்று பதிவாகும்.

முதலாம் ஆதித்யன், பராந்தகன், சோழர்களால் செங்கற்களுக்குப் பதிலாக கருங்கற்களைக் கொண்டு கோயில்கள் திருத்தி கட்டப்பட்டு, அதில் கற்றளி எனும் கற்சிலை வடிவங்கள் பலவித கலைநயத்துடன் பல உருவங்களில் நிறுவப்பட்டன. அதில் ஒன்று தான் இந்த யாளி வடிவம். அதனைத் தொடர்ந்து மற்ற கோயில்களிலும் யாளி முக்கிய இடம் பெற்றது.

பல்லவர் காலத்தில் கோயில்களில் சிம்மத்திற்கு முதலிடம் தந்த இடத்தை போல் சோழர் காலத்தில் இந்த யாளி வடிவத்தினை முன்னிலைப் படுத்தியுள்ளார்கள் சோழர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

யாளி வடிவத்தினை என்றும் மானுடம் காண கலைமிகு சிற்பக் கலையினால் வடிவம் தந்து யாளியின் சிறப்பை உயர்த்தி விண்ணும் மண்ணும் உள்ளவரை அழியாமல் பாதுகாத்து இன்று வாழ் மக்களிடம் தந்து சென்றுள்ளார்கள் பல்லவர்கள், சோழர்கள் மற்றும் நாயக்க மாமன்னர்கள். மேலும், யாளி எனும் வடிவம் சோழர்கள் ஆட்சி புரிந்த ஏதோ ஒரு பகுதியில் வாழ்ந்து இருக்க வாய்ப்புகள் இருந்திருக்கலாம் என்பதும்,

பல ஆயிரம் ஆண்டுகள் வரலாற்று பின்னணி கொண்ட இந்திய துணைக் கண்டத்தின் தென்பகுதியில் இப்படி ஒரு பிரம்மாண்ட விலங்கின் பதிவுகள் பரவிக் கிடப்பதைப் பார்க்க முடிகிறது.

தென் இந்தியாவில் காணப்படும் இந்து கோயில் கோபுரங்கள் முதல் மண்டபத்தின் தூண்கள் வரை ஆயிரக்கணக்கில் ஒரு பிரம்மாண்ட விலங்கின் உருவத்தை சிலைகளாக பதிவு செய்து வைத்து உள்ளார்கள். இந்து புராணங்களில் சொல்லப்படும் எந்த செய்தியும் இதுவரை ஆன்மீகமாக மட்டும் இருந்ததில்லை.

விமான வடிவமைப்பு, நவகிரகங்கள் பற்றி வானியல் சாஸ்திரங்கள், முனிவர்களின் அசாத்திய சக்திகள் அனைத்தும் அறிவியலின்படி சாத்தியம் என அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் யாளி வடிவங்களும் வாழ்ந்து இருக்கலாம் என்பதும் சில ஆய்வாளர்களின் கருத்தாகும்.

தென்னிந்தியச் சிற்பங்களில் பரவலாகக் காணப்படும் யாளி தொன்மக்கள் கதைகளில் வரும் சிங்கம் போன்ற ஓர் உயிரினமாகும். இது சிங்கத்தையும், யானையையும் விட மிகவும் வலிமையானது என நம்பப்படுகிறது. பொதுவாக யாளி யானையைத் தாக்குவது போன்று உள்ளதைச் சிற்பங்களில் காணலாம்.

யாளிகள் சிங்கத்தின் உடல் அமைப்பைக் கொண்டுள்ளன. அவற்றின் தலைகளோ வேறு ஒரு விலங்கின் சாயலில் வடிவமைக்கப்படுகின்றன. யானை, சிங்கம், ஆடு (மகரம்) தலைகளையும், அரிதாக சில இடங்களில் பறவை, நாய், எலி, குரங்கு மற்றும் மனித தலையுடனும் கூடிய யாளி வடிவங்களைக் காணலாம்.

இதில் தாராசுரம் ஐராவதீஸ்வரர் ஆலயத்தில் உள்ள மீசையுடன் கூடிய மனித முக ஆண் யாளி மற்றும் பெண் முகத்துடன் உள்ள யாளி மிகவும் சிறப்பு வாய்ந்தது. மேலும் சிம்ம யாளி, மகர யாளி, யானை யாளி, சுருள்யாளி என்பது சிற்ப அலங்காரக் குறியீடு ஆகும். தென்னிந்திய கோயில்களில் கைப்பிடி சுவரில் இந்த அமைப்பு செதுக்கப்பட்டு இருக்கும். தலை திரும்பிய யாளி உருவத்தின் வாய்ப்புறத்திலிருந்து வளைவளைவாக செல்லும் கல் அலங்கார வளைவுகளைக் கொண்டிருக்கும் யாளி உருவை சுருள்யாளி என்பர். குறிப்பாக கல் மண்டபப் படிகளில் சுவர்களில் இவற்றைக் காணலாம்.

மேலும், யாளிகளின் படிமங்கள் அதிகம் நிறைந்துள்ள தஞ்சை மாவட்ட கோயில்கள் சில: தஞ்சை பெரியக் கோயில், நாச்சியார் கோயில் அருகில் உள்ள துக்காச்சி ஆபத்சகாயேஸ்வரர் ஆலயம், தாராசுரம் ஐராவதீஸ்வரர் ஆலயம், திருபுவனம் கம்பகரேஸ்வரர் ஆலயம், பட்டீஸ்வரம் தேனுபுரீஸ்வரர் ஆலயம், பழயாறை சோமநாதர் ஆலயம் ஆகும்.

இரண்டு உயிரினக் கலப்பின வடிவத்துடன் உள்ள தெய்வங்கள் சில :

யானை தலை மனித உடல் – விநாயகரின் வடிவம். குரங்கின் தலை மனித உடல் – அனுமன் வடிவம். மானுட பெண் தலை, பசுவின் உடல், மயில் தோகை கலந்த வடிவம் –காமதேனு. சிங்க முகம், பறவையின் சிறகுகள் உள்ள வடிவம் – சரபர். சிங்க உடல், யானை தலையும் இணைந்த வடிவம் – யாளி. யாளி போல் சைனாவில் மிக அதிகமாக வழிபடும் வடிவமான பாம்பும், பறவையின் சிறகும் இணைந்த வடிவம் – டிராகன் என நீளும் இப்பட்டியல்.

டைனோசர் என்று சொல்லப்படும் உயிரினத்தின் உடலமைப்புக்கும், யாளியின் உடலமைப்புக்கும் பல ஒற்றுமைகள் இருப்பதால் யாளிதான் உண்மையில் டைனோசராக இருக்கலாம் என்றொரு கோட்பாடும் உள்ளது. யாளி லெமூரிய நாகரீகத்தின் உண்மையான மிருகம் என்றும், அதன்படி குமரிக் கண்டம் ஆழிப்பேரலையால் அழிவுற்றபோது அங்கிருந்து கடந்து வந்த மக்கள் அறிந்த விலங்குதான் யாளி.

எனவே அது டைனோசரின் வழிதோன்றலாக இருக்கவும் வாய்ப்பு இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. காலத்தின் எச்சத்தில் யாளியின் மிச்சம் கண்டிப்பாக இருக்கும். அது என்றாவது ஒரு நாள் ஆய்வாளர்கள் கைகளில் கிடைக்கும் என்கின்ற நம்பிக்கையுடன் காத்திருப்போம்.

மேற்காணும் யாளிச் சிற்பங்கள் தாராசுரம் (சோழர் காலம்) மற்றும் வேலூர் (நாயக்கர் காலம்) சிவாலயங்களில் உள்ளவை என்பது குறிப்பிடத் தக்கது.



## அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# இராமானுசர்

– ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

*அத்திகிரி அருளாளர் அடி பணிந்தோன் வாழியே*
*அருட்கச்சி நம்பியுரை ஆறு பெற்றோன் வாழியே*
*பத்தியுடன் பாடியத்தைப் பகர்ந்திட்டான் வாழியே*
*பதின்மர் கலை உட்பொருளைப் பரிந்து கற்றான் வாழியே*
*சுத்த மகிழ் மாறன் அடி தொழுது உய்ந்தோன் வாழியே*
*தொல் பெரிய நம்பி சரண் தோன்றினான் வாழியே*
*சித்திரையில் திருவாதிரை நாள் சிறக்க வந்தோன் வாழியே*
*சீர் பெரும்பூதூர் முனிவன் திருவடிகள் வாழியே*

**பதவுரை**

அத்திகிரி – காஞ்சீபுரத்தில் உள்ள, அருளாளர் – தேவப்பெருமாள், அடி பணிந்தோன் – திருவடிகளைப் பற்றினவரான இராமாநுசர். வாழியே – வாழ வேண்டும். அருட்கச்சி நம்பி – தேவப்பெருமாள் அருளைப் பெற்ற திருக்கச்சி நம்பி, உரை – உரைத்த, ஆறு பெற்றோன் – ஆறு வார்த்தைகளைப் பெற்றவர். பக்தியுடன் – பக்தியோடு, பாடியத்தை – ஸ்ரீபாஷ்யத்தை, பகர்ந்திட்டான் – உபதேசித்தவர். பதின்மர் கலை – ஆழ்வார்கள் பதின்மருடைய பிரபந்தத்தின், உட்பொருளை – உட்கருத்தை, பரிந்து கற்றான் – ஆசையுடன் கற்றவர். சுத்த மகிழ் மாறன் – தூய மகிழ்மாலை அணிந்த நம்மாழ்வார், அடி தொழுது – திருவடிகளைத் தொழுது, உய்ந்தோன் – உய்வு பெற்றவர். தொல் பெரிய நம்பி – பழமையான, பெரிய நம்பி, சரண் – திருவடிகளை, தோன்றினான் – பற்றியவர். சித்திரையில் – சித்திரை மாதத்தில், திருவாதிரை நாள் – திருவாதிரை என்னும் நக்ஷத்ரம், சிறக்க வந்தோன் – பெருமை படத்தோன்றியவர். சீர் பெரும் பூதூர் – அழகு மிக்க ஸ்ரீபெரும்பூதூர், முனிவன் – மனனம் செய்யும் இராமாநுசர், திருவடிகள் வாழியே – இரு திருவடிகள் வாழ வேண்டும்.

**சிறப்புரை**

(*அத்திகிரி அருளாளர் அடி பணிந்தோன் வாழியே!*) ஹஸ்திகிரி மஹாத்ம்யத்தில் முதல் அத்யாயத்தில், *"திங்நாகைர்ரச்சிதஸ் தஸ்மிந் புரா விஷ்ணுஸ் ஸநாதந: ததோ ஹஸ்திகிரிர் நாம க்யாதிராஸீத் மஹாகிரே:"* என்கிறபடியே முற்காலத்தில் திக்கஜங்கள் வந்து திருமலையாகிய காஞ்சியிலே எம்பெருமானை ஆராதித்ததனால் ஹஸ்திகிரி என்று திருநாமமாயிற்று என்பர். மேலும், இந்திரனது யானையாகிய ஐராவதம் நெடுநாள் தவம் செய்து மலை

வடிவம் கொண்டு எம்பெருமானைத் தரிசித்ததால் அம்மலைக்கு ஹஸ்திகிரி என்று வடமொழியிலும், அத்திகிரி என்று தமிழிலும் அமைந்தது காண்க. வரதராஜஸ்தவத்தில் முதல் சுலோகத்தில் *''ஸ்வஸ்தி ஹஸ்திகிரிம்''* என்று கூரத்தாழ்வான் அருளியது காண்க. கோயில், திருமலை, பெருமாள் கோயில் சிறப்பாகக் கூறப்படுகின்ற மூன்று திவ்ய தேசங்களில் ஈற்றுத்தலம் இது. தியாக மண்டபம் எனப்படும், நெடுநாள் தவம் செய்தும் மனத்தூய்மை பெறாத பிரமன் ஆகாயவாணி கூறியபடி பூலோகத்தில் புண்ணிய க்ஷேத்ரங்கள் எல்லாவற்றுள்ளும் உத்தமமானதும், ஒன்று ஆயிரமாகப் பயன் தருவதுமாகிய ஸத்ய வ்ரத க்ஷேத்ரத்தை அடைந்தார். அங்கு அனந்தகுளத்தின் கரையிலுள்ள அத்திகிரியை உத்தரவேதியாகக் கொண்டு யாக சாலையை அமைத்தார். அசுவமேத யாகம் செய்தார். அதனால் ஸ்ரீமந் நாராயணனை ஆராதிக்க, அந்த யாகாக்னியிலிருந்து எழுந்த புண்ணியகோடி விமானத்தில் தேவராஜனான திருமால் தோன்றினார் என்றும், அந்த வரதராஜ ஸ்வாமியை பின்னர் கஜேந்த்ராழ்வான் பூசித்து முதலையினால் உண்டான துன்பம் தீர்ந்து மேன்மை பெற்றது என்றும், தெய்வத்தச்சனில் ஒருவனான மயன், பிரமன் கட்டளைப்படி அங்கு எம்பெருமானுக்கு கோயில் கட்டினான் என்றும் அறிக.

அருளாளர் –தேவப்பெருமாள். அவர் அடி பணிந்தவர் இராமாநுஜர். அது எங்ஙனேயென்னில் *''காண்தகு தோளண்ணல் தென் அத்தியூரர் கழலிணைக் கீழ்ப்பூண்ட அன்பாளன் இராமாநுசன்''* என்று அமுதனார் அருளியபடியே, யாதவப்ரகாசரின் கங்காயாத்ர காரணம் அறிந்த இராமாநுசர் விந்த்யப்ரதேசத்திலிருந்து தனியே வரும்போது தேவப் பெருமாள் மனைவியுடன் வில்லியாய் காஞ்சீபுரத்துக்குத் துணையாக வந்து புண்யகோடி விமானத்தைக் காட்டிக் கொடுக்க, காஞ்சியிலே தாமே தலைவனுமான பேரருளாளனின் தூய்மையும் இனிமையுமுடைய ஒன்றுக்கொன்று ஒப்பான இரு திருவடிகளின் கீழே பிணிப்புண்ட பக்தி உடையவரானார் இராமாநுசர். இதுபற்றியே *''அடி பணிந்தோன்''* என்றபடி. அத்தகைய பெருமை பெற்ற இராமாநுசர் வாழ்க.

(அருட்கச்சி நம்பி உரை ஆறு பெற்றோன் வாழியே) அருட்கச்சி நம்பி – தேவப் பெருமாள் அருள் பெற்றதால் திருக்கச்சி நம்பி "அருள்கச்சி நம்பி" ஆனார். உரை ஆறு – ஆறு வார்த்தைகள். தேவப்பெருமாளோடு பேசும் பாக்கியம் பெற்ற நம்பிகளிடம் இராமாநுசர் தமக்குள்ள சந்தேகங்களைத் தேவப்பெருமாளிடம் விண்ணப்பித்து இவற்றுக்கு உரிய விடையைக் கேட்டு தமக்கு அருள வேண்டினார். இராமாநுசருக்கு ஏற்பட்ட சந்தேகங்கள் ஆறு. அவையாவன – எந்த தேவதை பரம்பொருள்? நம் மதத்தில் பரமனும் ஜீவனும் ஒன்றா அல்லது வேறா? மோக்ஷம் அடைய வழி பக்தியா அல்லது ப்ரபத்தியா? இந்த உடலை விடும்போது ஜீவன் எம்பெருமானை நினைக்க வேண்டுமா அல்லது நினைக்காமலும் வீடுபேறு பெறலாமா? இந்த உடல் நீங்கியவுடன் மோக்ஷம் உண்டாகுமா அல்லது பல பிறவிகள் வேண்டுமா? யாரை தாம் ஆசார்யராகப் பற்ற வேண்டும்? என்பதாகும். இதற்கு பேரருளாளர் நம்பிகளிடம் அருளிய விடைகள் ஆறு –

1) *"அஹமேவ பரம் தத்வம்"* – ஸ்ரீமந்நாராயணனாகிய நாமே பரம்பொருள். சிவனுமல்லன், பிரமனுமல்லன்.
2) *''தர்சனம் பேத ஏவ ச''* – நமது மதத்தில் பரமாத்மாவும் ஜீவாத்மாவும் வேறு வேறு பொருள்கள். ஒன்றன்று.
3) *"உபாயேஷு ப்ரபத்தி ஸ்யாத்"* – வீடுபேறு பெற வழி ப்ரபத்தியே. பக்தி முதலியவையல்ல.
4) *''அந்திமஸ்ம்ருதி வர்ஜனம்''* – ப்ரபத்தியை உபாயமாகக் கொண்டவர்கள் இந்த உடலை விடும்போது பரமாத்மாவை நினைத்தே தீர வேண்டிய அவசியமில்லை. நினையாவிடிலும் மோக்ஷமுண்டாம்.
5) *"தேஹாவஸானே முக்தி: ஸ்யாத்:"* – ப்ரபத்தியை உபாயமாகக் கொண்டவர்கள் இந்த உடல் கழிந்தவுடனே முக்தி பெறுவர். பல பிறப்புக்கள் பிறக்க வேண்டாம்.
6) *''பூர்ணாசார்ய ஸமாச்ரய':'* – ஆளவந்தார் சீடரான பெரிய நம்பிகளை ஆசார்யனாகப் பற்ற வேண்டும்.

இந்த ஆறு வார்த்தைகளைப் பேரருளாளரிடம் இருந்து பெற்று இராமாநுசருக்கு சொன்னமையால் *"நம்பி உரை ஆறு பெற்றோன்"* என்றபடி.

*இராமாநுஜர் வாழித்திருநாம உரை தொடரும்...*



# புரந்தர தாசர் கீர்த்தனைகளில் ஸ்ரீபத்மாவதி தாயார்

- திருமதி ஹேமா, திருப்பதி. 9884347886.

கன்னட கவியான ஸ்ரீபுரந்தரதாசர் கன்னட மொழியில் மஹாலக்ஷ்மித் தாயாரைப் போற்றிப் பல கீர்த்தனைகளை இயற்றியுள்ளார்.

*பாரம்மா மனகே மஹாலக்ஷ்மி பாதும யொதே ஸ்ரீவிஷ்ணு பத்னி*
*மார ஜனகா பட்டத ராணி துளசம்மபு மரதரே யாஹே பேளேலே தாயி*

*க்ருதயுகதல்லி ஸ்ரீவிஷ்ணுபத்னி த்ரேதாயுகதல்லி ராமபத்னி*
*துவாபரயுகதல்லி ருக்மிணி எந்தெவெ கலியுகதல்லி பத்மாவதியே நம்மம்மா...*

என்ற பாடலில் புரந்தர தாசர், சொல்லாலும், செயலாலும் தன் பதியான திருமாலுக்கு மரியாதை தருபவள் ஸ்ரீவிஷ்ணு பத்னியான ஸ்ரீமஹாலக்ஷ்மி. ஜகத்பதியான நாராயணனின் பட்டத்து ராணியான தாயே என்னை மறப்பது எப்படி சாத்தியம் சொல் என மன்றாடுகிறார்.


கிருத யுகத்தில் ஸ்ரீவிஷ்ணுபத்னியாகவும், திரேதா யுகத்தில் ஸ்ரீராமருக்கு சீதா தேவியாகவும், துவாபர யுகத்தில் ஸ்ரீகிருஷ்ணருக்கு ருக்மிணி தேவியாகவும், கலியுகத்தில் திருவேங்கடவனுக்கு பத்மாவதியாகவும் நீ இருக்கின்றாய் என்றும், அஷ்ட தள தாமரை மலரில் எந்நேரமும் வீற்றிருக்கும் தாயே நீயே உன்னதமானவள், சிறந்தவள், கிருஷ்ண பக்தரான நான் மனதார துதிக்கின்றேன் என் விருப்பங்களை எல்லாம் நிறைவேற்று தாயே எனப் போற்றுகிறார்.

நான் செய்யும் தவறுகளை எல்லாம் மன்னித்து, உன் திருவுள்ளத்தில் எதையும் வைத்துக் கொள்ளாமல் எனக்கு தயை புரிந்து காத்தருள வேண்டும் என புரந்தரதாசர் தாயாரைப் போற்றுகிறார்.

*ஏனு தன்யனஓ லகுமி எந்தா மான்யளோ*
*சானு ராகதிந்தா ஹரிய தானே சேவே மாடுதிஹளு...*

பக்தர்களால் போற்றப்படுபவளே, புண்ணியவதியான ஸ்ரீமஹாலக்ஷ்மித் தாயார் தன் ஸ்ரீய:பதியான நாராயணனுக்கு எல்லா நேரங்களிலும் சேவை சாதிப்பவளே, கோடானகோடி பக்தர்களின் கோரிக்கைகள், விருப்பங்களை ஸ்ரீஹரிக்கு சமர்ப்பிப்பவளே என்று போற்றிப் பாடுகிறார்.

சத்திரம், சாமரம், சிம்மாசனம் போன்ற பல ரூபங்களில் தாயாக நீ இருந்து ஸ்ரீஹரியின் நித்ய சேவை செய்யும் மஹாலக்ஷ்மித் தாயே, எல்லா இடங்களிலும் நிறைந்து இருப்பவளே, தோஷங்கள் அற்றவளே உன்னை இந்த புரந்தர தாசன் போற்றுகின்றேன்.



*அரவிந்தாலயே தாயே*

*சரணு ஹொக கெனுகாயே சிரிரமனை பரிய ஜன்மாதே...*

அரவிந்தா என்று அன்புடன் அழைக்கப்படும் ஸ்ரீஹரியின் இதய கமலத்தில் வசிப்பவளே, தாயே நீயே எனக்கு கதி. உன்னை அன்றி நான் யாரிடம் சரணடைவேன் என்ற பொருள் கொண்டு தாயாரிடம் சரணடைந்து தன்னைக் காக்குமாறு வேண்டுகிறார் தாசர்.

கமலங்கள் என்ற தாமரை மலர்களின் நறுமணம் உடையவளே, தாமரை போன்ற கண்களை உடையவளே, எந்நேரத்திலும் ஸ்ரீஹரிக்கு பாதசேவை புரிபவளே தாயே என்னைக் காப்பாற்று.உன்னுடைய கருணை கடாக்ஷத்தால் என் உள்ளத்தில் குடி கொண்டவளே, பிரம்மாதி தேவர்களால் பூஜிக்கப்படுபவளே, ஸ்ரீஹரியே தனது இதய சிம்மாசனத்தில் குடிகொண்டவளான தாயே தன்னை ஒருபொழுதும் மறந்து விட வேண்டாம் என உருகுகிறார் புரந்தரதாசர். இவ்வாறாக லக்ஷ்மி நாராயணர் மீது பல கீர்த்தனைகள் பாடிய புரந்தர தாசரைப் போற்றி வணங்குவோம்.



# வாமன நம்பி

**இந்திரன் முதலிய தேவர்கள், துர்வாசரின் சாபத்தால் நாடுநலன் இழந்து, மாவலி எனும் அசுரன் மூவுலகையும் கவர்ந்தான். அசுரன் ஆட்சியில் தேவர்கள் தோல்வியில் துவண்டனர். ஆள்வலி, தோள்வலி, வாள்வலி மிக்க அரசர் கூட்டத்தை அறிவு, சூழ்ச்சி, வஞ்சனை கொண்டே வெல்லலாகும் என எடுத்துக் காட்ட பகவான் வாமன உருவில் காசிபர் அதிதிக்கு ஓர் மகவாயா "ஆலமர் வித்தின் அருங்குறள் ஆனான்".**

*"தொழுநீர் வடிவில் குறளுருவாய் வந்து தோன்றி மாவலிபால் முழுநீர் வையம் முன்கொண்ட மூவா உருவின் அம்மானை"* **இப்பதிக ஐந்தாம் பாசுரத்தில் நமக்கு அறிமுகம் செய்கிறார்.**

*"மாயக்கூத்தா, வாமனா!"* **என்று, இராமா, கிருஷ்ணா அவதாரங்களுக்கு அடுத்தபடியில் வைத்து அடிக்கடி வாமனனின் திருவிக்கிரமச் செயல்களை ஆழ்வார்கள் அனைவருமே அனுபவிப்பர். திருக்கோவலூர் திருவிக்ரமன் சந்நிதியில் முதலாழ்வார்கள் திருவாக்கில் அவதரித்த அந்தாதிகள் மூன்றிலுமே வாமனவதாரச் செயல் சிறப்பிடம் பெறுகிறது.** *"வருக! வருக! வருக இங்கே வாமன நம்பீ! வருக இங்கே"* **என்று அழைத்து பெரியாழ்வார்,**

*"சிறியன் என்று என் இளஞ் சிங்கத்தை இகழேல் கண்டாய்*
*சிறுமையின் வார்த்தையை மாவலியிடைச் சென்று கேள்"*

**என்று வாமனச் சிறுமையின் பெருமையை அறிய அம்புலியை மாவலியிடம் அனுப்புகிறார்.** *"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடினால்", "தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பொழியும்"* **என்கிறாள் ஆண்டாள்.**

*"ஏறனைப் பூவனைப் பூமகள் தன்னை*
*வேறின்றி விண்தொழத் தன்னுள் வைத்து*
*மேல் தன்னை மீதிட நிமிர்ந்து மண்கொண்ட*
*மால்தனில் மிக்கும் ஓர் தேவும் உளதே?"*

**என்று பரத்துவம் கூறுகிறார் நம்மாழ்வார்.**

*"ஒண்மிதியில் புனல் உருவி ஒருகால் நிற்ப*
*ஒருகாலும் காமருசீர் அவுணன் உள்ளத்து*
*எண் மதியும் கடந்து, அண்ட மீது போகி*
*இரு விசும்பினூடு போய் எழுந்து - மேலைத்*
*தன் மதியும் கதிரவனும் தவிர ஓடித்*
*தாரணியின் புறம் தடவி அப்பால் மிக்கு*
*மண் முழுதும் அகப்படுத்த நின்ற எந்தை*
*மலர் புரையும் திருவடியே வணங்கினேனே"*

**என்று வாமன உருவில் வந்த, திருவிக்ரமனாய் வளர்ந்த அவதாரச் செயலை விவரிக்கிறார் கலியன்.**

**தசாவதாரப் பெருமாள்!**

*நன்றி : பகவத் விஷய கட்டுரைகள் (பாகம்-1)*

ஒருநாள் நான் என் அலுவலகத்தில் மாடிப்படியிலிருந்து இறங்கும் பொழுது கால்தடுமாறி கீழே உருண்டு விழுந்து விட்டேன். பலமாக அடிபட்டுவிட்டது. கால் எலும்பில் விரிசல். கட்டுப்போட்ட காலுடன் வீட்டிற்கு வந்த என்னைப் பார்த்து என் மனைவி பதறிப்போய் விட்டாள். உடனே, சாமி அறையில் தீபம் ஏற்றிச் சாமி கும்பிட்டுக் கொண்டே, அவள் ஏதோ வேண்டிக் கொள்வதைப் பார்த்த நான், என்ன? என்று கேட்டதற்கு அவள் பதில் சொல்லவில்லை.

சில நாட்களில் என் கால் பூரண குண மாகி விட்டது. உடம்பும் தேறி விட்டது. அப்பொழுதிலிருந்து என் மனைவி என்னை நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள். "வாருங்கள், திருப்பதிக்குப் போகலாம்" என்று. பிறகுதான் தெரிந்தது, என் கால் குணமானதும், திருப்பதிக்கு வந்து தரிசனம் செய்து திருமாங்கல்யத்தை உண்டியலில் செலுத்துவதாக அவள் பிரார்த்தனை செய்த விஷயமும், அதுவும் படியேறி நடந்தே வருவதாகவும் அவளது கோரிக்கை என்பதை உணர்ந்தேன்.

இப்படியாக வேண்டுதல் பிரார்த்தனை செலுத்துவதற்காக நாங்கள் இருவரும் ஒரு நாள் இரவு 10 மணி அளவில் திருப்பதிக்கு பேருந்து ஏறினோம். காலை நேரத்தில் திருப்பதி சென்றடைந்தோம். பேருந்து நிலையத்தில் இறங்கி நடக்க ஆரம்பித்தோம். அங்கிருந்து மலை அடிவாரத்திற்குப் போகும் வழியில், கபில தீர்த்தம் என்கிற ஆழ்வார் தீர்த்தத்தில் நீராடி, கபிலேஸ்வர ஸ்வாமியைத் தரிசித்து விட்டு நடக்கத் தொடங்கினோம்.

நாங்கள் அடிவாரத்தினை அடைவதற்குள், எதிரே வந்த சிலர், நாங்கள் நடக்கும் விதத்தைப் பார்த்து, கிண்டலாக, "உங்களால் மலையேற முடியாது. பேசாமல் திரும்பச் சென்று விடுங்கள்" என்று சொன்னார்கள். அவர்கள் பேச்சைக் கேட்ட எனக்குப் பயம் பிடித்துக் கொண்டது. அப்பொழுது மலையேறும் முன்பாக மலையடிவாரத்தில் உள்ள கருடாழ்வார் சிலையை வலம் வந்து வணங்கிவிட்டு, பிறகு மலைமேல் செல்லும் பேருந்தில் இப்போதைக்கு மேலே சென்று தரிசனம் செய்து விடலாம். அடுத்த முறை வரும் போது படி ஏறிப் போகலாம் என்று யோசித்து, இருவரும் கருடாழ்வார் சிலையை வலம் வரத் தொடங்கினோம்.


சுற்றி வந்து பார்த்தபொழுது, ஒரு இளம் வயது தம்பதி அங்கே நின்று கொண்டிருந்தார்கள். சமீபத்தில் தான் அவர்களுக்குத் திருமணம் நடந்து முடிந்தது போல தோன்றியது. அவர்கள் எங்களைப் பார்த்து "என்ன மலை ஏறப் போகிறீர்களா? நாங்களும் அதற்குத்தான் வந்திருக்கிறோம். உங்களுக்கு நாங்கள் துணை. எங்களுக்கு நீங்கள் துணை" என்றனர்.

அப்பொழுது நான் எங்கள் இயலாமையைப் பற்றி எடுத்துச் சொன்னேன். அதற்கு அவர்கள், "பரவாயில்லை. மெதுவாகவே ஏறலாம். இவ்வளவு தூரம் வந்தாகி விட்டது. பாதியில்



# திருவேங்கடவனின் திருலீலை

- திரு. ஆர். கோவிந்தராஜன், சேலம்.




டோலாயாம் சல டோலாயாம்
ஹரே டோலாயாம்
மீன கூர்ம வராஹ முரகபதி
அவதாரா
தான வாரே குணசௌரீ
தரணிதர மருஜனக (டோலா)
வாமன ராம ராம வரக்ருஷ்ண
அவதாரா
ஸ்யாமலாங்க ரங்க ரங்க சமஜ
வரத முரஹரண (டோலா)
நாரத புத்த கலிகி தசவித
அவதாரா
ஸீரபாணி கோசமானே
ஸ்ரீவெங்கடகிரி கூடநிலய
(டோலா)

– அன்னமய்யா

விடக்கூடாது. வாருங்கள், போகலாம்” என்று வற்புறுத்திச் சொன்னார்கள்.

அவ்வாறே மெல்ல மெல்ல மலை ஏற ஆரம்பித்தோம். மாலை சுமார் 3 மணி அளவில் திருமலையைச் சென்று அடைந்தோம். தங்குவதற்காக இரண்டு பக்கத்துப் பக்கத்து அறைகளை வாடகைக்கு எடுத்துக் கொண்டோம்.

அப்போது, என் மனைவிக்கு பலமான குளிர் காய்ச்சல் ஏற்பட்டு விட்டது. இது தெரிந்ததும், எங்கள் வழித்துணை வாலிபர், என்னை அழைத்துக் கொண்டு பேருந்து நிலையத்திற்கு அருகே இருந்த ஒரு சிறிய மருந்துக் கடையில் காய்ச்சலுக்கான மாத்திரை வாங்கிக் கொடுத்தார். பிறகு என் மனைவியிடம் “ஒன்றும் பயப்படாதீர்கள். உடனே நன்றாக ஆகி விடும். நீங்கள் அறையைச் சாத்திக் கொண்டு படுங்கள். பிறகு தரிசனத்திற்குச் செல்லலாம்” என்றனர். நாங்களும் படுத்து தூங்கி விட்டோம். திடீரென்று கண் விழித்து பார்த்தால் பக்கத்து அறை பூட்டி இருந்தது.

அவர்கள் சாமி தரிசனத்திற்குக் கிளம்பி விட்டார்கள் போல என எண்ணி நானும் என் மனைவியும் தரிசனத்திற்குச் சென்றபோதும் அந்த அறை பூட்டியே இருந்தது.

மிகவும் திவ்வியமான தரிசனம் பார்த்து விட்டு, பிரசாதம் எல்லாம் உண்டு மகிழ்ந்த பின் அறைக்குத் திரும்பினோம். அப்போது கூட பக்கத்து அறை பூட்டியே இருந்தது. எங்களுக்கு அன்று மாலையே பேருந்து. அதுவரை எங்களுக்கு வழித்துணையாக வந்த அந்தத் தம்பதியினர் கண்ணிலேயே காணவில்லை. யார் அவர்கள் இந்த கேள்விக்கு விடை காணும் பொறுப்பினை நான் உங்களுக்கே விட்டுவிடுகிறேன்.

அப்போது தெய்வம் மனித உருவில் வந்து உதவி செய்யும் என்ற வார்த்தை நினைவுக்கு வந்தது. இந்தச் சம்பவத்தை எப்போது நினைத்தாலும் உடல் புல்லரிக்கிறது. நெஞ்சம் நெகிழ்கிறது.

## குறுக்கெழுத்துப்புதிர் 102க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வை | ந | தே | ய | ன் | ட | ரு | க | ல் | 2 க | | 3 க |
| | | டி | 4 க | வா | 5 பெ | ல் | 6 வி | ன | தை | | ரு |
| | ஜா | வ | ரு | க | ரி | க | ண | | ன் | | ட |
| டி | ரா | ரு | டோ | ப | ய | ங் | ஷ் | | க | | மு |
| கு | க்ஷி | தி | த் | ண | தி | த | 7 வை | சே | ட | ரு | 8 க |
| ங் | 9 ப | ய | கா | ஷ் | ரு | த் | | | கோ | | ம் |
| ண | | றி | ர | ரு | வ | ரு | | 10 ம | க் | 11 த | |
| ண் | | 12 சி | ம் | 13 கி | டி | 14 தி | | ந் | ர் | ர் | |
| க | 15 ரு | த் | ரா | சு | கீ | ர் | த் | தி | 16 கா | பை | ன் |
| க் | | ர் | ப | ய | ஸ் | 17 கா | | ர | | ப் | ண |
| ரு | 18 க | ரு | ட | வி | யூ | க | ம் | ம | | பு | ரு |
| 19 தி | ம் | ண | ரா | பு | ட | ரு | 20 க | லை | | ல் | 21 அ |



# ஜனவரி 2025
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

தொழில் துறையில் விருத்தியும், வருமானமும் உண்டு. குடும்பத்தில் சுபகாரியங்கள் தடையின்றி நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். பெற்றோரின் ஆரோக்கியம் மேம்படும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தொழில் அலைச்சல் காரணமாக தூக்கம் குறையும். மனைவி, குழந்தைகளால் இல்லத்தில் சந்தோஷம் உண்டு. மொத்தத்தில் யோகமான மாதமிது.

**ரிஷபம்**

தொழில் துறையில் இருந்த அலைச்சல் குறையும். குடும்ப ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. மூத்த சகோதரரின் ஆதரவு குறையும். கணவன் மனைவிக்குள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது உத்தமம். புதிய தொழில் முயற்சிகளைச் செய்யலாம். அதற்குரிய பண வருவாய் கிடைக்கும். ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை காட்ட வேண்டிய மாதமிது.

**மிதுனம்**

குடும்பத்தில் இருந்த மருத்துவச் செலவுகள் குறையும். கணவன் மனைவியிடையே இருந்த பிரச்சனைகள் தீரும். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். பெற்றோரின் ஆரோக்கியம் மேம்படும். சகோதரர்களால் தன லாபம் உண்டு. பூர்வீகச் சொத்துகள் கிடைக்கும். தொழிலில் அலைச்சலும், வளர்ச்சியும் கலந்து இருக்கும். முயற்சியால் வெற்றி பெறும் மாதமிது.

**கடகம்**

அஷ்டமச் சனியின் தாக்கம் குறையும். ஆரோக்கியத்தில் இருந்த குறைபாடுகளுக்கு நல்ல மருத்துவம் கிடைக்கும். குடும்பத்தில் விரைவில் சுப காரியங்கள் நடக்கும். சகோதர ஒற்றுமை மேம்படும். வீடு, மனை, புது வாகனம், ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. மனைவியின் ஆரோக்கியத்தில் மட்டும் சிறிது அக்கறை தேவை. புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும் மாதமிது.

**சிம்மம்**

திடீர் தன வரவு உண்டு. குடும்ப சூழ்நிலை நன்றாக இருக்கும். திருஷ்டி குறையும். தொழிலில் எதிர்பார்த்த நல்ல மாற்றம் கிடைக்கும். வீண் செலவுகள் குறையும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். ஆரோக்கிய குறைபாடு நீங்கும். மனைவியால் அனுகூலம் உண்டு. உறவினர்கள், நண்பர்கள் உதவுவர். தன் சுய முயற்சியாலும், புத்திசாலித்தனத்தாலும் முன்னேறும் மாதமிது.

**கன்னி**

தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். குழந்தைகளின் ஆரோக்கியம் நன்றாக அமையும். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். மூத்த சகோதரருக்கு ஆரோக்கியக் குறைவு உண்டு. உறவினர்கள், நண்பர்கள் உதவுவர். தெய்வத் தலங்களுக்கு யாத்திரை செய்து நல்ல தரிசனம் கிடைக்கப் பெறுவீர். மொத்தத்தில் நல்ல யோகமான மாதமிது

**துலாம்**

ஆரோக்கியத்திலும், பண விரயத்திலும் மிகுந்த அக்கறை தேவை. வெளி இடங்களில் உணவு உட்கொள்வதை முற்றிலுமாகத் தவிர்க்கவும். மாணவர்கள் நல்ல ஊக்கத்துடன் படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். புதிய முயற்சிகளில் தாமதமாக வெற்றி கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். மிகுந்த முயற்சியின் மூலம் வெற்றி பெறும் மாதமிது.

**விருச்சிகம்**

தொழில் துறையில் புதிய முயற்சிகள் செய்யலாம். தெய்வ அனுக்கிரகம் முழுமையாக உண்டு. குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை உருவாகும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். நண்பர்கள், உறவினர்கள் நன்மைகள் செய்வர். பெற்றோரின் பரிபூரண ஆசி கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். முழுமையான நன்மைகள் பெறும் மாதமிது.

**தனுசு**

பூர்வீகச் சொத்துக்கள் குறித்து தற்சமயம் பேச வேண்டாம். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. மிகவும் கவனித்துப் படித்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். கடன் வாங்கிச் சுபச் செலவுகள் செய்யலாம். கடன் கொடுப்பதையும், பிறருக்கு ஜாமின் போடுவதையும் தவிர்ப்பது நல்லது. மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய மாதமிது.

**மகரம்**

புதிய தொழில் முயற்சிகள் தொடங்கலாம். நல்ல வேலையாட்கள் அமைவர். உத்தியோகத்தில் பதவி உயர்வு உண்டு. தொழில் துறையில் பண வருவாய் அதிகரிக்கும். மனைவியின் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. புதிதாக வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. குடும்பத்தில் விரைவில் சுப காரியங்கள் நடக்கும். வெகுகாலம் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கும் மாதமிது.

**கும்பம்**

வேலைப்பளு குறையும். ஆரோக்கியத்தில் இருந்த குறைபாடுகளுக்கு நல்ல மருத்துவம் கிடைக்கும். புதிய தொழில் முயற்சிகள் செய்யலாம். குடும்பத்தில் உறவினர்கள் வருகை அதிகரிக்கும். மற்றவர்கள் பேசும் போது கோபத்தைத் தவிர்ப்பது நல்லது. பிறப்பு ஜாதகத்தில் உள்ள தோஷங்களுக்குப் பரிகாரம் செய்ய வேண்டிய மாதமிது. கடன் சுமைகள் குறைந்து நன்மை பெறுவீர்.

**மீனம்**


தொழில் துறையில் புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். வீடு, மனை, வாகனம் பழுதுகளைச் சரி செய்ய முயற்சிக்கலாம். ஆரோக்கியக் குறைபாடுகள் நீங்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. நல்லோர்களின் நட்பு கிடைக்கும். செலவிற்கேற்ற வருமானம் உண்டு. மாணவர்கள் அக்கறையுடன் படித்தல் வேண்டும். முயற்சியால் முன்னேறும் மாதமிது.

சிறுவர் உலகம்

# பல்சுவை பகுதி

## சித்திரப் பகுதி

### எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்



### படத்தைப் பாருங்கள் !






*கீழே குறிப்பிட்ட பண்டிகை மற்றும் பருவ தினங்களுக்குப் பொருத்தமான சித்திரங்களுக்குரிய வட்டத்தில் அந்தந்த எண்களை எழுதுங்கள்*


அ) ஸ்ரீமஹாவிஷ்ணுவுடன் தொடர்புடையவை
ஆ) கோதையுடன் தொடர்புடையவை
இ) பொங்கலுடன் தொடர்புடையவை



விடைகள் : அ = 2,4,6,8; ஆ = 7,5,9,10; இ = 1,3,11,12

### சரியான பாதையைக் கண்டுபிடி

சிறுவன் கையில் இருந்த பட்டம் கீழே விழுந்து விட்டது. எவ்வழியில் சென்றால் சிறுவன் கையில் கிடைக்கும்?




விடை : (1)

### வார்த்தைகளைச் சரியாக எழுதி ஔவை அருளிய "ஆத்திசூடி"யைப் படிப்போமா!

கடைபிடி நன்மை, ஒப்பன நாடு செய்.
பிரியேல் நிலையில், விளையாடேல் நீர்,
முகரேல் முன்மை, பல நூல் கல், பயிர்
நெல் விளை, பட நேர் ஒழுகு.

நன்மை கடைபிடி, நாடு ஒப்பன
செய்,நிலையில் பிரியேல், நீர்
விளையாடேல், முன்மை முகரேல்,
நூல் பல கல், நெல் பயிர் விளை,
நேர்பட ஒழுகு.




திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-30



**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. திருமழிசையாழ்வார் அவதரித்த மாதம் நட்சத்திரம்.........................................
2. பத்தராவிப் பெருமான் அருள்புரியும் திவ்ய தேசம் .........................................
3. பூலோக வைகுந்தம் எனப் போற்றப்படும் திவ்ய தேசம் .........................................
4. காவிரி சூழ் திருவரங்கத்தில் பள்ளி கொண்டிருப்பவர் .........................................
5. அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி எனப் பாசுரமிட்டவர் .........................................
6. ஆடல்வல்லானான நடராஜப் பெருமானின் திருநட்சத்திரம் .........................................
7. அத்திகிரி பெருமானோடு பேசும் பாக்கியம் பெற்றவர் .........................................
8. இராமாவதாரத்தில் ஏழு மரங்களை ஒரே அம்பினால் துளையிட்டவர் .........................................
9. திருநின்றவூர் திவ்ய தேசத் தாயாரை கடலரசன் என்னவென்று அழைத்தான் .........................................
10. இந்திரனுக்குரிய பண்டிகையாகக் கொண்டாடப்படுவது .........................................
11. கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா என்று ஆண்டாள் யாரைக் குறிப்பிடுகிறாள் .........................................
12. கிருஷ்ணர் கைத்தலம் பற்றக் கனாக் கண்டவர் யார் .........................................
13. தியாகராஜர் ஆராதனை நடைபெறும் திதி.........................................
14. அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்று கூறியவர் .........................................
15. வாரணமாயிரம் அருளிச் செய்த ஆழ்வார் .........................................

## போட்டிக்கான நிபந்தனைகள்





- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.01.2025.

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |



## சக்கரத்தைச் சுற்றுங்கள்!

### அதே வண்ணக்கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!

ஆண்டாள் யாருடைய அம்சம்

கோதை யாருடைய புதல்வி

ஆண்டாள் அவதரித்த வனம்

ஆண்டாள் அவதரித்த ஊரின் பெயர்

ஆண்டாள் அருளிய 30 பாசுரங்கள் நிறைந்த நூல்

வாரணமாயிரம் அருளிச் செய்தவர்

ஆண்டாள் கனவில் வந்த பெருமாள்

பெருமாளுக்கு மாலையைச் சூடிக் கொடுத்தவள்





**விடைகள்**

1) பூமிப்பிராட்டி, 2)பெரியாழ்வார், 3) துளசி வனம், 4) திருவில்லிபுத்தூர்,
5) திருப்பாவை, 6) கோதை நாச்சியார், 7) ஸ்ரீகிருஷ்ணர், 8) ஆண்டாள்.

## கணித விளையாட்டு





இங்கு நிறைய சாவிகள் உள்ளன. அதில் பூட்டில் உள்ள கணித விடைக்கு பொருத்தமான சாவியைப் பொருத்துக

**விடைகள்**

1) ii, 2) i, 3) v, 4) iii, 5) iv

*சித்திரத்தை வரிசைப்படுத்துங்கள், கதையை அறிந்துக் கொண்டு கதை உணர்த்தும் நீதியை பின்பற்றுங்கள்!*

நீதியை அறிவோம்!




நீதி : நாம் செய்யும் உதவி நம்மைக் காக்கும்

( சித்திரத்தின் வரிசை : 1,2,5,3,4)




# பொங்கல் கொண்டாட்டம்

சித்திரக் கதை


கதை மூலம் : திரு. கோ.வே. அப்பலாசாரியலு
சித்திரம் : திரு. கே.வி.கோடி லிங்காசாரி

தெலுங்கு மாநிலத்தின் ஒரு கிராமத்தில் பொங்கல் கொண்டாட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. கொண்டாட்டங்களைக் கண்ட ஒரு சிறுமி தன் பாட்டியிடம் கீழ்க்காணும்படி சந்தேகங்களைக் கேட்டறிந்தாள்.



பாட்டி! இங்கு பெரிய பெரிய கோலங்கள் இட்டு அதில் மாட்டு சாணம் ஏன் வைத்துள்ளனர்?

தங்கமே! அவை தேவதைகள் கொலுவிருக்கும் கொப்பி (மாட்டு சாண உருண்டை) தேவதைகள். வீட்டு வாசலில் கோலமிடுதல் லக்ஷ்மிகரம்.



பாட்டி, வாயில்படியில் மாவிலை மற்றும் மலர் தோரணங்கள் கட்டியுள்ளனரே?

செல்லமே! இது மார்கழி மாதம் அல்லவா! லக்ஷ்மி தேவியை இல்லங்கள் தோறும் வரவேற்கவே மலர்மாலைகள் தோரணங்கள் கட்டுவர்.



எருதுகள் தன் மேல் துணிகளை போர்த்திக் கொண்டு ஆடுகின்றதே ஏன்?

அன்பு பேத்தியே! அது பூம்பூம் மாடு.



பாட்டி, காலையில் ஏனோ கானம் இசைத்துக்கொண்டு சிலர் வந்தனர். இப்பொழுது என்னமோ பூம்பூம் மாடுகள் வருகின்றனவே!



தங்க தாமரையே! சங்கராந்தி பண்டிகை மூன்று நாட்கள் நடைபெறுகின்ற பெரிய பண்டிகை. எல்லாவிதமான விவசாயப் பொருட்களும் விளைந்து வீட்டிற்கு வரும் நாளாகும்.



பூம்பூம்மாட்டுக்காரர்கள், ஹரிதாசர்கள், குடுகுடுப்பைக்காரர்கள், ஜங்கம தேவர்கள் என பலவிதமானவர்கள் இந்த சங்கராந்தி பண்டிகைக்கு மட்டும் வருவார்கள்



PURNA KOTTI 7.12-24
இந்த பண்டிகை நாளில் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் இவர்களுக்கு தானியங்களை அளித்திடுவர். ஹரிதாசர்களுக்கு செய்யும் தானத்தி னால் ஸ்ரீஹரியும் மகிழ்ந்திடுவார் என பெரியோர் கூறுவர்.
எதற்காக பாட்டி விடியற்காலையில் தீமூட்டுகின்றனர்?
இது போகித் தீ! பழையன கழிதலும் புதியன புகுதலும் எனும்படி தீமூட்டுவர். அதற்கு பின் எண்ணெய் தேய்த்து குளித்து புத்தாடைகள் அணிதல் வேண்டும்.
அன்று மாலை கன்னிப்பெண்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து பாடல்களைப் பாடி, கும்மி அடித்து, நடனம் புரிந்து மகிழ்வர்.கோலத்தின் நடுவில் வைக்கும் கொப்பியம்மா மங்களா கௌரி தேவியின் வடிவம்.
அதன் பிறகு 5 வயதிற்குட்பட்ட சிறார்களை உட்கார வைத்து, இலந்தை பழம் (போகிபண்டுலு), கரும்பு, காசுகள், இனிப்பு வகைகள் என பல பொருட்களை சுமங்கலிப் பெண்கள் வந்து குழந்தைகளின் தலையில் போட்டு மகிழ்வர். இது ஸ்ரீஹரியே ஆசிர்வதித்தது போன்றதாகும்.
பொங்கலன்று அந்தணர்களை அழைத்து அவர்களுக்கு விளைச்சலில் வந்த புது பூசணிக்காயை தானமாக வழங்குவது ஓர் வழக்கம்.
இன்று மாட்டுப் பொங்கல் என்பதால் கால்நடைகளை வணங்கிடுவர்.
ஓஹோ! அப்படியா பாட்டி. இந்த பொங்கல் கொண்டாட்டங்கள் மறக்க முடியாத மிக அற்புதமாக உள்ளனவே!

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/– ☐ ரூ.2,400/– (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசிது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

## தி.தி.தே. கால்சென்டர்

### உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும்
பணிபுரியும் எப்பொழுது
வேண்டுமானாலும்
நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

**தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :**
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/– ஆயுள்சந்தா ரூ.2,400/– (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.–யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Ph.D.,P.G.Dip in Ephigraphy, Dip. in Yoga on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.



18-11-2024 அன்று திருப்பதியில் தி.தி.தே. நிர்வாகக் கட்டிட வளாக மைதானத்தில் நடைபெற்ற கார்த்திகை தீபோத்ஸவ விழாவில் பங்கு கொண்ட பக்தர்கள், தி.தி.தே. உயர் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள்



03-12-2024 அன்று திருமலையில் க்யூ வரிசையைத் தனிக்கை செய்த தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. பி.ஆர். நாயுடு அவர்கள் உடன் பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர் திரு. பானுபிரகாஷ் ரெட்டி அவர்கள்



22-11-2024 அன்று திருமலையில் யாத்திரிகர்கள் வசதி கூடம் -3 இல் லாக்கர் வசதி துவக்கி வைத்த தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு. ஜெ. சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு. சிஎச். வெங்கய்யா சௌத்ரி ஐ.ஆர்.எஸ்.அவர்கள்



29-09-2024 அன்று தி.தி.தே. நிர்வாகக் கட்டிடத்தில் நடைபெற்ற உலக காதுகேளாதோர் தினம் மற்றும் உலக சைகை மொழி தின விழாவின் போது



03-12-2024 அன்று தி.தி.தே. சார்பில் நடைபெற்ற உலக மாற்றுத்திறனாளிகள் தின விழா. இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே. ஊழியர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-12-2024 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 5th of Every month.



ஈசாநாம் ஜகதோ(அ)ஸ்ய வேங்கடபதேர் விஷ்ணோ: பராம் ப்ரேயஸீம்
தத்வக்ஷஸ் ஸ்தல நித்ய வாஸ ரஸிகாம் தத்க்ஷாந்தி ஸம்வர்த்திநீம் ।
பத்மாலங்க்ருத பாணிபல்லவ யுகாம் பத்மாஸநஸ்தாம் ச்ரியம்
வாத்ஸல்யாதிகுணோஜ்ஜ்வலாம் பகவதீம் வந்தே ஜகந்மாதரம் ॥

– ஸ்ரீ வேங்கடேச ப்ரபத்தி